

பாரதிதாசன்
கவிதைகள்

# வாணிதாசன் கவிதைகள்

மலர் நிலையம்
133. பிராட்வே... சென்னை-1

முதற் பதிப்பு: ஆகஸ்ட்டு 1956
உரிமை ஆசிரியருக்கே

சாதாப் பதிப்பு விலை ரூ. 2—0—0
பரிசுப் பதிப்பு விலை ரூ. 2—8—0

அச்சிட்டோர்:
பாரதி பிரிண்டர்ஸ்
119, பிராட்வே,
சென்னை-1.

# பதிப்புரை

கவிஞர் திரு. வாணிதாசனை உங்களுக்கு அறிமுகப் படுத்துவது இளம்பரிதியை உலகுக்குக் காட்டுவது போன்றதேயாகும். அவரின் கருத்தோவியங்களைத் 'தமிழச்சி', 'கொடி முல்லை', 'தொடுவானம்', 'எழிலோவியம்' ஆகிய நூல்களின் மூலம் தமிழ்நாடு நன்கு அறியும். அவர் கவித் திறனைக் கண்டு திருவாளர்கள் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களும், பேராசிரியர் மயிலை, சிவ. முத்து அவர்களும் "திரு. வாணிதாசர் ஒரு பெரும் உலகக் கவிஞர் ஆதல் வேண்டும்' எனவும், 'தமிழ் நாட்டுத் தாகூர் வாணிதாசனார்' எனவும் முறையே பாராட்டிய பிறகு, வேருக அவரை அறிமுகப்படுத்த வேண்டியதில்லை என்றே கருதுகின்ருேம்.

'வாணிதாசன் கவிதைகள்' என்ற இந்நூலில் எண் பத்தெட்டுத் தலைப்புக்களில் அமைந்த கவிதைகளைக் காண லாம். கவிதையின் ஒவ்வொரு தலைப்பும், அதற்கேற்ற கருத்தும் கவிஞரின் உள்ளத்தில் ஊறி எழுந்ததோடன்றிப் படிப்போரைப் பலமுறை சிந்திக்கச் செய்து, அவர்களின் உள்ளத்திலே மேலும் பல புதிய கருத்துக்களை எழுப்ப வல்லனவாகவே திகழ்கின்றன.

'வாழ்க இளம்பரிதி' என்ற தலைப்பில் உள்ள பொங்கல் வாழ்த்தில், "கொண்டு வா யாழை! குழந்தை களைப் பாடவிடு!...உனது குரல் இனிமை உன் மக்கள் சொல்லில் கனிந்துளது. ஆதலினுல், கண்மணிகள் பாடட்டும்!" என்ற வரிகளில் குழந்தை அன்பு, மனைவி இன்பம் கனிந்துள்ளன.

"கூப்பிடு வாழ்வோர் அனைவரையும்; கூப்பிடடி!
காப்பெதற்கு? கார்தந்த செல்வம் விளைபொருள்கள்!
சாப்பாட்டைத் தேக்காதே! சண்டை அதன்விளைவாம்
பங்காக்கி உண்போம்! பசியேது பின்னாட்டில்?"

என்ற அடிகளில் பொதுவுடைமை பூத்துக் குலுங்குகின்றது! சிற்றூரில் மாட்டைத் தேய்த்துக் குளிப்பாட்டி வரும் சிறுவர்களின் உடம்பில் நீர் வடிவதைப் பார்த்த சிறுமிகள், "...உடலெல்லாம் 'ஒட்டை! ஒட்டை!' எனக்கூவி ஓடி மறைவார்" என்பதில் நகைச்சுவை ததும்புகின்றது. "உரிமை தடுப்பார் இவ்வுலகில் உருக்குலைந்து அழிவார் இடிகரை போல்" என வரும் வரிகளில் உரிமை வேட்கை மிளிர்கின்றது.

'வயலை'க் கூறும்போது தன்னலத்தைப் பழிக்கின்றார். "...உன்னைப் போல ஒவ்வொரு நாளும் உருக்குலைவாரும் உண்டே!" எனக் காதலால் அழிவாரை 'வாடிய மலர்' கொண்டு காட்டுகின்றார். காதல், மலிந்த கடைச்சரக்கு அன்று என்பதையும், மலிவென்று கருதிய வட்டைச் சேவல் பட்டபாட்டையும் 'பெட்டையும் சேவலும்' என்ற தலைப்பில் வரும் கவிதைகளில் அழகாக வருணித்துள்ளார். 'இன்பப் பெருக்கை மகளிர் வெளிக்காட்ட மாட்டார்கள்; இளமைச் செய்கை வடுப்போல மாறாமல் உள்ளத்திருக்கும்' என்ற கருத்துக்களை 'முதல் முத்த'த்தில் சுவைபடத் தீட்டியுள்ளார்.

தனித்திருக்கும் மகளிரை அந்திக் காலம் எவ்வளவு வாட்டும் என்பதை 'உயிர் வாட்டும் காலம்' என்பதில் காணலாம். 'அலர் தூற்றில் என்னும்?' என்ற தலைப்பு, அகப்பொருள் துறை பலவும் அமைந்து சங்க இலக்கியச் சாறாகத் திகழ்கின்றது. தலைவனைக் கூடியவளுக்கு அல்லியையும், பிரிந்தவளுக்குத் தாமரையையும் அமைத்து நிகழ்த்தும் உரையாடல் இன்ப ஊற்றாகும்.

காதலியின் வருகைக்குக் காத்திருந்த காதலன் திண்ணையோரம் வந்து படுத்த நாயையும், சுண்ணாம்பிடித்த பந்தற்காலையும், பெருச்சாளியையும், பூனையையும் காதலி என்று ஏமாந்ததாகச் சித்திரித்த 'அவளில்லை!' என்ற தலைப்பில் உள்ள கவிதைகள் நகைச்சுவை ஊட்டுவன.

"இலவங்காய் வால்முளைத்துப் பறப்பதைப்போல் கிள்ளை
நெட்டாகக் கல்வீட்டுப் புறச்சுவரைத் தாவும்!"

—இந்தப் புதிய உவமையில்தான் எத்துணை அழகு! இலவங்காயை இதுவரை யாரும் கிளிக்கு உவமை கூறியதில்லை யன்றோ?

"எட்டிப் பழமோ பறைச்சி இதழ்? — மன
இன்பத்திற்(கு) ஏதடி சாதிமதம்?
மொட்டு பலவகை ஆனாலும் — அதன்
முருகு தரும்சுவை ஒன்று' என்றான்!

"குட்டை மனத்தவர் சூழ்ச்சி எல்லாம் — குப்பன்
குன்றில் அடிபடும் பானையாச்சே!"

—இவ்வரிகளில் கவிஞரின் சமுதாய சீர்த்திருத்தம் பளிச்சென மிளிர்கின்றது.

தாய், மனைவி, மகள் முதலான மக்களின் இயல்புகள் அப்படி அப்படியே இயற்கையாகப் புனையப்பட்டுள்ளன. 'மீன்காரி' வெகு ஜோர்! குறவர், பிச்சைக்காரி, மே நாள், நம் நாட்டுப் பெரியார்கள், நாடு, மொழி—இவை குறித்து அவர் பாடியுள்ள யாவும் படித்தின்புறத்தக்கனவே யாகும்.

இத்தகு உயரிய கவிதைகள் நிறைந்த ஒரு தொகுப்பு நூலை எங்கள் வழி வெளியிட இசைவு தந்த கவிஞர்க்கும், இது வெளிவரப் பெரிதும் உழைத்த நண்பர்கட்கும் எமது உளங் கனிந்த நன்றி உரியவாகுக!

—மலர் நிலையத்தார்

# உள்ளுறை

## I இயற்கை


| | | | |
|---|---|---|---|
| 1 | வாழ்க இளம்பரிதி | ... | 1 |
| 2 | காலை அழகு | ... | 5 |
| 3 | கதிரவன் வருகை | ... | 6 |
| 4 | சிற்றூர் | ... | 8 |
| 5 | எங்களூர் | ... | 10 |
| 6 | ஆறு | ... | 12 |
| 7 | வயல் | ... | 14 |
| 8 | பனை | ... | 16 |
| 9 | மாமரம் | ... | 18 |
| 10 | காட்டுப் பூ | ... | 19 |
| 11 | வாடிய மலர் | ... | 21 |
| 12 | அது யார்? | ... | 23 |
| 13 | இன்பச் சொத்து | ... | 25 |
| 14 | தையும் பிறந்தது ! | ... | 27 |
| 15 | எவர் செயல் ? | ... | 29 |
| 16 | அந்தி அழகு | ... | 30 |
| 17 | நிலவே, சொல் ! | ... | 31 |
| 18 | அழகுப் பெண் | ... | 32 |


## II இன்பம்


| | | | |
|---|---|---|---|
| 19 | முதல் முத்தம் — | ... | 34 |
| 20 | பெட்டையும் சேவலும் | ... | 36 |
| 21 | சிரிக்காதே தோழா | ... | 38 |
| 22 | இனிப் பிரியேன் ! | ... | 40 |
| 23 | உயிர் வாட்டும் காலம் | | 43 |
| 24 | அலர் தூற்றில் என்னும் | ... | 45 |
| 25 | கொடிய இரவு | ... | 46 |
| 26 | மறந்தாரே தோழி ! | ... | 48 |
| 27 | உயிர் வாழாதே ! | ... | 49 |
| 28 | அவளில்லை ! | ... | 50 |
| 29 | என்னேடி கோபம் ? | ... | 52 |

30 ஒரு வார்த்தை ... 54
31 வரச் சொல்லடி ... 56
32 நீ இன்றேல்...? ... 57
33 என்றும் மறவேன் ! ... 58
34 எந்நாளோ ? ... 60
35 துணியவில்லை ! ... 62
36 நிலைத்து நிற்குமோ ? ... 64
37 எட்டிப் பழமோ ? ... 65
38 அது ஒரு நாள் ! ... 68
39 காய்ந்ததென்ன ? பெய்ந்ததென்ன ? ... 69
40 நினைப்பேனோ இல்லை ? ... 71
41 நானென் சொல்வேன் ? ... 73
42 காரணந்தான் என்னே ? ... 74
43 என்ன உண்டாம் ? ... 76
44 வேறெங்கோ நோக்குவதேன் ? ... 77
45 கன்னியின் கனவு ... 79
46 அறியாக் காதலி ... 81

## III மக்கள்

47 தாய் ... 83
48 மனைவி ... 85
49 மகள் ... 87
50 உழவன் ... 89
51 பாட்டாளி ... 91
52 குறவர் ... 93
53 மீன்காரி ... 96
54 பிச்சைக்காரி ... 97
55 பைத்தியக்காரி ... 99

## IV புரட்சி

56 புரட்சி ... 104
57 மே நாள் ... 106
58 மனமே இல்லை ! ... 107
59 ஒன்றே போதும் ! ... 110
60 இதுதானோ செய்வார் ? ... 112
67 தீர்ப்புச் சொல்வீர் ! ... 113
62 ஏன் தயக்கம் ? ... 115
63 இவர்களே திருடர் ! ... 116

## V இசைக்குரியார்


64 காந்தி ... 117
65 பாரதி ... 118
66 மறைமலையடிகள் ... 120
67 திரு. வி. க. ... 122
68 பேராசிரியர் சுந்தரனார் ... 123
69 கவிமணி ... 124


## VI தமிழ்


70 தமிழ்த் தாய் ... 125
71 தமிழ் வாழ்க ! ... 126
72 எங்கள் தமிழ் ... 128
73 தமிழ் நாடு ... 129
74 தாய் நாடு ... 131
75 தமிழர் ஆட்சி ... 133


## VII பூக்காடு


76 எழுத்தாளன் ... 134
77 கடல் ... 135
78 மணி ... 136
79 எது வேண்டும் ? ... 138
80 எது இன்பம் ? ... 139
81 சேரிக் கடை ... 140
82 பிறந்த ஊர் திரும்பல் ... 142
83 வெட்கி நடந்தேன் ... 145
84 எரிச்சல் ... 146
85 ஏக்கம் ... 148
86 சூறுவளி ... 150
87 கொடிது ! கொடிது ! ... 151
88 வணக்கம் ... 152

# வாழ்க இளம்பரிதி !

கடற்பரப்பில் உப்பங் கழிப்பரப்பில் தாழை
மடற்பரப்பில் நெய்தல் மணற்பரப்பில் சாய்ந்த
முடப்புன்னைப் பைங்கிளையில் முண்டகப்பூங் காட்டில்
அடங்கி யிருந்தஇருள் அற்றொழியக் கீழ்க்கடல்மேல்
தங்கப் பரிதி தலைநிமிர்ந்தான் ; வாழியவே !
எங்குமே இன்பம் ! இளம்பரிதி வாழியவே !
வானில் மலையில் மரக்காவில் பூம்புதரில்
போனஒளி, அடடா! பொன்வெள்ளம்! பொன்வெள்ளம்!

ஆசை மனையாட்டி ! அன்பே ! இதைக்கேள்நீ !
மூசையிலே வைத்தெடுத்த பொன்னே முளைத்தகதிர் !
நீர்நிலம்கால் விண்ணை நிலைத்த பொருளையெல்லாம்
ஆட்டிப் படைப்பதுவும் ஆக்கம் விளைப்பதுவும்
வானம் முளைத்து வரும்பரிதி செய்கையடி !
நானிலத்தில் பொய்கை நறும்பூவில் வான்முகட்டில்
ஊனில் உடலில் உயிர்ப்பில் ஒளிவீசி
வானும் எழுச்சியினைச் செய்ததடி ! வாழ்ககதிர் !

இன்னும்கேள் : பெண்ணரசே ! ஏரி குளம்குட்டை
வற்றி வெடித்து மரக்கிளைகள் பட்டுவரச்
சுற்றிப் படர்ந்தகொடி தோப்பும் கலகலக்க
நன்செய பொலிவிழக்க நல்லாறு நீர்வற்றப்
புன்செய் இரைத்துழவன் நாளெல்லாம் போராட
வானம் அனல்சொரியும் ! மண்ணும் கனல்எழுப்பும் !

இட்ட அடிவேகும் ! ஓட்டும் பொடிகாலில் !
பட்ட செடிகொடிகள் மொட்டை மரங்களெல்லாம்
வேகாது வெந்து வெறிச்சென் றிருந்திடுமே !
மண்ணெழுப்பும் கானல் ! வருங்காற்றுத் தீச்சொரியும் !
கண்ணுக்குத் தோன்றாத புண்ணாய் உடல்கொழிக்கும் !
சிற்றூரும் பேரூரும் தீய்ந்த முதுவேனில்
அற்றொழிக்கும் மக்கள் துயரற் றொழியவில்லை !

வானம் குமுறும் வளர்ந்தமலைக் கூட்டம்போல் !
ஏனம் வெறிகொண் டெழுதல்போல், யானை
தலைதெறிக்க ஓடும் தகைமைபோல் கார்வானில்
அங்குமிங்கும் ஓடும் ; அதிரும் ; முழவார்க்கும் !
சிங்கத் தமிழர் செருக்களத் தோசையென
வானம் இடிக்கும் ; மழைபொழியும் ! நீர்மூசைத்
தங்க உருக்குபாய் தாரைகளைப் போல்மின்னல்
கண்ணைப் பறிக்கும் ! கருத்தழிக்கும் காற்றிரைச்சல் !
நீண்டபனை தென்னை நிலைகால் தெரியாமல்
மூண்டெழுந்த காற்றுடனே ஆடும் ; முறிந்தொடியும் !
கொட்டகையில் மாடுகன்று கூண்டில் பறவைஇனம்
கட்டுண்டு மங்கிக் கலங்கும் பசியாலே !
வெளிச்செல்ல வொண்ணா ! வினைசெய்ய வொண்ணா !
ஒளியற்று மக்கள் ஒடுங்கிக் கிடந்திடுவர் !
தீமை விளைத்தகார் சென்றதுவாம் ! ஆனாலும்,

வெள்ளக் கொடுமை வெளிசெல்லக் கூடுவதோ ?
பள்ள வயல்நினைவால் பாழை மறந்தோமே !
ஓர்ஓசை கேட்டுமனத் தின்பம் பிறந்ததடி !
நீர்வயலில் பாய்ந்தோட நெஞ்சம் குளிர்ந்ததடி !
பச்சைக் கடல்போல் பரந்த வயல்வெளியில்
நச்சுப்புல் நீக்கி நலஞ்சேர் உரமிட்டு
வளர்த்தோம் ; மகிழ்ந்தோம் ! வயலில் பசுநெல்
கிளைப்பசும் பாம்பாய்க் கிளைத்து வளர்ந்தது !
கூதிர் அகலச் சிறுகுறை தோன்றியதே !

தோப்பும் துரவும் விழிப்புலனுக் கெட்டாது
காப்புத் திரையிட்டு வைத்ததுபோல் மூடுபனி
மண்ணுக் கடியில் வளர்தீ இருப்பதைப்போல்
கண்ணுக்கு நீண்டமட்டும் காணும் பனிப்புகையே!
ஊதை உடல்நடுங்கும்! ஊரெல்லாம் தீக்காயும்!
கொம்புத் துளிர்கருகும்! கொத்தெல்லாம் சீர்அரும்பும்!
செம்பொன் சிறுகிண்ணம் போல்பூக்கும் பூசணிப்பூ!
ஆமை தலைபோல் அழகு சிறுகாயை
நாமடைய விட்டுவைக்கும் நற்பறங்கி! வீட்டோரத்
தோட்டத்து வேலியிலே தொங்கும் சுரைக்காய்கள்
மீட்டாது மாட்டிவைத்த மெல்யாழாம்! தென்னைமரக்
குட்டை நிறைந்த குளிர்அல்லித் தாமரைநீர்
மட்டத்தில் வந்து மலர்பூக்க எத்தனிக்கும்!
செந்நெல் பழுத்ததுவே! தீம்பலா முற்றியது!
கன்னலோ நாணற் கடல்போலப் பூத்ததுவாம்!
காட்டுப்பூனைப்பல்லாம் கார்முல்லை நீளரும்பு
வீட்டுக் கருகிருந்து மெல்லச் சிரித்தழைக்கும்!
யாழ்மீட்டும் தேன்வண்டு! யார்அதைப்போல் பாடவல்லார்?
வாட்டும் குளிர்காற்று வாய்க்கடையில் புண்செய்து
காட்டும் பனிநாள் கடந்துவந்த தைக்கண்டோம்!
தைகண்டோம்! அன்பே! தமிழ்கண்டோம்! இந்நன்மை
வையத்துப் புத்தாண்டின் முன்னாள் வரக்கண்டோம்!
பொன்னொளியை வான்கடல்மேல் பூசிச் சிரித்தகதிர்
இன்னே வரக்கண்டோம்! இன்பம் வரக்கண்டோம்!
வாழ்க இளம்பரிதி! புத்தாண்டு வாழியவே!

இல்லம் புதுக்கி எழில்புதுக்கி நீராடி
அல்லொத்த கூந்தல் அழகைப் பெருக்க
நறுநெய் தடவுக! நன்றாக வாரிமுடி!
புத்தாடை பூண்நீ! மலர்சூடு! நம்வீட்டுச்
சொத்தாம் குழந்தைகளைத் தூய்மைப் படுத்துகவே!
நேற்றறுத்த நெல்லரிசி நீள்தாழை முள்ளாம்
திருத்திக் களைந்து செழுங்கரும்பின் கட்டிஇட்டுப்

பானை உலையேற்றிப் பால்சொரிந்து தீக்கொளுத்தப்
பொங்கலோ பொங்கல்! பெரும்பொங்கல்! வாழியவே!
சிங்கத் தமிழர் திருநாளாம் வாழியவே!
'இங்குள்ளோர்க் கொன்றுமினி இல்லை!' எனுந்தீஞ்சொல்
தங்காது ஒழிக! தமிழ்வாழ்க! வாழ்க! எனச்
சூழ்ந்து குரலெழுப்பச் சோறு சமைத்துவரத்
தேனை நறுநெய்யை ஏலச் சிறுபொடியை
ஆனமட்டும் தூவிநீ ஆக்கிப் படைத்திடுவாய்!
கூப்பிடு வாழ்வோர் அனைவரையும் கூப்பிடடி!
காப்பெதற்கு? கார்தந்த செல்வம் விளைபொருள்கள்!
சாப்பாட்டைத் தேக்காதே! சண்டை அதன்விளைவாம்!
பங்காக்கி உண்போம்! பசியேது பின்நாட்டில்?

கொண்டுவா யாழை! குழந்தைகளைப் பாடவிடு!
பண்டைத் தமிழ்வீரம் பாடட்டும்; கேட்போம்!
அரசர் மடிமேல் அரும்புலவர் செந்நாவில்
ஓங்கி வளர்ந்த உயர்தமிழைப் பாடட்டும்!
ஊனுயிரை மக்கள் உணர்வை வளர்த்துவரும்
தேனும் செழுந்தமிழைப் பாடட்டும்; கேட்போம்!
உனது குரலினிமை உன்மக்கள் சொல்லில்
கனிந்துளது ஆதலினால் கண்மணிகள் பாடட்டும்!
வாழ்க இளம்பரிதி! வாழ்கவே தைப்பொங்கல்!
பொங்கலோ பொங்கல்! உளம்பொங்கும் இந்நாள்போல்
எங்கும் தமிழ்மக்கள் எந்நாளும் வாழ்க!
உயர்க பலதுறையில்! இன்பம் உயர்க!
அயர்விலும் நாட்டின் உயர்வே நினைக!
அறமும் திருவும் அறிவும் நிறைந்திடுக!
சீர்பெற்றுக் கன்னித் தமிழ்வாழ்க என்றும்!
திருநாடு வாழ்க சிறந்து!

# காலை அழகு

வெள்ளி முளைப்பினிலே -- அழகு
துள்ளுது வான்பரப்பில்! – சிறு
புள்ளின ஓசையிலே – அழகு
பொங்கி வழியுதடி! 1

காலைப் பிறப்பினிலே – அழகு
கண்ணைக் கவருதடி! – சிறு
சோலைக் கலகலப்பில் – அழகு
சொரியுது உள்ளத்திலே! 2

சேவல் அழைப்பினிலே – அழகு
சிந்தையை அள்ளுதடி! – மன
ஆவல் அழித்துவிட்டால் – அழ
கானது நம்முடைமை! 3

தாமரை மொட்டுக்குள்ளே – அழகு
தங்கிக் கிடக்குதடி! – கதிர்
சாமரை வீச்சினிலே – விரிந்து
சஞ்சலம் போக்குதடி! 4

வீடு துலக்கும்பெண்கள் – குளிர்முகம்
வீசும் ஒளியழகில் – வான்
நாடு விட்டுநகரும் -- முழுமதி
நாணி முகம்வெளுத்தே! 5

# கதிரவன் வருகை

மயல்தரு கிழை நாளின்
வானத்தைக் காண எண்ணி
வயற்புறம் சென்றேன் ; நொச்சி
மணம்வீசும் வேலி யோரம்
குயில்நுணுக் கிளைகள் தாவிக்
'குக்குகுக்' கென்றே பாடும் ;
செயலற்று நின்றேன் வீசும்
சிலுசிலு காற்றில் நானே ! 1

சேக்கையை விட்டு மக்கள்
எழுந்திடச் சேவல் கூவும் ;
காக்கைகள் ஒன்றி ரண்டு
கரைந்திடும் தென்னந் தோப்பில் ;
வாக்கினைத் திருத்திக் கொள்ளும்
வாழைமேல் கிள்ளை தாவிப் ;
போக்கிடும் இருளைக் காலைச்
செந்நிறம் கீழ்வான் பூசி ! 2

விரிமலர் தேடி யென்றன்
மேலுராய்ந் தோடும் வண்டு ;
கருநிற மேகம் தூக்கம்
கலைந்தெழு சோம்பன் போலப்
புரண்டெழும் கீழ்வா னத்தே ;
புதுப்புது அழகைக் காட்டும்
எரிக்கிரை யாகு தந்தோ !
தொடுவானம் தீதீ எங்கும் ! 3

7

பொன்னிறப் பரிதி யுண்டை
போர்வையை விலக்கி மெல்ல
நன்னிலை எட்டிப் பார்க்கும்;
நகர்ந்தெழும் விரைந்து வானில்!
தென்னைமேல் புதர்மேல் குட்டை
தேங்கிய நீரின் மீது
பொன்மழை; அடடா! அந்தப்
புதுமையே புதுமை யாமே! 4

# சிற்றூர்

சேவல் கதிர்மீன் மணிகாட்டும்;
செந்தா மரைப்பூ வெறியூட்டும்;
நாவல் நிறத்துக் கருவண்டு
நல்லிசை எழுப்பும் மதுவுண்டு;
தாவி அலைந்து பசுமூங்கில்
தமிழிசை பாடும் சிற்றூரில்
காவல் கட்டுப் பாடில்லை;
காசைப் பறிப்பார் அங்கில்லை! 1

தாழை யருகே சிறுவீடும்,
தனித்தனி யாகக் கல்வீடும்,
வாழைத் தோப்பும், மாந்தோப்பும்,
வளைந்த சந்தின் கோடியிலே
மேழி மக்கள் உயிருண்டு
மிளிரும் பண்ணை வீடொன்றும்,
ஏழை முத்து மாரியம்மன்
இடிந்த கோவிலு மங்குண்டு! ௨

மண்குடம் இடையில் உடல்சாய்க்க
வலக்கை வீசி ஊர்வம்பைப்
பெண்கள் பேசி நடக்கையிலே
பிதுங்கிய மார்விழி உயிர்கொல்லும்;
கண்ணும் நாட்டில் சிற்றூரே
கவலை போக்கும் நன்மருந்து;
உண்ண உணவு இல்லையெனில்
உடையும் அணியும் என்செய்யும்? ௩

மாட்டைத் தேய்த்துக் குளிப்பாட்டி
மலர்குளம் அதிர விளையாடி
வீட்டை நோக்கி நீர்ஒழுக
விடைபோல் பையன் வருகையிலே
கோட்டைப் பொன்னை வார்த்தெடுத்த
குறுநகைச் சிறுமியர் உடலெல்லாம்
'ஓட்டை ஓட்டை' எனக்கூவி
ஓடி மறைவார் சிற்றூரில்! 4

ஒருவர் அறிந்தால் ஊரறியும்;
ஒற்றுமை ஒழுக்கம் அவரணிகள்;
பெருமை இல்லை; வீணாகப்
பேசும் வழக்கம் அவர்க்கில்லை;
எருமை கறந்த பால்தயிர்மோர்
எவர்க்கும் பொதுவாம் எனஎண்ணி
வருவார் போவார் யாவர்க்கும்
வழங்கல் ஒன்றே அவரறிவார்; 5

பயிரின் பசுமை, குயிலினிமை
பாட்டுப் பாட நமைத்தூண்டும்!
உயிரைக் கொல்லும் பொறிநமனவ்
வூரில் இல்லை! உடலெல்லாம்
வயிரம் ஏறித் தசைதிரண்டு
மாநிலம் காக்குந் தோளுடையார்
உயிருள வரையும் ஆண்டான்சொல்
உச்சியி லேற்கப் பிறந்தவரோ? 6

# எங்களூர்

உடைத்திடும் கரையைத் தெற்கே
உருண்டோடும் செஞ்சி ஆறு;
மடையினில் நாரை தூங்கி
வழிபார்க்கும் சேலுக் காக;
குடையென மாவி ரிந்து
குளிர்நிழல் கொடுக்கும்; வீரர்
படையணி போல வாய்க்கால்
இருகரை பனைகள் நிற்கும்! 1

குட்டையும் குட்டை பூத்த
குளிர்அல்லிப் பூவும் கண்கள்
எட்டிய மட்டும் தோன்றும்;
இடையிடை கொடிக்கால், வாழை
எட்டிப்பார்த் தழைக்கும் நம்மை;
இருவிழி விருந்து காற்றுப்
பட்டு,நெல் அலையைப் போலப்
படிந்தெழுந் தாடுங் கூத்தே! 2

கொண்டலை முட்டு கின்ற
கோபுரம் இரண்டு தாங்கிப்
பண்டையர் கலையை, வாழ்வைப்
பண்பட்ட உளத்தைக் காண
உண்டொரு கோவில் எங்கள்
ஊருக்கு நடுவில்; பாசி
கொண்டநீர்க் குளம்நீ ராழி
குறைவிலா இன்ப ஊற்றே! 3

பார்ப்பனச் சேரி கோயில்
பக்கலில் உண்டு; ஈசன்
தேர்வர நான்கு மாடத்
தெருவுண்டு; வலையை வீசி
ஈர்த்திடுங் கோவில் பூனை
விலைமாதர் இருப்பு; சொந்த 4
ஊரினைப் பிரிந்தோர் தங்கச்
சாவடி எங்கும் உண்டே!

எழுத்தறி சாலை, மக்கள்
இன்னிசை பயிலும் சாலை,
வழுவழுப் பான மொட்டை
மெய்ஞ்ஞான அடிகள் மாசு
கழுவிட முனையுங் கல்வி
மடம்,தொழிற் சாலை பின்னும் 5
பழுதற உண்டு; எந்தப்
பகட்டுமே இல்லை யங்கே!

தண்டமிழ் ஊட்டுங் கல்விக்
கதிரவன் கழகம், சங்கு
கொண்டமால் இருப்பு, நல்ல
குடிபுனல் கூவம், ஏரி,
மண்டபம் மூலைக் கொன்று;
வழியெலாம் விளக்குத் தூண்கள்; 6
அண்டையில் புதுவை! எங்கள்
மிகுதேவைக்(கு) அட்டி யுண்டோ?

# ஆறு

மலையில் பிறந்தேன்; தவழ்ந்திறங்கி
மண்ணில் பாய்ந்தேன் விளையாட;
இலையும், சருகும், உதிர்பூவும்
இயற்கை தந்தாள் வழித்துணைக்கே;
சலசலத் திடுவேன் கல்லிடுக்கில்;
சாரைபோல் நான்நெளிந் தோடிப்பின்
தலையை அசைப்பேன்; பாய்ந்தோடித்
தமிழ்த்தேன் இசையை மீட்டிடுவேன்! 1

பொன்னைப் பொடித்த மணல்மீது
புதுமணப் பெண்ணின் பொலிவடைவேன்;
மின்னும் வயிரக் கண்தவளை
மிதந்து வந்து, 'நாரையரே!
இன்னும் உலகம் பெருந்துயிலில்
இருப்பதாய் நினைவோ இத்தவசு?'
என்னும்; மீனினம் எழுந்தெழுந்து
இளித்துக் காட்டும்! எக்களிப்பேன்? 2

பெற்றால் நாட்டில் விடுதலையாம்
பேதமி லாவென் மனப்பான்மை;
சிற்றூர் பட்டினம் புகுந்தோடிச்
சேமித் தெடுத்துநான் எவ்வுயிர்க்கும்
நற்றாய் நாணை ஊட்டிடுவேன்;
நலியா துலகைக் காத்திடுவேன்;
கற்றிடல் உண்டோ தளதளத்த
கன்னம் என்றன் சுழிப்பையெலாம்? 3

உரிமை தடுப்பார் இவ்வுலகில்
உருக்குலைந் தழிவார் இடிகரைபோல் ;
மருவிக் கடலுடன் கலந்தாடி
வானில் திரிவேன் உருமாறி ;
உருளும் இடி,என் சிரிப்பொலிகேள் ;
உயிருக் குதவச் சிறுதுளியாய்
வருவேன் ; மண்ணில் ஓய்வில்லை ;
வாட்டம் தீர்ப்பேன் ; களிப்பேனே ! 4

# வயல்

சாலையின் அருகே சென்றனன் ஒருநாள்;
‘சற்றுநில்’ என்றது கைம்மைக்
கோலம்சேர் முகத்தை ஒத்திருக் கின்ற
குறுவைநெல் அறுத்திட்ட நன்செய்;
வேலையை விட்டு நின்றனன்; சொல்லும்:
“விதவித இன்மொழி கூறிக்
காலையில் என்றன் உடலினை உழவன்
கசக்கினன்; ஏரால் களித்தான்! 1

சொல்லினால் என்னை மயக்கினன்; ‘எந்தச்
சோர்விலும் கைவிடேன்’ என்றான்;
‘வல்லவன் உழவன்; ஏற்றவன் நமக்கு;
வாழ்விலே துயரிலை’ எனநான்
அல்லிலும் பகலிலும் நினைத்தனன் களித்தே;
அடிக்கடி வந்தெனைப் பார்த்தான்;
நெல்லினை விதைத்தான்; சிரித்தான்; களித்தான்;
நெஞ்சினில் மகிழ்வுநான் அடைந்தேன்! 2

வேளையோ டுண்ண விருந்தினைக் கூவி
விரும்பிய தளிப்பதைப் போல
வேளையோ டெனக்கே உரத்தினைக் கொடுத்து
மிக்கநீர் ஊட்டினன்; என்னில்
வாளென நெற்பயிர் கருநிறம் பெற்று
வளர்ந்திடக் களித்தனன்; ஒவ்வோர்
நாளிரு வேளை என்றனைச் சுற்றி
நடந்தனன் நட்டநாள் தொடங்கி! 3

பெண்தலை கோதி எடுத்திடு பேன்போல்
பிய்த்தனன் என்னுடல் களைகள் ;
தண்விழி மாதர் சுவைபெறக் காளை
தட்டிடா தெதனையுஞ் செய்வான்
மண்ணினில் பூநுகர் வண்டாம் உழவன் !
வஞ்சகம் அறிந்திலன் ! அந்தோ !
பெண்ணின் அறிவு பின்னென உரைத்தார்
பேச்சினிற் கிலக்குநான் ஆனேன் ” 4

என்னலும் நானே எழுந்தனன் விரைந்தே ;
என்தொழில் நோக்கியே நடந்தேன் ;
உன்னிடுந் தோறும் உழவனைப் போல
ஒவ்வொரு நாட்டிலும் மக்கள்
தன்னலங் கருதி ஒவ்வொரு பொருள்மேல்
தாவியே வண்டெனப் பறந்து
மன்னிய நிலையாத் தன்மையைக் கண்டேன் ;
வாழ்வினில் வீழ்த்துவோம் அதையே ! 5

# பனை

காயினில் குளிர்மை தந்தாய்;
கடுஞ்சுரம் வாழ்ந்திட் டாலும்
தோய்சுவைக் கனியால் எந்த
உள்ளமும் தொட்டாய்; ஏழை
வேய்ந்திடு கூரை யாளுய்;
விசிறிஞய் புழுக்கம் நீங்க;
பாயாளுய்; தடுக்கு மாளுய்;
பலவிதக் கூடை யாளுய்! 1

கன்றுகள் ஆடு மாடு
கட்டிடக் கயிறு தந்தாய்;
தின்றிடக் கிழங்கு தந்தாய்;
திணிநட்புக் குவமை யாளுய்;
என்றுமே அணிலின் கூட்டம்
வாழ்ந்திட இருப்புத் தந்தாய்;
மன்றுளோர் அறியக் காளை
ஊர்ந்திடும் மடலா ளுயே! 2

அறிந்தவர் அறிவார் உன்றன்
அழகுச்சி விரிந்த மட்டை;
செறியோலைப் படப ட்ப்புச்
சிந்தையை அள்ளும் பாட்டாம்!
கறுத்திடைப் பொன்பூ சுற்றக்
காய்க்கிலே காட்டு! கள்ளின்
வெறியர்கள் கண்டு வெட்கச்
சாடுகின் ருயோ காற்றில்! 3

காலிகள் மேயா வண்ணம்,
களைமிகுந் தழிக்கா வண்ணம்
வேலியைக் கட்டிப் போற்றி
விருப்புடன் வளர்த்தா ருண்டோ?
பாலிலா யாரும் அற்ற
குழவிநீ! பனையே! என்றும்
ஏலவே உதவு கின்றாய்!
உன்குணம் எவர்பெற் றாரே! 4

# மாமரம்

சித்திரைத் திங்கள் கண்டு
சிரித்தனை தளிர்த்து ; நீண்ட
கொத்துசேர் பூநாற் றத்தால்
கூவினாய் ; இலவம் பஞ்சு
மெத்தையில் துயில்வார் போல
வண்டினம் தூங்கும் மெல்ல ;
தத்தைகள் இணைந்து பச்சைத்
தழைஊசல் ஆடும் உன்னில் ! 1

கலைநிறை உள்ளம் போல
விரிந்தனை ; நிமிர்ந்தாய் ; காய்கள்
குலைகுலை யாகக் கொண்டு
குனிந்தனை ; கொடுத்தாய் ; மாவே !
இலைசெறி உன்றன் நீழல்
இருந்திடாக் குறையா லன்றோ
மலைப்புறம் சென்று கோடை
வெப்பத்தைக் கழிக்கின் றார்கள் ! 2

சாற்றினைச் சுவைத்துச் சப்பிக்
குப்பையில் தள்ளி விட்டார் ;
மாற்றலர் மதியாச் செய்கை
உணர்ந்திட வளர்ந்தாய் ; உன்னைப்
போற்றுதல் செய்கின் றார்கள் ;
புகழுக்கோர் அளவே இல்லை ;
'ஏற்றமோ மக்கள் செய்கை ?'
என்றுநீ சற்றுக் கேளேன் ! 3

# காட்டுப்பூ

தோப்புக்கள் துரவு சுற்றி
என்மனம் போன போக்கே
காப்பின்றி நடந்தேன்; ஏதோ
காலினில் தைக்கக் கண்டேன்;
வேப்பனின் நிழலில் குந்திக்
களைந்தனன் வேரல் முள்ளை;
தோப்பிடைப் புதர்வாழ் காட்டுப்
பூமணம் தொட்ட தென்னை! 1

செம்மையில் சிறிது நீலம்
கலந்துகண் கவரு மின்ப
அம்மலர் போல வாழ்வில்
அதற்குமுன் கண்ட தில்லை;
கம்மென வீசும் நாற்றம்
கண்டிட மௌவல் நாணும்;
நம்மவர் சொல்லால் அப்பூ
விளித்தெனை நவிலும்; சொல்வேன்: 2

"அழகினில் குறைந்தா போனேன்?
அருங்கடி யிலையோ? என்னில்
ஒழுகிடும் தேன்க சப்போ?
ஒருகட்டு நாற்ற மில்லா
இழிமலர் சூடும் பெண்கள்
ஏனெனை வெறுக்கின் றார்கள்?
புழிச்சுதல் இன்றி மக்கள்
கொடுமையாய்ப் பார்ப்ப தேனோ? 3

நாலுபேர் கூடிச் சொன்னால்
கெட்டதை நல்ல தென்பார்;
மூலத்தை ஆய்ந்து பாரார்;
முச்சிமேல் தூக்கி ஆர்ப்பார்;
சீலமில் மக்கள் கூற்றுத்
தீதடா தீதே!'' யென்று
சாலையில் முணறிற் றப்பூ
தூக்கிவிடாக் கவிஞன் போலே! 4

'மாமியார் செய்த தைப்போல்
மருமகள் செய்வாள்' என்றிப்
பூமியில் பெண்கள் சொல்லும்
கொள்கையில் புரட்சி காண்போம்!
ஏமஞ்சேர் மலரிந் நாட்டில்
எம்மல ராயி னென்ன?
நாமிதைத் துலைபோல் தூக்கி
நல்லதைக் கொள்ளு வோமே! 5

# வாடிய மலர்

மண்ணிலே பருவ முற்ற
மக்களின் முகத்தைப் போலக்
கண்களைக் கவர்ந்து, தோட்டச்
செடிக்கெலாம் களையைத் தந்து,
விண்ணினை நோக்கித் தென்றல்
வீச்சினில் ஆடு கின்ற
வண்ணமா மலரே ! உன்றன்
வாழ்வினில் ஒன்று கண்டேன். 1

தேன்பெற வண்டுக் கூட்டம்
மணம்வரும் திசையை நோக்கி,
'நான்முன்னே ? நீதான் முன்னே'
என்றுநள் ளிரவெ ழுந்த
வானத்தில் வட்ட மிட்டுக்
காதலை இசையால் மீட்டும் ;
தேன்சுவை யுண்ணும் ; உன்னில்
தேக்கிடும் காதல் வெள்ளம் ! 2

உருவினில் ஊறி வந்த
ஒளியெலாம் ஒருநொ டிக்குள்
மருவிய வண்டால் உன்றன்
முகத்தினில் வழிந்து பாயும் ;
பெருமையில் ஒருநாள் வாழ்ந்தாய் ;
பிரிவினை யுணர்ந்தாய் ; பின்னர்
வருமந்தச் சுரும்ப ரென்று
வழிபார்த்தாய் ; அந்தோ ! பேதை ! 3

காதலின் மின்னல் உன்னில்
கலந்திடு முன்னம் நீயோ
வேதனை அறியா உள்ள
விருவிருப் போடே வந்தாய்;
சாதலென் சொல்லைக் கேட்டுத்
தாங்கொணா வெறுப்புக் கொண்டாய்; 4
தீதினை அறியா உன்னைத்
தீய்த்ததக் காதற் றீயே!

ஒவ்வொரு நாளும் அந்த
உணர்ச்சியில் குன்றிக் குன்றிச்
செவ்விதழ் வண்ணம் மாறச்
சிரிப்பெலாம் எங்கோ தள்ளிக்
கவ்வையால் செடியில் நீயோ
காய்ந்தனை! உன்னைப் போல 5
ஒவ்வொரு நாளும் ஊரில்
உருக்குலை வாரும் உண்டே!

# அது யார் ?

வர்ணக் கலவைக் குழம்பெடுத்து
வானில் வாரிப் பூசுவதார் ?
சொர்ணம் உருக்கி அதிகாலை
சுடர்ஒளி மண்ணில் பாய்ச்சுவதார் ? 1

விலையில் மணியாம் ஒளிவீசும்
விண்மீன் வானில் இறைத்ததியார் ?
அலைகடல் நீந்தும் முழுமதியின்
அங்கம் தேயச் செய்ததியார் ? 2

முட்டைக் கருவைச் செப்பனிட்டு
மூக்கும் விழியும் ஆக்கியதார் ?
கட்டாந் தரைமேல் சிரித்திடுவெண்
காளா னுக்கார் விதைநட்டார் ? 3

மண்ணில் மலரும் பூக்களுக்கு
மதுவும் மணமும் புகுத்தியதார் ?
வண்ணப் பண்ணிசைக் குயிலினத்தின்
வாக்கைச் சீர்பெறத் திருத்தியதார் ? 4

கடையில் விற்கும் 'மல்கோவா'
கனியின் கொட்டைச் சிறைவீட்டில்
அடைத்துப் புழுவை உருவாக்கி
ஆதர வோடு காப்பதியார் ? 5

ஆட்டம் ஆட மயிற்குலத்திற்(கு)
அழகிய தோகை அளித்ததியார் ?
கூட்டைக் கட்டும் நுணுக்கமெலாம்
குருவிக் குலத்திற்(கு) உரைத்ததியார் ? 6

'இயற்கை' என்பார் அறிவுடையார்!
'இல்லை; கடவுள் செயல்!' என்பார்,
செயற்கு வேண்டிய செய்யாது
திண்ணை பேசும் வைதீகர்!

# இன்பச் சொத்து

மலர்க்காடு பசியடக்கும் நல்லுணவு; பூத்த
மலர்பாடும் தேன்வண்டு செவிக்குணவு; பாய்ந்தே
இலைதழுவி வருதென்றல் உடற்கின்பம்; தோகை
மயிலினத்தின் பெருநடமோ இருவிழிக்குத் தேனும்!
கொலைபயின்ற என்னின்பப் பெண்ணுளின் நீலக்
கூர்விழியைச் சருகினிலே விரைந்தோடித் தாவும்
கலையினங்கள் காட்டாவோ? பெருமகிழ்ச்சிக் கூத்து!
கவலையில்லை; கருத்தளிக்கும் தனிமைஇன்பச் சொத்தாம்! 1

மேட்டினிலே புதரிடையில் நீண்டுயர்ந்து சாய்ந்த
வெள்வேல மரக்கிளையில் காதலிகள் புட்கள்
பாட்டினிலே மெய்மறப்பேன்; பழச்சாற்றின் ஓடை!
இரவென்றும் பகலென்றும் பாகுபா டில்லை!
வீட்டினிலே இருப்பதென்றால் வேப்பங்காய்; சிற்றூர்
வீணர்களின் நச்சரிப்போ விளக்கெண்ணெய்; பூத்த
காட்டினிலே திரிவதென்றால் கற்கண்டாம்; ஆழ்ந்த
கருத்தளிக்கும் மகிழ்வளிக்கும் தனிமைஇன்பச் சொத்தாம்! 2

குளத்தினிலே தாமரைகள் குறும்புப்பெண் கூட்டம்!
குதித்துவரும் கார்எருமை பரிந்துவரும் தோழன்!
உளத்தினிலே வெறியேற நாண்மறைக்க அல்லி
உள்ளுக்குள் ளேசிரிக்கும்; வானத்தில் திங்கள்
வளத்தினிலே பகலெல்லாம் களித்திருந்த வெய்யோன்
மலைமறைய வாழ்த்துரைக்கும் முறைவந்த தென்றே!
களத்தினிலே வென்றிகண்ட வீரன்போல் என்றன்
கால்விட்ட வழிசெல்வேன்; தனிமைஇன்பச் சொத்தாம்! 3

வழியெல்லாம் புதுப்பூக்கள் மணம்வேட்கும் பெண்கள் !
வண்டினங்கள் மலிவென்றே ஏய்க்கவரும் ஆண்கள் !
விழியெல்லாம் இயற்கைதரும் விருந்துக்கே சொந்தம் !
வெறும்பேச்சு மற்றவைகள் எனக்கவலே வேண்டாம் !
அழிவெல்லாம் மற்ருென்றின் புதுப்பிறப்பு ! வற்ரு
அழகெல்லாம் எந்நாளும் குறைவதே இல்லே !
கழியெல்லாம் நீள்தாழை ; சிறுநண்டின் செங்கால்
கருத்திழுக்கும் ; கவலேஇல்லே ; தனிமைஇன்பச் சொத்தாம் ! 4

# தையும் பிறந்தது

செய்யும் விளைந்தது;
தையும் பிறந்தது ;
செங்கதிர் கீழ்த்திசை கண்டோம் ! – புதுச்
செங்கதிர் கீழ்த்திசை கண்டோம் !
பொய்கை புதர்செடி
பூக்கள் நிறைந்தன ;
பொன்னொளி எங்கணும் கண்டோம் ! – புதுப்
பொன்னொளி எங்கணும் கண்டோம் ! 1

மாவும் சுளைப்பலா
வாழையும் செந்நெலும்
வந்து குவிந்தது வீட்டில் ! – தை
வந்தது வந்தது நாட்டில் !
கூவும் குயிலினம்
கூவாக் குயிலினம்
தாவிப் பறந்தது மேல்வான் ! – ஒளி
தாவிப் பறந்தது கீழ்வான் ! 2

சிட்டுச் சிறுவரின்
செங்கைக் கரும்புகள்
தொட்டுப் பிசைந்தன பொங்கல் ! – அதை
இட்டு மகிழ்ந்தனர் பெண்கள் !
வெட்ட வெளியெலாம்
மெல்லியர் பண்ணிசை
மேவும் ; சிலம்பொலி கேட்கும் ; – தமிழ்
வெற்றி முரசெங்கும் ஆர்க்கும் ! 3

# தையும் பிறந்தது

செய்யும் விளைந்தது;
தையும் பிறந்தது ;
செங்கதிர் கீழ்த்திசை கண்டோம் ! – புதுச்
செங்கதிர் கீழ்த்திசை கண்டோம் !
பொய்கை புதர்செடி
பூக்கள் நிறைந்தன ;
பொன்னொளி எங்கணுங் கண்டோம் ! – புதுப்
பொன்னொளி எங்கணுங் கண்டோம் ! 1

மாவும் சுளைப்பலா
வாழையும் செந்நெலும்
வந்து குவிந்தது வீட்டில் ! – தை
வந்தது வந்தது நாட்டில் !
கூவும் குயிலினம்
கூவாக் குயிலினம்
தாவிப் பறந்தது மேல்வான் ! – ஒளி
தாவிப் பறந்தது கீழ்வான் ! 2

சிட்டுச் சிறுவரின்
செங்கைக் கரும்புகள்
தொட்டுப் பிசைந்தன பொங்கல் ! – அதை
இட்டு மகிழ்ந்தனர் பெண்கள் !
வெட்ட வெளியெலாம்
மெல்லியர் பண்ணிசை
மேவும் ; சிலம்பொலி கேட்கும் ; – தமிழ்
வெற்றி முரசெங்கும் ஆர்க்கும் ! 3

# எவர் செயல்?

செந்நெல் விளைந்ததுவும்
தீங்கரும்பு முற்றியதும்
இந்நாள் எவர்செயலோ தோழி? – நல்
இன்பப் பரிதிசெயல் தோழா! 1

வாடை பனிக்காற்று
வாய்இறுக்கும் ஊதைகுளிர்
ஓடி மறைந்ததென்ன தோழி? – உயிர்
ஓம்பும் பரிதிசெயல் தோழா! 2

காடெல்லாம் பூப்பூத்துக்
காய்கனிக ளேமுதிர்ந்து
தேடி அழைப்பதென்ன தோழி? – நாம்
செம்பரிதி வாழ்த்துதற்குத் தோழா! 3

தாமரையில் சேல்புரளத்
தாழ்வரைகள் எக்களிக்க
நாமடைந்த பேறென்ன தோழி? – தை
நற்பொங்கற் பெருநாளே தோழா! 4

ஆடை திருத்திப்பொன்
அணிதிருத்தி நம்பெண்கள்
பாடி மகிழ்வதென்ன தோழி? – நற்
பாற்பொங்கல் உண்டாடத் தோழா! 5

# அந்தி அழகு

ஓடைச் சலசலப்பில் – அழகு
ஒலிக்குது இன்னிசையாய்! – அதில்
ஆடுஞ்செவ் வல்லிமலர் – அழகை
அள்ளி இறைக்கு தடி! 1

கோதி உடல்கழுவிப் – பலநிறக்
குருவி குளிக்கையிலே – அழகின்
போதை தலைக்கேற – உடலுள்
புகுந்ததோர் புத்துணர்வு! 2

வான முகட்டி லெல்லாம் – பரிதி
வளர்த்திடு தீயழகில் – உயர்
ஞானம் பிறக்கு தடி! – மனத்தில்
நானற்றுப் போகு தடி! 3

மேற்றிசை வான மெல்லாம் – அழகு
விதவித மாகு தடி! – பெருங்
காற்றுடி போற்சுழன்று – அழகு
கண்ணைக் கவரு தடி! 4

அந்தி மயக்கினிலே – அழகு
அறிவுப் பெருஞ்சுடரை – என்
புந்தியில் மூட்டு தடி! – மனத்தில்
புதுமலர்த் தேன்பெருக் கே! 5

# நிலவே சொல் !

சொந்தநா டுனக்குண்டோ வெண்ணிலாவே ? – அது
சுதந்தர நாடோசொல் வெண்ணிலாவே ?
இந்தநாள் அடிமைவாழ்வில் வெண்ணிலாவே ! – நீ
இருக்கமனம் சகிப்பாயோ வெண்ணிலாவே ? 1

உப்புக் கடல்பிறந்த வெண்ணிலாவே ! – உனக்(கு)
உண்மைத் தந்தைதாயார்சொல் வெண்ணிலாவே ?
எப்புவியும் உன்வரவை வெண்ணிலாவே ! – மக்கள்
ஏன்விரும்பு கின்றூர்சொல் வெண்ணிலாவே ? 2

அலைகள் வெருண்டோடி வெண்ணிலாவே ! – கரை
அழிந்திட மோதுவதேன் வெண்ணிலாவே ?
கலைஞன் உனதொளியில் வெண்ணிலாவே ! – இன்பக்
கற்பனையில் நீந்துவதேன் வெண்ணிலாவே ? 3

உரிமை வழிதடுக்க வெண்ணிலாவே ! – வானில்
ஓடிவரும் மேகங்களை வெண்ணிலாவே !
எரிகொண்டு தாக்குவையோ வெண்ணிலாவே ? – அன்றி
இணங்கிப் பணிவாயோ வெண்ணிலாவே ? 4

கன்னியர் முகமெலாம் வெண்ணிலாவே ! – நீ
கவர்ந்த முறையாதோ வெண்ணிலாவே ?
அன்னவர் உடல்கரிய வெண்ணிலாவே ! – நீ
அனற்சுடர் வீசுவதேன் வெண்ணிலாவே ? 5

அங்கம் வளர்ந்தழிய வெண்ணிலாவே ! – நீ
அல்லற்படும் காரணமென் வெண்ணிலாவே ?
மங்கையர் மனம்நொந்து வெண்ணிலாவே ! – உனக்கு
வழங்கிய சாபமோசொல் வெண்ணிலாவே ? 6

# அழகுப் பெண்

சிலுசிலுக்கும் அதிகாலைக் கூண்டி னின்றே
செவிக்கின்பம் அளித்திட்டாள்; சிரித்தாள் பூவில்;
விலக்கினாள் இருள்திரையைக் கிழக்கு வானில்;
மெல்லநகை புரிந்திட்டாள்; பொற்றாள் சிந்தி
அலைகடலில் மணற்பரப்பில் மெருகை ஏற்றி
அள்ளுகின்றாள் உள்ளத்தை; தாழை பூத்துக்
கொலைவிழியைத் தூதனுப்பிச் சிரித்தாள்; நெஞ்சைக்
கொழும்புன்னைப் பல்காட்டிப் பறித்தே போனாள்! 1

ஓடையிலே முழவார்த்தாள்; வண்டாய்ப் பாடி
உயர்கவிதை தந்திட்டாள்; தென்ற லாகி
ஆடையினைப் பிடித்திழுத்தாள்; பனிப்புல் உச்சி
ஆயிரமாம் முகம்காட்டிச் சிரித்தாள்; தோப்புக்
கோடியிலே இசைமிழற்றி விளித்தாள்; சென்றேன்;
குளிர்பசுமை இலைக்காட்டில் மறைந்தாள்; பொய்கை
ஆடுகின்ற தாமரையில் சிரிப்புக் காட்டி
அருகிலெனை அழைத்திட்டாள் 'அழகுப் பெண்'ணாள்! 2

இனிக்கின்ற தமிழ்ப்பாட்டில் இருந்தாள்; மங்கை
இதழ்நடுவே எனையெட்டிப் பார்த்தாள்; உள்ளக்
கனிவேற்றும் இளங்குழவி நடையில் கண்ணில்
கட்டுண்டு கிடந்திட்டாள்; தமிழ வீரன்
நுனிவேலில் நடம்புரிந்தாள்; நடனப் பெண்கள்
நொடிப்பினிலே தவழ்ந்திட்டாள்; விளக்கில் நின்றாள்;
தனியான இடமவளுக் கில்லை; எங்குந்
தட்டுப்பட்டாள்; பொருளில் ஒட்டி நின்றாள்! 3

வான்கண்டேன்; மண்கண்டேன்; இதற்குட் பட்டு
வளர்வனவும் அசைவனவும் கண்டேன்; எங்கும்
நான்கண்டேன் அழகுதனை! இன்பம் கொண்டேன்!
நலிவெல்லாம் நொடிமாற்றும் மாயக் காரி
தேனடையைப் பிழிந்தூட்டி அவளைத் தேடித்
திரிவாரை வாழ்விப்பாள்; தனித்து வாழா
மாறுக எனைமாற்றி விட்ட அந்த
வளர்எழிலை மணந்தாரே வாழ்ந்தார் ஆமே! 4

# முதல் முத்தம்

தெருவினில் மண்ணில் குந்திச்
சிற்றிலை அமைப்பேன் ; மெல்ல
அருகினில் வருவான் ; ஒன்றும்
அறியான்போல் நடிப்பான் ; கையில்
தெருமண்ணை வாரி என்றன்
தலையினில் தெளிப்பான் ; இன்பம்
பெருகிட வெளிக்காட் டாமல்
‘சீச்சீச்சீ ! நாயே !’ என்பேன். 1

அறையொன்று கொடுப்பான் ; வீரிட்(டு)
அலறுவேன் ; அன்னை என்னைச்
சிறைசெய்வாள் ; மீண்டும் அந்தப்
பட்டியைத் தேடிச் செல்வேன் ;
மறைந்திருந் தோடி வந்து
வழியினில் சிரிப்பான் ; வேலி
நறைமலர் எனக்குச் சூட்டி
‘நாட்டியம் ஆடெ’ன் பானே !

கழுத்தினில் கயிற்றால் தாலி
கட்டுவான் ; உதிர்ந்த ஆலின்
பழுப்பினில் மண்ணை யிட்டே
‘உண்’ணென்று பரிவாய்ச் சொல்வேன் ;
‘முழுச்சுவை உணவில் இல்லை’
என்றெனை முனிவான் ; தேம்பி
அழுதிட இதழில் முத்தம்
அளித்தெனைத் தடங்கச் செய்வான்! 3

துன்பத்தை மாற்றும் அந்தத்
துடுக்கனின் முதல்முத் தத்தின்
இன்பத்திற் கீடு மண்ணில்
காட்டுவார் இல்லை! மெய்யில்
மன்னிய வடுவை யொக்கும்
மக்களின் இளமைச் செய்கை
என்னுள்ளம் அந்த நாளை
எண்ணியே ஏங்கு தந்தோ 4

# பெட்டையும் சேவலும்

கண்ணினை மூடி மூடிச்
சாகசம் செய்யும் பெட்டை ;
அண்மையில் சேவல் நிற்கும் ;
பட்டுடல் அழகை வாரிக்
கண்களால் உண்ணும் ; ஒற்றைச்
சிறகினைக் காலில் தட்டிப்
பண்மீட்டும் ! அடடா ! காதல்
பறிபோகும் ! இன்பம் ! இன்பம் ! 1

பிட்டினில் நெய்யைப் பெய்து
பிசைந்துண்ணு வார்போல் குள்ளப்
பெட்டையும் ஆணும் இன்பப்
பெருங்கடல் நீந்தும் ; ஆங்கோர்
வட்டையாம் சேவல் காதல்
மலிவென்று நெருங்கித் தொட்டுப்
பட்டதைக் கண்ட தோட்டப்
படர்முல்லை சிரிக்கும் ! அந்தோ ! 2

செடிநிழல் குளிர்மண் சீய்த்துச்
சேக்கொரித் திருக்கும் பெட்டை ;
அடியொற்றித் தொடர்ந்து சேவல்
பக்கத்தில் அமரும் ; நாட்டுக்
குடித்தனக் காரர் நாணக்
கொஞ்சிடும் ; ஊடல் தீர்க்க
அடிக்கடி கழுத்தை நீட்டி
ஆர்த்திடும் சிறக டித்தே ! 3

குப்பையைச் சிய்த்துச் சிய்த்துக்
குரல்காட்டும் ; பெட்டை உண்ண
ஒப்புக்குத் தானும் உண்ணும் ;
உடல்கோதி நேரம் போக்கும் ;
இப்படி இவைபோல் வாழ
அறியாத மக்கள் வாழ்க்கை
சப்பிட்டுப் போன தென்று
சொல்வதில் தப்பே இல்லை ! 4

# சிரிக்காதே தோழா !

ஊரெல்லாம் தூங்கிற்று ; நான்தூங்க வில்லை !
உயர்காதல் கொண்டவர்கள் உறங்குவதும் உண்டோ ?
கூரம்பு விழியுடையாள் ; சிறுவயதில் என்னில்
குடிபுகுந்தாள் ; நானவளின் அடிமையாய்ப் போனேன் !
பேரறியேன் ; ஊரறியேன் ; பேசியதும் இல்லை !
பிரிந்திருந்து வாழ்வதுவோ இனியாகா தென்றால் !
யாரென்று கேட்காதே ; முகம்பார்த்த தில்லை !
யாழ்இசையாள் ! என்உயிராள் ! சிரிக்காதே தோழா ! 1

செடியினிலே பூப்பூக்கும் ; கண்பறிக்கும் ; அந்தச்
சிறுபூவைக் கொய்துமணம் நுகர்ந்திடுவார் மக்கள் ;
செடிபூத்தல் இயற்கையடா ! செடிப்பூவின் நாற்றம்
திசையிருந்து நுகருவதே அறிவுடையோர் செய்கை !
மடியிருத்திக் கொஞ்சுவதே காதலென்று சொன்னால்,
வண்டினங்கள் அவர்பேச்சைச் செவிமடுக்க வேண்டாம் !
கடிமணமும் பூவாழ்வும் ஒரேநாளின் எல்லை !
என்காதல் வேறுவகை ! சிரிக்காதே தோழா ! 2

அவள்நினைவில் உயிர்க்கின்றேன் ; வாழ்கின்றேன் ; ஒவ்வோர்
அணுவினிலும் அவள்உருவைக் காண்கின்றேன் ; பொய்கைக்
குவளைஇதழ் அவளிதழே ! மலைச்சாரல் குன்றம்
குளிர்தென்றல் அத்தனையும் அவளைத்தான் காட்டும் !
தவளைகளின் நீளொலியில் அவளைத்தான் கேட்பேன் !
தமிழ்க்கவிதை ; தமிழூற்று ! வேறென்ன வேண்டும் ?
அவளின்றேல் நானில்லை ; அழகில்லை ; கண்கள்
அற்றவன்போல் ஆகின்றேன் ! சிரிக்காதே தோழா ! 3

தேன்வேறு ; சுவைக்கின்ற மக்களோ வேறு ;
சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் ; சிந்திக்க வேண்டும் !
காற்றில், நெருஞ்சிதைக்கும் மணல்வெளியில், வானில்,
கதிர்விளையாப் பெருங்காட்டில் அவளைத்தான் காண்பேன் !
மான்பாயும் ; புலிஅடிக்கும் ; மயிலாடும் ; அந்த
மங்கையின் நினைவின்றி மகிழ்ச்சிகண்ட தில்லை !
வான்நிலவில் அவளைத்தான் என்கண்கள் காணும் !
சிரிக்காதே ! அவளின்றேல் மலராதென் வாழ்வே !! 4

# இனிப் பிரியேன்

காார்சுற்றித் திரிகின்ற மலைகண்டேன் ; உன்றன்
கருங்கூந்தல் நான்கண்டேன்! காந்தளுன்றன் கைகள்!
வேர்சுற்றிக கிடக்கின்ற பாறைவந்த மான்கள்
வெருண்டோடும் பாம்பென்றே! உன்மருட்சி கண்டேன்!
ஊர்சுற்றிக் கிளம்புகின்ற பெரும்புகையாம் மேகம் ;
வானமோ தோல்உரிக்கும்; உன்குமுறல் கண்டேன்!
தேர்சுற்றி வந்தாலும் நிலைக்குவந்தே சேரும்!
செந்தமிழே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே! 1

காடளந்து பூச்சூடிக் கனிவாரித் தந்து
களிப்பூட்டும் சிற்றூறு தமிழ்க்கவிதை பாடும்!
பீடளந்து நின்றிருந்தேன் முல்லையிலே ஓர்நாள்;
பெண்மயிலே! ஆட்டிடையன் சாய்கிளையில் குந்தி
நீடளந்து குழலிசைத்தான்; நின்குரலே கேட்டேன்!
நிலைகுலைந்து போனனடி பசுகத்தக் கேட்டு!
நாடளக்கும் ஆறென்றும் கடல்வந்தே சேரும்!
நறுந்தொகையே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே! 2

கோடெல்லாம் தழைபோர்த்துன் பசுமேனி காட்டும்!
குளம்குட்டை நெறிகின்ற பொன்னலைமேல் நாட்பூ!
ஏடெல்லாம் உன்முறுவல்! எழுதாத பாட்டாம்!
எழில்விழியைக் கயல்காட்டும்! வண்டுகளோ கூந்தல்!
தோடெல்லாம் படபடக்கும்; தென்றலிலே கிள்ளை
துணையோடு கொஞ்சுமொழி உன்வாய்ச்சொல்! புட்கள்
காடெல்லாம் திரிந்தாலும் கூடுவந்தே சேரும்!
கலித்தொகையே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே! 3

கழைஉதிர்த்த முத்துகளுன் கண்ணீரைக் காட்டும்!
கடும்பாலைச் செந்தரையில் அங்குமிங்கு மாகத்
தழைஉதிர்த்த கிளைகளிலே வெண்கழுகுப் பேடை
தத்தளிக்கும்; கண்டென்றன் உளம்தத்த ளிக்கும்!
இழைஉதிர்த்த பொன்மணிபோல் ஆவாரை பூக்கும்;
இடர்வழியில் நான்தனித்து நடக்கின்ற போதும்
மழைஉதிர்த்த கார்போன்ற உன்முகமே தோன்றும்!
மணிப்புறவே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே!

சீறிவரும் அலைகாட்டும் உன்சுருண்ட கூந்தல்!
செழும்புன்னை மொட்டுகளுன் பல்வரிசை காட்டும்!
ஏறிவரும் சங்குகளோ கழன்றோடும்! உன்றன்
மெலிகையின் வளைகாட்டி என்னுயிரை வாட்டும்!
மீறிவரும் உன்விழிகள் கழிநீலம்! நெய்தல்
விரிந்தமணற் கரைபூத்த வெண்டாழைப் பூவில்
ஊறிவரும் தென்றலிலே உன்அணைப்பைக் காண்பேன்!
ஓவியமே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே! 5

பார்தழுவும் இளங்கதிரின் பொன்னொளியில் உன்றன்
பற்றுளமே காண்பனடி! பூப்புதரில் சிட்டு
நேர்தழுவும்; கண்கண்டு நெக்குருகும் நெஞ்சம்!
நெடுமாவின் செந்தளிரில் வண்டிரைத்த தாது
சீர்தழுவும் உன்மேனிப் பசலையெனத் தோன்றும்!
செம்பருத்திப் பூக்கொண்டைப் பொறிச்சேவல் வானக்
கார்தழுவும் கூரையிலே பெட்டையுடல் கோதும்!
கண்ணொளியே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே! 6

வயல்பாயும் மேதிகளோ புயல்பாயும் வானம்!
வண்டூதும் நீர்க்குவளை உன்விழியைக் காட்டும்!
கயல்பாயும் குளத்தினிலே கார்மறைத்த திங்கள்
கன்னியர்கள் நீர்ஆட்டம் மரைகளின்ஆர்ப் பாட்டம்!

மயல்பாயும் ; அங்குமுன்றன் மலர்முகமே தோன்றும் !
வாயூறிப் போகுமடி நீர்இறைப்போன் பாட்டு !
வெயில்பாயும் ! கொடிசோங்கும் ! உன்னிடையே தோன்றும் !
மெல்லியலே ! கலங்காதே ! இனிப்பிரியேன் நானே ! 7

சன்னலிடை ஏக்கத்தை அந்திநினை வூட்டும் !
தனித்தபுள் கூப்பாட்டைக் கேட்டுமனம் சோரும்!
பின்னலிடைக் காய்ந்துதிர்ந்த முல்லைகளோ விண்மீன் !
பிறைகாட்டும் உன்நுதலை ! உளம்காட்டும் நீள்வான் !
மின்னலிடை நினைவூட்டும் ! முகம்காட்டும் திங்கள் !
விடிநிலவோ நீயடையும் வேதனையைச் சொல்லும் !
இன்னலிடை வாழ்ந்தாலும் நாம்இணைந்தே வாழ்வோம் !
என்னுயிரே! கலங்காதே! இனிப்பிரியேன் நானே ! 8

# உயிர் வாட்டும் காலம்!

சூல்கொண்ட கருமேகம் மலையுச்சி தாவும்!
தோகைமயில் பூப்புதரில் துணையோ டடங்கும்!
பால்கொண்ட தாய்மடியை இறுகணைக்கும் குட்டி!
பசுமூங்கில் தேனடையச் சிதைத்துண்ட மந்தி
மால்கொண்ட கடுவன்வால் பாம்பென்றே அஞ்சும்!
மரக்கிளையில் கருங்குயில்கள் வாயபொத்தி நிற்கும்!
வேல்கொண்ட குறத்தியரின் விழிகண்ட வேடன்
மெய்ம்மறக்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்!

கூடடையும் இளம்பேடை ஆணின்வழி பார்க்கும்!
குளித்துடலை அழகுசெய்யும் ஓடையிலே சிட்டு!
பூடடையும் வண்டினங்கள்! புதரடையும் மான்கள்!
பொழுதடையும் செவ்வானில்! ஒளியேங்கும் மேற்கில்!
ஆடடையும் பட்டியிலே! அழகடங்கும் பூவில்!
அடர்காட்டில் இருளடங்கும்! ஒலியடங்கும் தோப்பில்!
காடடையும் இருள்திரையுள்! கண்ணடையும் சோர்வு!
கவலைதரும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்! 2

படைநலியச் செல்லுகின்ற யானைகளைப் போலக்
குளம்விட்டுப் பாய்ந்துவரும் எருமைகளின் கூட்டம்!
நடைமெலிய இடைமெலியப் பெண்கள்சாய்ந் தாடி
நடந்துவரும் நீர்மொண்டு! நடந்துவரும் அந்தி!
பெடைமெலியக் காறைத ஆண்கிளிகள் வீட்டின்
பெருஞ்சுவரின் பொந்தடையும்! கொம்படையும் சிட்டு!
கடைமெலிய என்கால்கள் நடந்தலுத்துப் போகும்!
கருத்தழிக்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்! 3

நீரடங்கும் ஏரியிலே! நிழலடங்கும் தன்னில்!
நீள்கழுத்துப் பெருநாரை கோரையுள் ளடங்கும்!
காரடங்கும் தொடுவானில்; இருள்தாவும் கீழ்வான்!
கண்ணடிக்கும் ஒன்றிரண்டு முன்எழுந்த விண்மீன்!
ஏரடங்கும் கொட்டகையில்! கன்றடங்கும் தூம்பில்!
இறைப்பினிலே அணிலடங்கும்! கூடடங்கும் சேவல்!
கூரடங்கும் விழிகளிலே! மனப்போ ரடங்கா!
குடிகெடுக்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்! 4

குளத்தினிலே தாமரையின் குதிப்படங்கும்! தக்கைப்
பூண்டிலைகள் காம்படங்கும்! அலையடங்கும் நீரில்!
களத்தினிலே பிணைஅடித்த பண்ணடங்கும்! வாய்க்கால்
கரையடங்கும் நீர்ப்பாம்பு! மரமடங்கும் நொள்ளை!
தளத்தினிலே குதித்தாடும் நிலாக்கூட்டம் பெண்கள்
தாழ்வாரத் துள்ளடங்கும்! அடங்கும்கைப் பிள்ளை!
உள்ளத்தினிலே மகிழ்வடங்கும்! நினைவடங்கும் தோளில்!
ஊரடங்கும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்! 5

அலையடங்கும் நீள்கடலில்! வளையடங்கும் நண்டு!
மணல்மேட்டின் அருகுள்ள நீண்டவளத் தெங்கில்
தலையடங்கும் வெண்காக்கை! தலையடங்கும் வானில்
முனைமடிந்த நீள்வாளாம் தாழைமடல் பூக்கத்
தலையடங்கும் கழிநீலம்; தலையடங்கும் இருளில்!
சாய்புன்னைக் கரையோரம் மணல்அடங்கும் ஆமை!
உலையடங்கும் கருமானின் கொட்டகைபோல் வானம்!
உருமாறும் அந்தியென்றன் உயிர்வாட்டும் காலம்! 6

# அலர் தூற்றில் என்னும்?

புள்ளோட்டிக் கொண்டிருந்தேன் பரண்மீ திருந்து;
புதுப்பூக்கள் கொய்துவர நீசென்றாய் அன்று;
கள்ளுண்ண விழைகின்ற புதுக்குடியன் போலக்
காடெல்லாம் சுற்றியெனை வந்தடைந்து சேர்ந்தார்;
தள்ளாம லாட்கொண்டேன்; நீளின்பம் தந்தார்;
தடைக்கல்லாய் வருமலைகள் நொடிப்போதில் தூளே!
முள்ளொத்த ஊரார்கள் அலர்தூற்றில் என்னும்?
மூளுகின்ற இன்பத்திற் கிணை இல்லை தோழி!

ஓடையிலே கண்சிவக்கக் குளித்திருந்தேன்: வந்தார்;
ஒருவருக்கும் தெரியாது மலர்கொய்து தந்தார்;
பேடையுடன் குலவுகின்ற ஆண்சிட்டைக் காட்டிப்
பேசாது பின்புறமாய் எனைத்தழுவி நின்றார்;
ஆடையினைப் பிடித்திழுக்கும் தென்றல்மேல் சீறி
அகப்பட்டான் கள்வனென்றார்; எனையணைத்துக் கொண்டார்;
போடிபோ! ஊரார்கள் அலர்தூற்றில் என்னும்?
பொங்கிவரும் இன்பத்திற் கிணையில்லை தோழி! 2

கண்பறிக்கும் மின்னல்வழி காட்டஎனைத் தேடிக்
காரிருளில் தூறலிலே மலைதாண்டி வந்தார்;
எண்ணெண்ணத் தெவிட்டாத தொகைப்பாட்டின் இன்பம்
என்சொல்வேன் அவர்மொழியே வரைதோளே தோழி!
மண்ணின்மேல் பேரின்பம் உண்டென்பார் வீணர்;
வான்காட்டி ஏய்க்கின்றார்; யாரொப்பு வார்கள்?
கண்டோடா தூரார்கள் அலர்தூற்றில் என்னும்?
காளைதரும் இன்பத்திற் கிணை இல்லை தோழி!

# கொடிய இரவு

அல்லி :

அக்கா ! அக்கா ! தாமரை அக்கா !
மலர்ந்த உன்முகம் வாடிய தென்னே ?
சிரித்த விழிநீர் சிந்துவ தேனோ ?
களிப்பும் சிரிப்பும் கண்ணின் வீச்சும்
ஆடலும் பாடலும் அழகிய பேச்சும்
எங்கே அக்கா ? ஏன் இப் படிநீ
வாடி வதங்கி மனஞ்சோர்ந் தனையோ ?
குளத்தில் அரசியாய்க் குடிபுறந் தந்தநீ
தளர்ந்து சோங்கித் தலைசாய்த் தனையோ ?

தாமரை :

இதுவும் கேட்பாய் ; இன்னமும் கேட்பாய் !
உன்னை வெறுத்தென் ? ஊரில் மாலை
பொற்றேர் பூட்டிய மாவின் கழுத்து
மணியின் ஓசை வரநகை சிய்க்கும்
பசலை மேனிப் பாவையைப் போல
வானம் நோக்கி வருமதி தாவி
உள்ளம் துள்ள ஒளிமுகம் காட்ட
இதழின் நடுவே இரண்டொரு பற்கள்
தோன்ற மிடுக்காய்த் தோன்று கின்றாய் ;
ஆனாலும் இரவில் அண்டை அயல்போல்
என்னரு கிருந்து போக்கா திரவைப்
பரிதி மேற்கில் படர்ந்தான் அந்தோ !

**அல்லி :**

காலையில் வந்தான் ; களிப்பைத் தந்தான் ;
மாலையில் பிரிந்தான் ! இதற்கேன் வாட்டம் ?

**தாமரை :**

வாயை மூடடி வாயாடிப் பெண்ணே !
நாளைக் கல்லவோ நல்லது கெட்டது
தோன்று முனக்குப் ? பிறர்துயர் தோன்றும் ?
துயர்ப்பட்டா லன்றி உலகம் தோன்றா(து) !
அண்டை அயலில் என்போன்ற பெண்கள்
பேசிச் சிரித்துப் பெரும்பெரும் கோட்டை
கட்டி இணைந்து களிப்பில் நீந்திக்
கிடக்கின் றார்கள் ! கிடக்கின் றார்கள் !
இணைந்து வாழா இரவோ
கொடிதடி ! யாதினும் கொடிதா கும்மே !

# மறந்தாரே தோழி !

பொன்னில்லான் நல்இளமை ! பூவில்லாப் பொய்கை !
பொருள்விளங்காப் பாடல்நான் ! எனைமறக்கக் கூடும்...
என்னுயிரே ! பூங்கொடியே ! அவர்சென்ற திக்கில்
எழுந்தெழுந்து பாய்ந்தோடும் நெஞ்சிற்கென் சொல்வேன் ?
என்னாட்டுத் தமிழ்நாட்டுப் பழம்பாடல் போல
எதிர்ப்பெல்லாம் தூளாக்கி நிலைத்திருக்கும் நாணல்
முன்னோடும் மலைப்பாம்பு நீளாற்று வெள்ளம்
முன்கொணர்ந்த மணல்மேட்டை மறந்தாரே தோழி ! 1

காரில்லாப் பெருவானம் ! விளைவில்லாப் புன்செய் !
கதிர்காணா இளந்தளிர்நான் ! எனைமறக்கக் கூடும்...
நீர்மூழ்கிக் குதித்தாடும் பலபெண்கள் போல
நிறைகுளத்துத் தாமரைகள் ! அக்குளத்தின் ஓரம்
வேர்பருத்த கூன்ஆலின் விழுதேறித் தாவி
விளையாடும் ஆண்குரங்கு ! கீழிருக்கும் மந்தி
நேர்தொங்கும் வால்பற்றி விழுதென்றே ஏறும் !
நெடுமரத்துக் குளிர்நிழல் மறந்தாரே தோழி ! 2

பால்நிலவு இல்லாவான் ! பசுமைஇலாச் சோலை !
பழுக்காத கொம்புநான் ! எனைமறக்கக் கூடும்...
வேலியிலே அங்குமிங்கும் விசிவிட்ட நீண்ட
மென்கயிறு பூங்கொடிகள் ! புதரெல்லாம் கோவை
சேல்விழியார் பற்களாம் பூக்காத முல்லை
சிரித்ததடி எனைக்கண்டு ! செத்தேபோய் விட்டேன் !
மாலூட்டும் எனதன்பர் வந்துவந்து போன
தோட்டத்து வேலியை மறந்தாரே தோழி ! 3

# உயிர் வாழாதே !

அதிகாலை வழிபார்த்தே இசைக்கும் புட்கள் ;
அழகுசெயும் கீழ்வானம் பரிதிக் காக ;
மதுதளும்பப் பேரரும்பு வண்டுக் கேங்கும் ;
வளைமூங்கில் தலைநிமிரப் பசுமை தோயக்
கதிர்வரவை எதிர்நோக்கும் ; மடிசுரந்து
கறவைகன்றை நினைந்துகத்தும் ; கவிதைப் பெண்ணே !
உதித்தோடும் நல்லெண்ண உருவைக் கண்டேன் ;
உன்வருகை காணுதென் நெஞ்சம் ஏங்கும் ! 1

பாதாளத் துள்ளிருந்து நண்டுக் கூட்டம்
பார்த்தேங்கும் மழைவரவை ; குளம்வாழ் ஆம்பல்
காதலினால் சிவப்பேறி மதியை நோக்கிக்
கடுந்தவசு செய்திருக்கும் ; சுருண்டெ ழுந்து
மோதுதிரை யற்றதினால் ஏங்கும் நாணல் ;
முழுமதியோ ஒளிக்காக வானில் ஏங்கும் ;
மாதவிப்பூ சோலைவான் மலைகள் ஆறு
வாடினஎன் கண்களுனைத் தேடித் தேடி ! 2

மாரிபெய ஏங்குகின்றார் உழவர் கூட்டம் ;
வளமைபெறத் தாவரங்கள் வானை நோக்கும் ;
காரிருளை ஒளிசெய்யும் நிலவுக் காகக்
காத்திருந்தே ஏங்குகின்றார் சிறுவர் ; நெஞ்சில்
ஈரமின்றிப் பிரிந்துசென்ற தலைவர் நாட்டை
எதிர்நோக்கி ஏங்குகின்றார் கன்னிப் பெண்கள் ;
கார்முகில்போல் பலவண்ணம் காட்டும் உன்றன்
கவின்முகத்தைக் காணுதென் உயிர்வா ழாதே ! 3

# அவளில்லை!

வருவேன் என்று மாலையிலே
வாக்குத் தந்தாள்; அவளைநான்
இரவில் சற்றும் தூங்காமல்
எட்டி எட்டிப் பார்த்திருந்தேன்;
ஒருவர் நடந்து வருவதைப்போல்
ஓசை கேட்க எழுந்திருந்தேன்;
தெருவில் இருந்த நாயொன்று
திண்ணை யோரம் படுத்ததுவே! 1

எண்ணு தெண்ணிச் சன்னலண்டை
இருந்தேன் இரவில் வழிபார்த்து;
பெண்ணுள் வந்தாள் வீட்டோரம்;
பேசா தெழுந்து தாழ்விலக்கித்
திண்ணை வந்து கூப்பிட்டேன்;
தேடிப் பார்த்தேன்; அவளில்லை!
சுண்ணும் பிடித்த பந்தற்கால்
ஆடி யசைந்து தோன்றியதே! 2

என்னைத் தேடி அவளினிமேல்
வாராள் என்று படுக்கையிலே
கண்ணை இறுக்கிப் படுத்திருந்தேன்;
கதவு திறக்க அவளென்றே
எண்ணிக் குதித்துக் களிப்பினிலே
இருகை விரித்து நான்பாய்ந்தேன்;
பெண்ணுள் இல்லை; விளக்கேற்ற
ஓடிற் றங்கோர் பெருச்சாளி! 3

மோசம் செய்தாள் எனையென்று
முணுமு ணுத்துப் படுத்திருந்தேன்;
பேசா தவளென் படுக்கையிலே
பின்புறம் வந்தாள்; உட்கார்ந்தாள்;
ஆசை மீற அவள்கையைத்
தாவி யணைத்தேன்; என்வீட்டுப்
பூசை நகத்தால் எனைக்கீறிப்
பொதுக்கென் றோடிப் போயதுவே! 4

# என்னேடி கோபம்?

பள்ளிக்குத் தோழருடன் நான்செல்லும் வழியில்
பலவண்ணப் பூவிருந்துன் அழகுமுகம் காட்டிக
கொள்ளைகொண்டாய் என்னுள்ளம்! நீவாழி என்றும்!
குயிலுருவில் பசுங்காவில் குரல்காட்டி அழைத்தாய்;
பள்ளத்தில் சலசலக்கும் காட்டாருய் வந்தாய்;
பாடிஎனை மகிழ்வித்தாய்; யாப்புவகை சொன்னுய்;
கள்நெகிழும் பூப்பறித்துன் தலைசூட்ட வந்தேன்
கவின்முகத்தை முறுக்குகின்ருய்! என்னேடி கோபம்? 1

புள்ளிசைக்கும் விடிகாலை உனைத்தேடி வந்தேன்;
புதரிருந்து மணம்வீசிச் சிரித்துவர வேற்ருய்;
கள்வெறியை எனக்கேற்றும் உன்விழியால் கெஞ்சிக்
'கவலைஏன்? உனைமறவேன்!' என்றதிது தானு?
முள்நிறைந்த காடெல்லாம் ஆய்ந்தாய்ந்து தேடி
உன்தலையில் முடிப்பதற்குப் பூப்பறித்து வந்தேன்;
கள்ளவிழிப் பெண்ணரசே! என்கையை விலக்கிக்
கண்ணெங்கோ திருப்புகின்ருய்! என்னேடி கோபம்? 2

மாலையிலே செவ்வானச் சுழல்பரிதி யாகி
வாரிஎனைச் சேர்த்தணைத்தாய்; நான்கலங்கும் வேளை
சாலையிலே வீசுகின்ற தென்றற்காற் ருகித்
தமிழ்த்தேனைப் பிழிந்தூட்டி இன்பத்தைச் சேர்த்தாய்;
மாலாகி விட்டனடி! உனைமறக்கப் போமோ?
வண்ணமலர் உனக்காக இதோபறித்து வந்தேன்;
வேல்போன்ற விழியாளே! நான்செய்த தென்ன?
வெறுக்கின்ருய் என்பூவை! என்னேடி கோபம்? 3

ஆற்றோரம் மணற்பரப்பில் தனித்திருந்தேன்; வந்தாய்;
அணைத்துநிலா முகங்காட்டி என்அறிவைப் பறித்தாய்;
காற்றாட வயல்வெளிக்கு நான்போகும் போது
கைகோத்துப் பலபேசி எனைத்தொடர்ந்து நின்றாய்;
மாற்றில்லாச் செம்பொன்னே! என்உயிரே! அழகே!
மறந்துன்னை ஒருநாளும் தனித்திங்கு வாழேன்!
நாற்றஞ்சேர் பூப்பறித்துன் தலைசூட்ட வந்தேன்;
நான்மாட்டேன் என்கின்றாய்! என்னேடி கோபம்? 4

# ஒரு வார்த்தை

பார்க்கின்ருய் பார்க்காமல் நான் இருக்கும் பக்கம் ;
பாட்டிசைத்துக் கொள்கின்ருய் தாழ்குரலில் ; அடடா !
வார்த்தையை நினைக்கின்ருய் ; ஆனாலும், நீதான்
வாய்திறவா திருக்கின்ருய் ஈதென்ன பசப்போ ?
மோர்ச்சோற்றைக் கண்டலையும் பூனையைப்போல் உள்ளம்
முந்துதடி உனைத்தாவி ; பொறுப்பென்மேல் இல்லை !
வார்த்தெடுத்த பொற்பாவாய் ! என்னுயிரே ! அழகே !
மயங்காமல் ஒருவார்த்தை சரியென்று சொல்லேன் ! 1

வழிமறித்து நிற்கின்ருய் வேலியிடை நீதான் ;
வாவென்று பூக்கையால் அழைக்கின்ருய் ; அங்கும்
விழியாலே சிரிக்கின்ருய் ; நானுன்னைத் தாவ
வேலுருவில் மறைகின்ருய் ; என்னுயிரே ! அழகே !
சுழித்திழியும் ஆற்றில்உன் முணுமுணுப்புக் கேட்டேன் ;
தொலைந்ததடி என்துன்பம் ; ஆனாலும், ஒன்றும்
மொழியாது நிற்கின்ருய் ; பொறுப்பென்மேல் இல்லை !
மொய்குழலே ஒருவார்த்தை சரியென்று சொல்லேன் ! 2

வண்ணமலர் நாற்றத்தை வாரிவந்து காலை
மகிழ்வூட்டி என்னுடலில் வலிமைசேர்க் கின்ருய் ;
புண்ணான மனத்திற்குப் புதுப்பாட்டுப் போலப்
பொதியமலை மீதிருந்து தவழ்ந்துவரு கின்ருய் ;
உண்ணுதற்கும் நினைவில்லை உனைக்காணுந் தோறும் ;
ஆனாலும், உனக்கேனோ பொறுப்பில்லை என்மேல்
மண்ணீரம் அகப்பட்ட அரசிலைபோல் ஆனேன் !
வாழ்விக்க ஒருவார்த்தை சரியென்று சொல்லேன் ! 3

மன்னியழி யாதிருக்கும் என்னுயிரே! அழகே!
வாழ்விற்கு வளம்சேர்க்கும் உயிர்ச்சத்து நீதான்;
உன்னைவிட்டுத் தனித்தினிமேல் இவ்வுலகில் வாழ
ஒருநாளில் சிறுபோழ்தும் என்னாலே ஆகா;
என்காதல் சின்னாளில் மலைமீது மாலை
எரிந்துவிழும் பரிதியைப்போல் நாடறியத் தோன்றும்;
முன்கூட்டிச் சொல்கின்றேன்; பசப்பெல்லாம் வேண்டாம்!
முகம்திருப்பி ஒருவார்த்தை சரியென்று சொல்லேன்! 4

# வரச்சொல்லடி !

அந்தி ஒளியிழக்கும் ! பொற்கதிரைச் செவ்வானம்
சிந்தி மரக்காட்டைச் செங்காடாய் ஆக்கும் !
அணையாப் பெருந்தீ மலைஉச்சி எங்கும் !
துணைஅழைக்கும் பெண்மான்! துணையழைக்கும் பெட்டை !
முணுமுணுக்கும் நீள்ஓடை; மந்தி முணுமுணுக்கும் !
தேன்பாயும் சாரல் ! திசைபாயும் நல்லருவி !
மான்தேடி வந்தான் ! உயிர்பறித்தான் ; நாணிழந்தேன் ;
நாளோ டுடன்பிறந்த நான்! 1

நொச்சி மணக்கும் ; நுணமணக்கும் வேலியிலே !
உச்சிக்குக் கீழே உயரும் விடிவெள்ளி !
கீழ்வான் இருள்நழுவும் ! கீற்றுக்கீற் றுய்வானில்
செம்மை படரும் விடியற் சிறுகாலை
இன்பக் குளிர்காற்றுப் போல எனதருகில்
வந்தான்; உயிர்பறித்தான்; வாழ்வளிப்ப தாய்ச்சொல்லிச்
சென்றான்; எனதுயிரும் சென்ற தவனோடே !
கண்டால் வரச்சொல் லடி ! 2

வளைந்தோடும் ஆற்றின் மணற்கரையில் தாழ்ந்த
கிளையூசல் ஆடிற்றுப் பச்சைப் பசுங்கிளி !
கோணற் கிழவி தலைபோலப் பூத்திருக்கும்
நாணற் பெருங்காட்டில் நாரை குரல்காட்டும் !
அன்றலர்ந்த பூவை அணைத்துவரும் தென்றல்போல்
வந்தான்; உயிர்பறித்தான்; வாழ்வளிப்ப தாய்ச்சொல்லிச்
சென்றான்; நினைவெல்லாம் சென்ற தவனோடே !
கண்டால் வரச்சொல் லடி ! 3

# நீ இன்றேல்....!

அந்தியிலே தொடுவானம் தீப்பற்றி வேகும்
அழகெண்ணிக் கொண்டிருந்தேன்; கூடுவரும் புட்கள்;
மந்தையிலே ஆனிரைகள் கிளப்பிவிட்ட தூசி
மங்கிவரும் செவ்வொளியில்; மங்கிவரும் வானம்
சிந்தவிட்ட ஒளிமணியாம் உடுக்கூட்டம்! தம்மைத்
தேடிவரு நிலவைஎதிர் தேடிவரும் முன்னே;
சிந்தையிலே உன்நினைவு தெவிட்டாத இன்பம்!
என்னுயிரே! நீஇன்றேல் சீரழியும் வாழ்வே! 1

சிட்டிணைகள் தோட்டத்து முருங்கையிலே கொஞ்சும்;
சிறுகுஞ்சு தாய்நோக்கி வாய்திறந்து கத்தும்;
பட்டுடலை அழகுசெய்யும் ஓடையிலே காகம்;
இலவங்காய் வால்முளைத்துப் பறப்பதைப்போல் கிள்ளை
நெட்டாகக் கல்வீட்டுப் புறச்சுவரைத் தாவும்;
நீர்நிலையில் அல்லிமலர் மலர்நிலவுக் கேங்கும்;
ஒட்டாதோ நமதுள்ளம்? நான்செய்த தென்ன?
என்னுயிரே! நீஇன்றேல் உருக்குலையும் வாழ்வே! 2

வந்துடலைத் தொட்டணைக்கும் மலர்க்காட்டுத் தென்றல்;
உன்னணைப்பின் இன்பத்தை அதுசெய்வ துண்டோ?
சந்திருந்து குரலெழுப்பும் பூரிப்பில் ஆந்தை;
தழைக்காட்டுப் பழமரத்தைத் தாவிவரும் வௌவால்;
பொந்திருந்து வக்காவோ இரைதேடப் போகும்;
பொரிவண்டு மலர்க்காட்டில் புகுந்தெழுந்து பாடும்;
புந்தியிலே உன்நினைவு வற்றாத இன்பம்!
என்னுயிரே! நீஇன்றேல் புரையோடும் வாழ்வே! 3

# என்றும் மறவேன்

சாலையிலே எதிர்ப்பட்டாய்; நாணி நின்றாய்;
தழைமரத்தின் குளிர்மையுன் கண்ணில் கண்டேன்;
மாலையிலே கடலோரம் மதகின் மீது
வழிபார்த்து மிகஏங்கி நின்றேன்; வந்தாய்;
சேலையிலே முகம்பொத்து மகவைப் போலத்
தேம்பியழு திட்டஎனை அணைத்தாய்; பூக்கும்
காலம்போல் நெஞ்சத்தில் இன்பம் சேர்த்தாய்;
கவிப்பெண்ணே! உனைவாழ்வில் மறவேன் என்றும்! 1

இடம்கொடுத்தேன் என்மனத்தில்; அவளும் நானும்
இணைந்திருந்தோம் புருப்போல; காய்ந்த பாலின்
குடமுடைத்தாள் நிலைஇல்லாள்; உண்மைக் காதல்
கொண்டார்க்கு வேறென்ன உலகில் வேண்டும்?
அடிபட்ட காயைப்போல் ஆனேன்; நெஞ்சில்
அலுப்புற்றேன்; பித்தனைப்போல் அலைந்தேன்; என்றன்
மடிபிடித்து வற்றாத காதல் தந்து
வாழ்வித்தாய்! உனைஎன்றும் மறவேன்; வாழி! 2

உண்ணும்போ தென்னருகில் இருக்கின்றாய்நீ;
உறங்குகின்ற போதுடனே உறங்கு கின்றாய்;
கண்விழிக்கும் முன்னெழுந்து குயிலாய்ப் பாடிக்
களிப்புளத்தில் சேர்க்கின்றாய்; மறவேன் என்றும்!
பெண்ணரசே! நீஇன்றேல் இன்பம் சொட்டும்
பேச்சில்லை; மூச்சில்லை; கவிதை பாடும்
எண்ணத்திற் கிடமில்லை; பொருளைத் தேட
இருட்டறையில் நுழைந்தவன்போல் தவிக்கின் றேனே! 3

தனிமையிலே கலங்குகின்ற வேளை வந்து
தழுவுகின்றாய்; வறுமையில்நான் தளிர்போல் வாட
இனியமொழி புகல்கின்றாய்; உலகில் யாரே
என்னைப்போல் கொடுத்துவைத்தார்? பெண்டு பிள்ளைக்
கனிவினிலே உன்னுரையின் கனிவைக் காண்பேன்;
கள்வெறியை ஊட்டுகின்ற உன்றன் கண்கள்
இனிமையிலே இவ்வுலகம் எதிர்த்திட் டாலும்
எதிர்த்திடுவேன்! உனைஎன்றும் மறவேன் நானே! 4

# எந்நாளோ ?

பெட்டியிலே சுருண்டகரும் பாம்பைப் போலப்
பின்னிவிட்ட சடையவளுக் கிருக்கு மென்றும்;
எட்டிப்பார்த் தேசிரிக்கும் சீய்த்து வானில்
எழுமதியாய்க் கொண்டைமலர்; கறுப்புச் சாந்துப்
பொட்டிருக்கும் முழுநிலவாய்; அவள்மை தோய்ந்த
புருவத்தின் நெளிவினிலே, அடடா! இன்பம்
கொட்டுகின்ற விழிபாயும்; என்றன் உள்ளச்
சோர்வகற்ற அவள்வருநன் னாளெந் நாளோ? 1

பல்லிருக்கும் மாதுளையின் வித்தைப் போலப்;
பழச்சாற்றைப் பிழிந்தெடுத்துத் தேனில் சேர்த்த
சொல்லிருக்கும் அவள்வாயில்; என்பேர் கேட்டுத்
துடிதுடிக்கும் செவ்விதழ்கள்; கலையின் நுட்பம்
வல்லார்போல் கழுத்திருக்கும்; உடல்நோ யூட்டும்
வாட்டத்தைத் தீர்க்கஅவள் முனையும் போது
கல்மலையாய் ஒன்றுவந்து குறுக்கே நிற்கும்;
களிப்பூட்ட அவள்வருநன் னாளெந் நாளோ? 2

இடையிருக்கும் துடியைப்போல்; எடுத்த மார்பென்
இதயத்தை அரித்தரித்து நினைவைத் தேய்க்கும்;
நடையிருக்கும் மயிலைப்போல்; முறுவல் பாயும்
நல்லிதழில் குடியிருக்கும் தமிழ்த்தேன் இன்பம்;
கடைக்கண்ணில் அருளிருக்கும்; அவள்தன் னுள்ளம்
காத்திருக்கும் என்வரவை; பிரிவில் நெஞ்சம்
துடிதுடிக்கும் நிலைகண்டே என்னைத் தேடித்
தோகையவள் அணைக்கவரு நாளெந் நாளோ? 3

உள்ளத்தில் அணைத்தென்னை இதழில் இன்பம்
ஊட்டுகின்ற நினைவிருக்கும் அவளுக் கென்றும் ;
கள்ளமிலா அவள்முகத்தின் எழிலில் என்றன்
கற்பனையின் ஊற்றிருக்கும் ; வாழ்க்கைத் துன்பப்
பள்ளத்தில் வீழாது தடுத்தாட் கொள்ளும்
பரிவிருக்கும் ; விழிப்பிருக்கும் ; கார்கா லத்து
வெள்ளத்தைப் போலவள்மேல் வெறிகொண் டோடும்
விருப்பத்தைத் தணிக்கவரு நாளெந் நாளோ ? 4

உடையிழந்தோன் கையைப்போல் என்னைத் தாவும்
உணர்விருக்கும் ; விழிகுளிரும் ; முல்லைத் தேனின்
அடைஇதழ்கள் கசிந்தின்பம் சொட்டச் சொட்ட
அத்தானென் றெனையழைக்கும் ; மார்பு விம்மும் ;
மடைகாக்கும் நாரையைப்போல் நான்வந் தேகும்
வழிபார்க்கும் பொற்பிழம்பு ; ஆனா லென்றன்
உடைமனத்தின் புண்ணாற்றிக் கவிஞர் நாட்டில்
உயர்த்தியெனை வாழ்விக்கும் நாளெந் நாளோ ? 5

# துணியவில்லை !

அந்தியிலே வருகின்றாள் என்னைத் தேடி ;
அலைமோதும் என்நெஞ்சிற் காசை காட்டக்
குந்துகிறாள் என்னருகில் ; நான்தி ரும்பக்
குனிந்தெழுந்து நடக்கின்றாள் ; குறும்புக் காரி !
'இந்தாரும்' என்கின்றாள் தமிழ்த்தேன் ஊறும்
இதழ்நீட்டி ; நானெழுந்தேன் ; என்றன் உள்ளத்
தொந்தரவைப் பலநாளாய் அறிந்தி ருந்தும்
குறைமுடிக்க அவளேனோ துணிய வில்லை ! 1

கடலோரம் நான்சென்றேன் அமைதி தேடக் ;
கைக்காரி அவள்வானில் தவழ்ந்து வந்தாள் ;
உடைந்தஎன் மனம்பின்னும் ஊக்கம் கொள்ள
உட்கார்ந்தாள் என்னருகில் ; அடடா ! அந்தக்
கடைக்கண்ணால் எனைப்பார்த்தாள் ; தமிழ்த்தேன் ஊறும்
கண்வீச்சில் அவள்செய்யும் கொடுமை யெல்லாம்
நொடிப்போதில் நான்மறந்தேன் ; இன்னும் ஏனோ
நுண்ணிடையாள் குறைமுடிக்கத் துணிய வில்லை ! 2

படுக்கையில் புரண்டிருந்தேன் ; அவளப் போது
பலநாளாய்ச் செய்துவரும் கொடுமை எண்ணி
நடுவேளை என்னருகில் வந்தாள் ; 'சற்று
நான்பாடும் பாட்டொன்றைக் கேட்பா' யென்றாள் ;
'முடியாது போ' என்றேன் ; என்றன் நெஞ்சில்
மூண்டிருக்கும் துயரத்தை மாற்ற எண்ணிக்
'கொடுக்கின்றேன் இத'மென்றாள் ; குதித்தெ ழுந்தேன் ;
குறைமுடிக்க அவளேனோ துணிய வில்லை ! 3

அவளெனக்குச் செய்துவரும் கொடுமை எண்ணி
ஆற்றினிலே குளித்திருந்தேன் ; அங்குப் பூத்த
குவளையிலே முகங்காட்டி 'வா வா' என்று
கூப்பிட்டாள் ; நான் 'மாட்டேன்' என்றேன் ; 'உன்றன்
கவலையினை மாற்றுகின்ற இதழி தோபார் !
காலத்தைத் தாழ்த்தாதே ! வா ! வா !' என்றாள் ;
தவளையைப்போல் தாவியவள் மேலே பாய்ந்தேன் ;
குறைமுடிக்க அவள்ஏனோ துணிய வில்லை ! 4

# நிலைத்து நிற்குமோ ?

பள்ளிக் கிருவரும் இணைந்து போனும் ;
பலப்பல பேசிப் பாட்டையில் களித்தோம் ;
வெள்ளம் கண்ட நாரையைப் போல
விரைந்தோடி விட்டாய்! மறக்குமோ நெஞ்சம் ? 1

பொருளும் அழகும் மறைத்ததோ கண்ணைப் ?
பூக்கொய்த போழ்து நீசொன்ன யாவும்
இருள்விளக் கென்றுநான் களித்தேன் ; மோசம்
ஏன்செய் தாய்நீ ? பெண்களுக் கழகோ ? ௨

வடமலை யொருநாள் வயல்வெளி யாகும் ;
வயலும் ஒருநாள் பெருமலை யாகும் ;
கடலும் ஒருநாள் கல்மே டாகும் ;
காடும் ஒருநாள் பேரூ ராகும். 3

மாயும் அழகின் செருக்கால் என்கை
மறுத்ததென் நெஞ்சை உறுத்துதல் காண்பாய் ;
வேயிரு தோளும் விம்மும் மார்பும்
விரிமலர் முகமும் நிலைத்து நிற்குமோ ? 4

நீயும் ஒருநாள் கிழவி யாவாய் ;
நினைப்பாய் அன்றே உன்பெரும் தவற்றை ;
சாயும் உலகில் யாவும் ஒருநாள் ;
என்தமிழ்ப் பாட்டுத் தலைதாழ்த் தாதே ! 5

# எட்டிப் பழமோ ?

காற்றில் பறக்கும் உடையிறுக்கி -அந்தக்
கறுப்பி எடுத்தனள் நெற்பயிரை ;
சேற்றில் புதைந்த அடிபெயர்த்தாள் ;-தமிழ்த்
தீஞ்சுவை பாய்ச்சினள் ; நாற்றுநட்டாள் ;
காற்றில் குலையும் தலையழகும் ,-அவள்
கட்டுடல் நாவல் கருநிறமும்
ஊற்றுநீர் கண்ட வெயில்மான்போல்-சுப்பன்
உண்டுநின் றனவன் கண்ணிரண்டால் ! 1

சேலையுள் விம்மிடு மாதுளைத்தோள்-அவள்
செந்நிற மேறிய பல்வரிசை
நூலிடை செம்பொட்டுக் காதோலை-உடல்
நோய்செய்யச் சாலையில் காத்திருந்தான் ;
மாலைக் கதிரொளி மங்கமங்கக்-குள்ள
வாத்தைப் பழித்தவள் வந்து சேர்ந்தாள் ;
' வேலை முடிந்ததா ? சற்றுநின்றே-என்றன்
விண்ணப்பம் கேளடி !' என்றுரைத்தேன் ! 2

உள்ளத்தைக் கண்ணில் அறிந்தஅவள்-ஏனோ
ஒன்றும் அறியாதாள் போல்நடித்தாள் ;
கள்ளச் சிறுநகை பூத்துநின்றாள் ;-கண்ணை
மேலே உயர்த்திக் கடைக்கணித்தாள் ;
'துள்ளும் இளமானே ! கார்முகிலே !-பழத்
தோப்பே ! இளங்கோவே ! நீள்நிலவே !
உள்ளம் பறித்தனை ! கொள்ளேடி !-என்றன்
உடலும் இதோவுனக்(கு)' என்றணைத்தான் ! 3

கண்ணில் இருகண்ணை ஒற்றியொற்றி-அந்தக்
காலை அவளுடல் சேர்த்தணைத்தான் !
'விண்ணைக் கொடுத்தாலும் வேண்டுவமோ ?-புவி
மீதர சாள வேண்டுவமோ ?
மண்ணைப் பிளக்கும் இடிவிழினும்-காதல்
வாழ்வினில் மாழ்குவம்' என்றுரைத்தான் ;
கண்ணில் சிறுநகை காட்டியவள்-அந்தக்
காலை இசைக்கொரு தாளமிட்டாள் ! 4

தாயின் உயிர்போகு தென்றாலும்,-சொந்தத்
தந்தை உயிர்போகு தென்றாலும்
வேயிரு தோளை யணைந்திருப்பார் !-சிறு
வேதனை கொள்ளார் ! மிகையலவே !
காயும் முழுமதி யவள்முகத்தே-படர்
கார்முகில் கண்டான் ; துடிதுடித்தான் ;
'நாயே ! ஈ தென்னடி வீண்கலக்கம் ? -கொடு
நஞ்சும் உனக்காக உண்ப'னென்றான் ! 5

'உள்ளக் கலப்பினில் என்றுண்டே-நாம்
ஒன்றுபட் டோம்; பிறர் கண்டுவிட்டால்
தள்ளுவர் உங்களைச் சாதிவிட்டே !-பல
சாத்திரம் சொல்லி இடித்துரைப்பார் ;
துள்ளுவர் ஈனச் செய்கையீதென்(று)-உமைத்
தூற்றுவர் நம்மூர் மனித'ரென்றாள் !
உள்ளம் குழம்ப எழுந்திருந்தான்;-'கட்டை
உத'றென்று சொன்னது குப்பனுள்ளம் ! 6

'எட்டிப் பழமோ பறைச்சிஇதழ் ?-மன
இன்பத்திற் கேதடி சாதிமதம் ?
மொட்டுப் பலவகை யானாலும்-அதன்
முருகு தருஞ்சுவை ஒன்'றென்றான் !

எட்டிப் பரந்ததே இச்செய்தி-தீயால்
எரியும் வீட்டுக் கரும்புகைபோல்!
குட்டை மனத்தவர் சூழ்ச்சியெல்லாம்-குப்பன்
குன்றி லடிபடும் பானையாச்சே! 7

# அது ஒரு நாள்

காளை வால்பற்றி முதுகினில் தாவிக்
கைதட்டிக் கரணம் அடித்ததும் ஒருநாள்!
கோளரி போன்றஎன் சோட்டுச் சிறுவரின்
கும்பலில் எங்கும் திரிந்ததும் ஒருநாள்! 1

மரத்தினில் ஏறி அம்பெனப் பாய்ந்து
மலர்க்குளம் அதிரக் குதித்ததும் ஒருநாள்!
கரத்தினில் தாமரைப் பூக்களைக் கொய்து
கன்னியர்க் கீந்து களித்ததும் ஒருநாள்! 2

அல்லியின் தண்டைக் கிள்ளி யொடித்தே
அழகுப் பூமாலை தொடுத்ததும் ஒருநாள்!
செல்விஎன் அத்தை மகள்கழுத் திட்டுச்
சிரித்துக்கை தட்டிக் குதித்ததும் ஒருநாள்! 3

தோப்புள் நுழைந்து மாங்கனி கவரத்
தோகை யவள்முது கேறிய தொருநாள்!
மாப்பிள்ளை பெண்ணுமாய் நாங்கள் இருவரும்
வாழ்க்கை நடத்திக் காட்டிய தொருநாள்! 4

கள்ளமில் என்றன் இளமைத் துடுக்குகள்
கட்டாந் தரைப்புல் லானது வாழ்வில்!
உள்ளத்தில் இன்பம் ஊட்டிய நாட்கள்
ஒவ்வொன் றாய் வந்தின்று கண்முன்னே நிற்கும்! 5

நன்று தீதறியா இளமனந் தன்னில்
நாளும் வளர்த்தனள் காதல் பயிரை;
இன்றவள் யாரோ? எனக்கே துரிமை?
என்னே! உலகக் கொடுமையும் என்னே! 6

# காய்ந்தென்ன? பேய்ந்தென்ன?

பண்ணுண்டே சாரலில்
பாட்டுண்டே ஓடையில்
உண்ண உணவேனோ அத்தான்?-நமக்(கு)
உண்ண உணவேனோ அத்தான்? 1

கிழங்குண்டு காடெல்லாம்
கிளையெல்லாம் தேனுண்டே
உழவுத் தொழிலேனோ அத்தான்?-நமக்(கு)
உழவுத் தொழிலேனோ அத்தான்? 2

கொக்குக் குருகுண்டே
குன்ற விலங்குண்டே
பக்கத் துறவேனோ அத்தான்?-அக்கம்
பக்கத் துறவேனோ அத்தான்? 3

வட்ட நிலவுண்டே
பட்டப் பகல்போலே
இட்ட விளக்கேனோ அத்தான்?-எண்ணெய்
இட்ட விளக்கேனோ அத்தான்? 4

நிலக் கடலுண்டே
நீள்தாழைக் காடுண்டே
காலை மலர்ந்தென்ன அத்தான்?-வானம்
காய்ந்தென்ன பேய்ந்தென்ன அத்தான்? 5

நீயுண்டு நானுண்டு
நெஞ்சினில் அன்புண்டு
தீயென்ன செய்திடும் அத்தான்?-கொடுந்
தீயென்ன செய்திடும் அத்தான்? 6

தோப்புத் துரவுண்டு
தூமலர்க் காடுண்டு
காப்புடை இல்லமேன் அத்தான்?-நமக்குக்
காப்புடை இல்லமேன் அத்தான்? 7

# நினைப்பேனோ இல்லை?

எனைக்கண்டு முகம்மலரும் ; நடைமாறிப் போகும் ;
இதழிடையே புன்முறுவல் நடமாடும்; வேலின்
முனைபாயும் என்விழிமேல் ; வாய்திறக்க ஆ! ஆ!
முருங்கைப்பூ மொட்டுக்கள் வரிசையாய்த் தோன்றும் ;
நனைசுவரின் ஓரத்தே பூத்திருக்கும் முல்லை
நல்லரும்பை எடுக்கின்ற வேளையிலும் என்மேல்
நினைவிருக்கும் ; கண்சிரிக்கும் ; ஆனாலு மென்றன்
குறைதீர்த்து வாழ்விக்கும் நினைப்பேனோ இல்லை ? 1

நாரெடுத்துப் பூத்தொடுத்துக் கொண்டிருப்பாள் ; தம்பி
நகர்ந்துவந்து பின்புறமாய் எழுந்திருந்து நிற்க
மார்போடு சேர்த்தணைப்பாள் ; கன்னத்தில் முத்த
மழைபொழிவாள்; கடைக்கண்ணால் சிரித்தென்னைப்பார்ப்பாள் ;
"ஊருக்குப் போவோமா ?" எனமெல்லச் சொல்லி
உடன்பாட்டைத் தெரிவிப்பாள் ; உள்ளோடிப் போவாள் ;
கூர்விழிக்கோ எனைக்கண்டால் கொண்டாட்டம்! ஆனால்
குறைதீர்த்து வாழ்விக்கும் நினைப்பேனோ இல்லை ? 2

பள்ளிவிட்டு வருவேளை வழிபார்த்து நிற்பாள் ;
பார்த்தவுடன் பார்க்காது வேறெங்கோ பார்ப்பாள் ;
கள்ளவிழிக் கொளிசெய்ய மைதீட்டும் போதும்
கருத்திருக்கும் என்மீது ; கிணற்றோரம் நீரை
மொள்ளுகின்ற போழ்தினிலும் என்பேரைச் சொல்லி
முணுமுணுக்கும் செவ்விதழ்கள் துடிதுடிக்கும் பேச ;
கொள்ளையின்பம் எனைக்கண்டால்! ஆனாலும் என்றன்
குறைதீர்த்து வாழ்விக்கும் நினைப்பேனோ இல்லை ? 3

பக்கத்து வீட்டிற்கு நான்வந்தால் போதும்;
பாசாங்குக் காரியொன்றும் அறியாதாள் போல
'அக்கா'வென் றவ்வீட்டுப் பெண்தேடி வந்தே
அடுக்களையில் மறைந்திருப்பாள்; எட்டியெட்டிப் பார்ப்பாள்;
பக்குவமாய் இரண்டொன்று பேசாது பேசிப்
பார்க்காதாள் போலென்னைப் பார்த்திருப்பாள்; ஆனால்,
நெக்குருகும் என்மனத்தின் சோர்வகற்றி யென்றன்
குறைதீர்த்து வாழ்விக்கும் நினைப்பேனோ இல்லை? 4

# நானென் சொல்வேன் ?

ஆள்காட்டி விரலாலே ஒவ்வோர் ஏட்டை
அவள்புரட்டிக் கொண்டிருப்பாள் நூலெ டுத்து ;
வாள்விழியோ என்னருகில் வந்து வந்து
வட்டமிடும் ; நகைகாட்டும் ; கூர்ந்து நோக்கும் !
மீள்வதுண்டோ கருவண்டு மலரில் வீழ்ந்தால் ?
மெல்விரலைச் சுவைத்திருக்கும் குழவிக் கென்றும்
தாள்சோர்ந்து போவதுண்டோ ? கண்ணும் கண்ணும்
தம்முள்ளே பேசுவதை நானென் சொல்வேன் ? 1

தெருவினிலே வாத்தைப்போல் அசைந்த சைந்து
சிரிக்காமல் சிரித்தவளும் நடந்து போவாள் ;
ஒருவருக்கும் தெரியாமல் அவள்மைக் கண்கள்
ஓடிவரும் அன்போடு ; வேறு யார்க்கும்
புரியாத வகையினிலே பேசும் ; சற்றுப்
போய்த்திரும்பி மற்றொன்று சொல்லும் ; நெஞ்சில்
உருவேறிப் போனதடா ! அந்தக் கண்கட்(கு)
உவமையுண்டோ ? பேசுவதை நானென் சொல்வேன் ? 2

தாயோடு வீட்டினிலே தட்டிக் கப்பால்
தன்னுருவை மறைத்திருப்பாள் ; தட்டிச் சந்தில்
பாய்ந்துவரும் அவள்கண்கள் ; கொஞ்சிக் கொஞ்சிப்
பலபேசும் ; பரிகசிக்கும் ; நானென் சொல்வேன் ?
காய்கின்ற முழுநிலவும், தென்றற் காற்றும்,
கடல்தொலைவில் எழுப்புகின்ற இசையும் அந்த
மாயவிழிக்(கு) ஈடாமோ ? என்னை ஊக்கி
வாழ்விக்கும் விழிப்பேச்சை நானென் சொல்வேன் ? 3

# காரணந்தான் என்னே ?

கடலோரம் காற்றூட நின்றிருந்தேன் ; நீலக்
கருங்கடலில் அலைநெளிவில் தொடுவானில் மீனில்
மடம்நிறைந்த உன்விழியே தோன்றுதடி ! சாய்ந்த
மலர்ப்புன்னை மொட்களுடன் பல்வரிசை காட்ட
உடலெல்லாம் உயிரெல்லாம் பாயுதடி இன்பம் !
உனைமறக்க ஒருநாளும் ஆகாதே என்றால் !
கடைக்கண்ணைத் திருப்பாது வேறெங்கோ நோக்கி
என்னுயிரை வாங்குகின்ற காரணந்தான் என்னே ? 1

தழைக்காட்டில் தனிமையாய்த் திரிகின்ற போதும்,
தாங்காத வெய்யிலிலே நடக்கின்ற போதும்,
மழைபட்ட செந்நெல்லின் வளங்கண்ட போதும்,
வற்றாத சிற்றோடைப் பூக்கண்ட போதும்
அழியாத உன்வழியே தோன்றுதடி எங்கும் !
அரைநொடியும் உனைமறக்க ஆகாதே என்றால் !
பிழைஎன்ன செய்தேன்நான் ? வேறெங்கோ நோக்கி
என்னுயிரைப் பிரிக்கின்ற காரணந்தான் என்னே ? 2

மடமையிலே வாழுகின்ற மக்களொரு பக்கம்
வயிற்றுக்குச் சோறளிக்கும் மனைவியொரு பக்கம்
அடக்குமுறை அம்பெய்து வாட்டுகின்ற போதும்
அன்பளிக்கும் உன்விழிகள் ; துன்பத்தைப் போக்கும் ;
இடையினிலே வந்ததென்ன ? உனைமறக்கப் போமோ ?
என்வாழ்வே ! குளிர்நிழலே ! இளந்தென்றற் காற்றே !
கடைக்கண்ணைத் திருப்பாது வேறெங்கோ நோக்கி
என்னுயிரை வாங்குகின்ற காரணந்தான் என்னே ? 3

வான்மறந்து விண்மீன்கள் வேறெங்கே செல்லும்?
மலர்விட்டுக் கருவண்டு மதுவெங்கே தேடும்?
மீன்கூட்டம் நீர்நிலையைப் பிரிந்திருப்ப துண்டோ?
வெற்பிழிந்து தவழ்ந்துவரும் மெல்லருவி தாவித்
தான்கலக்கும் கடலன்றி வேறெங்கே செல்லும்?
தமிழ்ச்சுவையே! உனைமறக்க ஒருபோதும் ஆகா!
மானவிழியைத் திருப்பாது வேறெங்கோ நோக்கி
என்னுயிரை வாங்குகின்ற காரணந்தான் என்னே? 4

# என்ன உண்டாம் ?

குட்டை குளங்கள் நிறைந்ததடி ! - வெள்ளைக்
கொக்கைக் குருகையங் காரழைத்தார் ?
வட்ட நிலவுண்டாம் என்றுரைத் தேஓடிப்
பெண்ணே ! மறைவதால் என்ன உண்டாம் ? 1

தோப்பு மரங்கள் பழுத்ததடி ! - பெண்ணே !
சாப்பிட வௌவாலை யாரழைத்தார் ?
காப்புண்டு வீட்டில் என்றுரைத் தேஓடிக்
கண்ணே! மறைவதால் என்ன உண்டாம் ? 2

தினைக்கதிர் சாய்ந்தது புன்செய்யிலே-பெண்ணே !
தின்னக் கிளியையங் காரழைத்தார் ?
மனையகத் தன்னையும் சுற்றமும் உண்டென்று
மானே ! மறைவதால் என்ன உண்டாம் ? 3

காற்று மழைமின்னல் வந்ததடி!-பெண்ணே !
காட்டுக் குயிலைஇங் காரழைத்தார் ?
கூற்றொத்த ஊர்க்காவல் உண்டென்று சொல்லிப்பின்
ஓடிமறைவதால் என்ன உண்டாம் ? 4

கொல்லையில் முல்லை சிரித்ததடி! - பெண்ணே !
கூப்பிட்டா வந்தன வண்டினங்கள் ?
தொல்லை தரும்இந்த ஊரென்று வீணாகச்
சொல்லி மறைவதால் என்ன உண்டாம் ? 5

# வேறெங்கோ நோக்குவதேன்?

கார்தவழும் மலைமுகட்டைப் பொற்கையால் தாவிக்
கதிர்தழுவும்; கீழ்வானை மெல்லஇருள் தழுவும்;
வேர்தவழும் பாறையினைக் களிரோடி வந்து
மேற்றழுவும்; மரமேறி ஆண்தழுவும் மந்தி;
நீர்தவழும் சிற்றோடை பூத்தமலர் தென்றல்
வளிதழுவும்; நீள்கொம்புக் கலைதழுவும் பெண்மான்;
ஏர்தவழும் உன்விழிகள் என்னின்பப் பேழை!
ஏன்தழுவும் வேறெங்கோ? என்னேடி செய்தேன்? 1

கோடுயர்ந்த மரக்கிளையைக் கொடிசுற்றும்; புள்ளிக்
குயில்கூவும் இசைக்கேற்ப ஆறுமுழ வார்க்கும்;
ஆடுயர்ந்த செடிதாவி மேய்ந்திருக்கும்; பொய்க்கால்
அடிபெயர்க்கும் மேய்ப்போன்வாய்க் குழல்கேட்டுச் சூழும்;
காடுயர்ந்த கொன்றையிலே குரல்காட்டும் போத்து;
காதுயர்த்தித் துணைதேடித் துள்ளிமுயல் பாயும்;
பீடுயர்ந்த உன்விழிகள் என்னின்பப் பேழை!
ஏன்தழுவும் வேறெங்கோ? என்னேடி செய்தேன்? 2

குட்டையிலே அளிகண்டு பூசிரிக்கும்; வாழைக்
குலைகோதப் பசுங்கிளி ஆணழைக்கும்; தென்னை
மட்டையிலே பெண்ணணிலோ தன்துணையைத் தாவும்;
வாலுயர்த்திப் பாய்ந்துவரும் காளையினைப் பார்த்துத்
தொட்டியிலே நீரருந்தும்; பசுகத்தி யழைக்கும்;
துணைச்சேவல் குரல்கேட்டுக் குதித்தோடும் பெட்டை;
வெட்டியிலே போகுதடி பொன்னான நேரம்!
வேறெங்கோ நோக்குவதேன்? என்னேடி செய்தேன்? 3

புரண்டுவரும் அலைகண்டு பூரிக்கும் நெய்தல்;
புதுப்பெண்ணைப் போல்நண்டு வேப்பம்பூக் கண்ணால்
வெருண்டுவரும் அலவனுக்கு விருந்தூட்டும்; தாழை
விரிந்துமடற் கைவிரித்து நாரைவர வேற்கும்;
உருண்டுவரும் சங்கிற்குப் புன்னைநகை காட்டும்;
உயர்பனையில் கடற்காக்கை ஆணைஎதிர் நோக்கும்;
சுருண்டுவரும் அலைக்கூந்தல் துடியிடையே! அன்பே!
வேறெங்கோ நோக்குவதேன்? என்னேடி கோபம்? 4

# கன்னியின் கனவு

வானத் தழகிளெளி - எனது
வட்ட முகத்திலென்பார்
நானதைக் கேட்டவுடன் – சிறிது
நாணித் தலைகுனிவேன். 1

செவ்வரி பாயுதென்பார் – எனது
சேல்விழி துள்ளுதென்பார்
ஒவ்வோர் உறுப்பினுக்கும் – பலப்பல
உவமை கூறிடுவார். 2

என்னைப் பிடித்திழுப்பார் – 'விடுவிடு'
என்றுநான் பொய்யுரைப்பேன் !
கன்னல் மொழிந்திடுவார் – 'குசுகுசு'
காவியஞ் சொல்லிடுவார். 3

என்சொல் மதித்திடுவார் – சோர்வில்
என்னுயிர் காத்திடுவார்
முன்னரே நான்நடப்பேன் – காதல்பெற
முற்படும் வாலிபன்போல். 4

வீட்டு அரசாட்சி – உனது
விருப்பம் என்றுரைப்பார்
பாட்டுக்கள் பாடென்பார் – நீர்
பாவம் பிடியுமென்பேன். 5

காசு பணம்சேர்த்தே – வாழ்வில்
களிப்பினைக் கண்டதுண்டோ?
மாசிலா அன்பணைப்பில் என்றும்
மணிப்புருப் போல்வாழ்வோம். 6

செந்நிற நீர்போல – உருண்டு
செல்வோம் வாழ்வினிலே!
எந்நிலை பெற்றிடினும் - பங்கு
எங்கள் இருவருக்கே. 7

எங்கள் உயிர்கவர்ந்த—மழலைத்
தங்கப் பதுமைகளைத்
திங்களாய்ப் போற்றிடுவோம் – சுதந்தரத்
தீரராய் ஆக்கிடுவோம்! 8

என்மனம் வேண்டாத – அசடு
எவனைப் பெறுவேனோ?
அந்நிலை அற்றாலே – நாட்டின்
அடிமைத் தளை தெரிக்கும்! 9

பெண்கள் மணவாழ்வின் - உரிமை
பெற்றிட நான்முனைவேன்
கண்கள் எனக்குண்டு – விரும்பும்
காதலன் நானடைவேன்! 10

# அறியாக் காதலி

ஆற்று மணற்பரப்பில், – உள்ளம்
அள்ளிடும் செவ்வொளியில் – அவள்
மேற்றிசை வானிருந்து – மயிலென
மெல்ல நடந்து வந்தாள்! 1

வெட்கம் சிறிதுமின்றி – அவள்
வேல்விழி தூதனுப்பி – 'என்
பக்கம் வருக'வென்றாள் – துள்ளிப்
பாய்ந்தேன் அவளருகில்! 2

மண்ணில் பலவுயிர்கள் – பேசும்
வாக்கின் நுணுக்கமெலாம் – தமிழ்ப்
பண்ணில் எனக்குரைத்தாள் – இன்பப்
பார்வை மொழியாலே! 3

ஆடை பிடித்திழுத்தேன்; – பலப்பல
அன்பு மொழியுரைத்தேன்;
ஓடையுள் சென்றொளித்தாள்; – என்
உள்ளம் வெறிகொளவே! 4

தோப்பினில் பாட்டிசைத்தாள் – கிளைதொறும்
தொத்தித்தொத்தி மகிழ்ந்தே! – 'ஓய்,
மாப்பிள்ளை! உண்ணவாரும்! – ஒட்டு
மாம்பழம் தாரேன்' என்றாள். 5

கார்முகில் ஏறிவந்தாள்; – என்
கண்ணைக் கவர்ந்துவிட்டாள்; – அவள்
யாரென நானறியேன்; – பெயர்
யாதெனக் கேட்டறியேன்! 6

ஒவ்வோர் பொருளினுள்ளும் – நிறைந்து
ஒளிமுகம் காட்டுகின்றாள் - அவள்
செவ்வரி கண்கண்டால் – மனம்
வேறொன்றில் சென்றிடுமோ? 7

# தாய்

கத்தும்செங் குழவி நோயைக்
கண்டதற் குரிய செய்வாள்;
கொத்துப்பூஞ் சிரிப்பைக் காணக்
குலுக்குவாள்; குறும்பு செய்வாள்;
சித்திரை துளிர்த்த மாவின்
சிறுஇலை கால்கை தூக்கி
முத்தமோர் கோடி ஈவாள் ;
முன்துயர் மறந்து நிற்பாள் ! 1

குந்தவைத் திருகை சேர்த்துக்
கொட்டுவாள் ; கொட்டச் செய்வாள் ;
தந்தையைக் காட்டச் சொல்வாள் ;
தாத்தாவைக் காட்டச் சொல்வாள் ;
செந்திரு விரலால் பிள்ளை
சுட்டிடச் சிரிக்கக் கண்டு
வந்தது கண்ணே(று) என்று
வாரிமார்(பு) அணைத்துக் கொள்வாள் ! 2

ஒவ்வொரு சொல்லைச் சொல்லி
ஊக்குவாள் ; சொல்லச் சொல்வாள் ;
செவ்விரு கையைப் பற்றிச்
சிறுநடை நடக்கச் செய்வாள் ;
கொவ்வைக்குத் தாவும் கிள்ளை,
குப்பையில் மேயும் கோழி
ஒவ்வொரு நாளும் பிள்ளை
உணவுண்ண அழையா நிற்பாள் ! 3

காய்தாங்கும் கொடியாம் அன்னை ;
கண்ணிமை எனினும் ஒக்கும்;
தாயைப்போல் இதயம் கோதும்
துயரினைத் தடிவார் இல்லை;
தாயினை இழந்தார் வானத்
தண்துளி காணாப் புன்செய்;
தாயினை இகழ்வார் மாற்றுந்
தாய்வர உணரு வாரே ! 4

# மனைவி

வானத்தைப் பார்ப்பாள்; அந்தி
வண்ணத்தைப் பார்ப்பாள்; நெஞ்சம்
ஏனென விளக்கிச் சொல்ல
இயன்றிடாத் துயர்க ருக்க
மோனத்தில் சோர்ந்து நிற்பாள்;
முழுமதி முகம்சு ளுக்கிப்
"போனவர் இன்னும் என்ன
புரிகிறார் ஆங்கே?" என்பாள். 1

புத்தகம் அசட்டை யாகப்
புரட்டியே பார்ப்ப தைப்போல்
அத்தையின் ஏவல் செய்வாள்;
அவள்மனம் இன்னும் ஏனோ
புத்தியில் இனிக்கும் மாசிப்
புதுத்தென்றல் தன்னை யொத்த
அத்தானைக் காணோ மென்று
அடிக்கடி கேட்கா நிற்கும். 2

சிறுஒலி கேட்க வந்து
கதவினைத் திறந்து பார்ப்பாள்;
வறுமையில் வாழும் மக்கள்
முகமென வாடும் கண்கள்;
துறையிலா வாவி தன்னில்
குளித்திடச் சுற்று வார்போல்
அறையினுள் செல்வாள்; வாயில்
அருகினில் வந்து பார்ப்பாள். 3

வீட்டினுள் இருக்க உள்ளம்
விட்டிடா தவனை ஈர்க்கும் ;
கேட்டிடு தெருவோ சையில்
கேள்வனின் குரலைக் கேட்பாள்;
ஓட்டமும் நடையு மாக
உள்ளிருந் தோடி வந்து
பாட்டையை எட்டிப் பார்ப்பாள் ;
சிரித்திடும் பழித்துப் பாட்டை ! 4

வாயிலில் நின்று நின்று
வழிபார்ப்பாள் தலையைச் சாய்த்து;
சாயலில் கணவன் ஒத்தார்
சார்ந்திடத் தொலைவில் கண்டு
வேயிரு தோளு யர்த்தி
விம்முவாள்; அவள்மைக் கண்ணே
நோய்கொண்டு பொருளொவ் வொன்றும்
நுழைந்(து)‘அவர் எங்கே ?’ என்னும் ! 5

ஆண்களோ இப்ப டித்தான்
அலுவலில் சென்றால் தாங்கள்
வேண்டிய பொருள்கி டைத்த
பின்னரே மீள்வார் வீட்டை !
ஈண்டிவர் வருகைக் காக
ஏங்கிடு உயிரை ஏனோ
காண்டிடல் இல்லை என்பாள்
கதவினைப் பற்றிச் சாய்ந்தே ! 6

# மகள்

எழுதுகோல் எடுத்துக் கையால்
சுவடியின் ஏட்டைத் தள்ளி
எழுதுவாள் மேதை போல;
ஏதேதோ முணுமு ணுப்பாள்;
மெழுகுவாள் எச்சில் துப்பி;
மேலாடை இழுத்துச் சுற்றி
விழுந்தடி பணிவாள்; தாய்போல்
வேலைகள் செய்வாள் பிள்ளை! 1

ஆடையும் அணியும் கேட்பாள்;
அணிந்தபின் நடந்து பார்ப்பாள்;
சாடைகள் செய்வாள்; பாட்டி
சாயல்போல் நடந்து போவாள்;
ஏடவிழ் பூவைப் போல
இன்னகை புரிவாள்; பெற்றோர்
வாடிய முகத்தை மாற்றும்
மருந்தவள் பெற்ற தெங்கோ? 2

சிற்றிலை அமைத்து மண்ணில்
சிறுசோறு சமைப்பாள்; அந்தச்
சிற்றிலைச் சிதைக்கக் காணில்
சீறுவாள்; என்னைக் கூவிப்
பற்றுடன் உண்ணச் சொல்வாள்;
பாட்டுகள் பாடிப் பாடிப்
பெற்றவள் போலப் பொம்மை
பிள்ளைதா லாட்டு வாளே! 3

செவ்விதழ் அவள்வாய் முத்தம்
தேன்சுவை மீறும்; அந்தச்
செவ்விதழ் பிறக்கும் சொற்கள்
பொருள்காண நிகண்டிங் கேது ?
செவ்விசேர் நீலக் கண்கள் ;
சிறுநகை நச்சுப் பற்கள் ;
மௌவலின் நாற்றம் வீசும்
தலைமயிர்; வான வாழ்வே ! 4

# உழவன்

காலையில் நுகத்தில் எருதுகள் பூட்டிக்
கலப்பையைக் கட்டினன் உழவன் !
பாலிலாத் தாயின் முலையினைக் குழவி
பற்களால் கடித்திழுப் பதுபோல்
சாலையாய் நிலத்தைச் சேக்குலம் பிளக்கும்
தலையசைத் திடுமொரே யளவாய் ;
காலுளை பெயர்க்க அவைபடும் பாடு
கண்டுநான் கருத்திழந் தேனே ! 1

ஏருடன் விரைந்து சேற்றினில் தாண்டி
எடுத்தடி வைத்தவன் நடப்பான் ;
காரினைத் தூக்கிச் சிக்கிய மண்ணைக்
காலினுல் தள்ளுவான் ; அதட்டித்
தார்கழி நீட்டக் காளைகள் உடலைத்
தாழ்த்தி நெளித்துமுன் இழுக்கும் ;
சோர்ந்திடும் போழ்தில் பாட்டுகள் இசைப்பான் ;
சொக்கிடும் உலகமே அடடா ! 2

புல்சிறு செடிகொடி சாய்ந்திடும் ; சேற்றில்
பொறுக்கிடும் புழுக்களைக் காக்கை ;
எல்லொளி கருக்கப் பூட்டிய ஏரை
இடையிடை நிறுத்துவான் ; உழுவான் ;
கெல்லிட உழவுன் பொறுத்திடு நிலம்போல்
கேடுவந் துற்றிடி வேளை
நல்லவர் கலங்கார் ; உடலுயிர் பிறந்த
நாட்டினிற் குதவிவாழ் வாரே ! 3

தலைமேல் உழத்தி உணவொடு வந்தாள் ;
சாட்டியை வீசிஏர் நிறுத்தித்
தலைதிகழ் பாகை அவிழ்த்தனன் ; மாட்டைத்
தட்டினன் ; தடவினன் முதுகில் ;
இலைசெறி மரத்தின் நீழலில் கூழை
இன்பமாய்க் குடித்தனன் ; களித்தான் ;
சிலைவிழி கொடுக்கும் வெற்றிலை மென்று
திரும்பினான் வினைசெய மீண்டும். 4

உழவனைக் கேட்டேன் ; உழத்தியைக் கேட்டேன் :
'உள்ளெலும் புலுத்திட நாங்கள்
மழைகுளிர் காற்று வெய்யிலில் உழைத்தால்
மடிக்கொரு கவள'மென் றுரைத்தார் ;
உழவரே நாட்டின் மூச்சடா ! அடிமை
ஒட்டிடும் மருந்தவர் ! கண்டாய் !
உழுபடை தந்த பெரும்பொருள் கொற்றம்
உணர்ந்தவர்க் குதவுவார் யாரே ! 5

# பாட்டாளி

பாட்டாளி முதலாளி யாவரும் ஒன்றே ;
பங்கிட்டுச் சரிபாதி அடைகுவம் நன்றே ;
நாட்டில் விளைபொருள் வான்தந்த செல்வம் ;
நாமொன்றாய் உடுத்துண்டே உயிர்வாழல் இன்பம் ! 1

கடுமழை வெய்யிலில் உழைத்தவர் யாரோ ?
காய்கறி நெல்கூலம் விளைத்தவர் யாரோ ?
குடிநீர் நிறைகூவம் சமைத்தவர் யாரோ ?
கூடை குடிசை முடைந்தவர் யாரோ ? 2

குளிர்நீக்கப் பலஆடை நெய்தகை யார்கை ?
கோட்டை மதில்சுவர் செய்தகை யார்கை ?
களியானை மிடறேறி நாட்டினைக் காக்கக்
கைவேலும் வாளும் கொடுத்தகை யார்கை ? 3

பலபல அழகாடை தைத்தகை எவர்கை ?
பதஞ்செய்து தோலினைத் தைத்தகை எவர்கை ?
மலைகாடு பாய்ந்தோடும் புகைவண்டி ஊர்தி
வரப்போகப் பெரும்பாட்டை ஆக்கிய தார்கை ? 4

அழுக்காடை தூய்மைப் படுத்திய தார்தோள் ?
ஆற்றணை கட்டிநீர் தேக்கிய தார்தோள் ?
முழுமீசை அரைமீசை தாடி யொதுக்கி
முகத்தில் அழகையுண் டாக்கிய தார்கை ?

பொன்னை யுருக்கி அணிசெய்த தார்கை?
பொங்கும் கடல்தாண்டச் செய்தகை யார்கை?
அந்நிய நாட்டினர் பேச்சை நொடியில்
அட்டியின்றிக் கேட்கச் செய்தகை எவர்கை? 6

மேற்றிசை வீழ்சுழல் பரிதியைப் போல
வெந்த இரும்பினால் தீய்ந்தகை யார்கை?
காற்றாடு மாடமும் கூடமும் மாலை
கனிதரு சாலையும் கட்டிய தார்கை? 7

கண்ணைக் கவரும் மணிதந்த தார்கை?
கல்லைச் செதுக்கி உயிர்தந்த தார்கை?
மண்ணைக் குடைந்து கருப்பொருள் ஈட்டி
வாழ்வுக் குறுதுணை யானதோள் யார்தோள்? 8

குன்றைப் பிளந்து வழிதந்த தார்தோள்?
குட்டை குளம்ஏரி வெட்டிய தார்தோள்?
நன்றி மறந்தவர்க் கொன்றுநான் சொல்வேன்:
நாட்டிற் குயிராகும் தொழிலாளர் கூட்டம்! 9

கொடுமையடா மண்ணில் சிலருண்டு வாழல்!
கூழுக்கும் வழியற்றுப் பாட்டாளி தாழல்!
உடைமை பொதுவாக்கி வாழ்வோமிந் நாட்டில்!
ஊரை வளைப்போரை வேர்கல்லிச் சாய்ப்போம்! 10

மண்ணில் பெரும்பொருட் கேன்தனி நாட்டம்?
மக்கள் பசிபோக்கா ஈட்டமென் ஈட்டம்?
கண்ணிமை போன்றவர் தொழிலாளர் கூட்டம்!
கலந்துண்டு வாழ்வமென்றால் ஏனோஇவ் வோட்டம்? 11

# குறவர்

வீட்டினுள் இருக்க உள்ளம்
விரும்பிட வில்லை ; சிற்றூர்ப்
பாட்டையில், குளிர்மை தோய்ந்த
பசுமர நிழலில் சென்றேன் ;
மேட்டினில் அங்கும் இங்கும்
சம்புவால் வேய்ந்த கூரை
காட்டிற்றுக் குறவர் இன்பக்
களஞ்சியக் குடிசை தன்னை ! 1

'இச்சிறு குச்சி வீட்டை
விருப்பம்போல் எடுத்துச் சென்று
குச்சியை நாட்டி யாங்கே
குடித்தனம் செய்யும் விந்தை,
மச்சடை இல்லம், வானை
மருவிடு மாடம் வாழும்
இச்சக மாந்தர்க் கேதோ ?'
என்றதே என்றன் உள்ளம். 2

இயற்கையின் எழிலைப் போல
இருந்தனர் ஆணும் பெண்ணும் ;
முயற்கண்ணி தோளில் மாட்டி,
முன்மார்பில் நரித்தோல் போர்த்து
வயிற்றினில் சிறுதோல் பையை
வரிந்தனன் குறவர் காளை !
கயற்கண்ணாள் சிரித்தாள்! ஆ! ஆ!
களாக்காடு பழுத்த தாங்கே ! 3

அழுக்கெலாம் உறையும் செம்மைப்
பாவாடை அரையில் தொங்கும் ;
வழுவழுப் பான தோளை
மறைத்திடும் பச்சைச் சட்டை ;
கழுத்தினில் பிள்ளைக் காகக்
கட்டிய ஏணை தன்னில்
விழியினைக் கசக்கி எட்டி
வேடிக்கை பார்க்கும் பிள்ளை ! 4

கண்ணினைச் சுழற்றி வெட்டிக்
கையினை முறுக்கிச் சுற்றிப்
பெண்புருப் போல ஓடிப்
பின்வந்து நிமிர்ந்து நின்று.
பண்ணிசை சேர வாயில்
வந்ததைப் பாடிப் பாடி
உண்ணவோர் கவளத் திற்கும்
ஒவ்வொரு வீடும் நிற்பாள் ! 5

குழவிகள் இடுப்பில் கட்டும்
கொக்குக்கால் குருவிக் கால்கள் ;
பழந்துணி தைக்க ஊசி,
பால்மணி, நரிப்பல், ஈச்சம்
பழக்காய்கள் கோர்த்த தேபோல்
பவழங்கள், மாட்டின் பிச்சு,
அழகுமான் கொழுப்பின் உண்டை,
அவள்விற்பாள் கூவிக் கூவி! 6

'குறலச்சை' என்பார் மண்ணில்
கொள்கைக்கு வாழா மாந்தர் !
குறவரோ தம்மை வாட்டும்
வயிற்றுக்குக் கூச்சல் செய்வார் ;

மறத்தினை எதிர்த்து வாழ்ந்த
வலிமிகு தமிழர் தத்தம்
அறமெனும் கொள்கை விட்டே
ஆழ்ந்தனர் அடிமை வாழ்வில் ! 7

இடுக்கணை அறியா மக்கள்
இச்சைபோல் சுற்றிச் சுற்றிச்
கிடைத்ததை உண்டு இன்பக்
கிள்ளைபோல் பறந்து பாடிக்
குடித்தனம் செய்து வாழும்
குறவரைக் காணில், 'நாட்டில்
குடித்தனம் தொல்லை தொல்லை'
என்றவர் குருடர் என்போம் ! 8

# மீன்காரி

'என்னென்ன மீனிது? சொல்லி'டென்றேன்; – அவள்
ஏறிட்டுப் பார்த்தனள் கூர்விழியாள் !
'தின்னத்தின் னச்சுவை மீறுமையா! – எங்கும்
தேடக் கிடைக்காது ! கொள்வீர்' என்றாள். 1

'நொச்சிச் சரு'கென்றேன் 'இல்லை! இல்லை – இது
நுணைலக் கருவா' டெனச்சிரித்தாள் ;
'பச்சைநெத் திலி,காரை பத்தியப் பொடி – இது !
பார்க்கிறீரா?' என்றாள் ; ஊம் ! ஊம்' என்றேன். 2

பாளை விரிந்தது; வாய்திறந்தாள் – முத்துப்
பற்கள் விளங்கின நீர்த்துளிபோல் !
காளை இதயப் பெருங்கடலில் – என்றுங்
கட்டின்றிப் பாய்வாளை 'இந்தா' என்றாள். 3

'பிட்டுக் குதவிடும் இந்தச்சுரு – புளிப்
பெய்சாறுக் காகிடும் இக்கிழங்கான் ;
எட்டென்றும் பத்தென்றும் உண்ணாது – சேர்த்தால்
என்றைக் கடைவது இன்பம்?' என்றாள். 4

'நாளைக்குப் பின்னைக்கு வேண்டுமென்று – ஒரு
நாளும் நினைப்பது இல்லையோ நீ !
கோளர்வாழ் இந்த உலகினிலே – சிறு
குருவிபோல் வாழுதல் நன்றோ?' என்றேன் ; 5

புன்னை சிரிப்பெனக் கன்னிசொல்வாள் – இந்தப்
பூமியில் இன்பமாய் வாழுதற்கே
என்னரும் கிள்ளையும், சுற்றமும் ஆளனும்
எனக்குண்டே ! வேறென்ன வேண்டும்? என்றாள். 6

கள்ள மறியா தவளிதய – இன்பக்
கலகலப் பான இசைமொழித் தேன்
கொள்ளை கொள்ளை, அக்கடைத் தெருவில் – ஏழைக்
குதூகல வாழ்க்கை எனக்கிலையே ! 7

# பிச்சைக்காரி

மண்கலம் தாங்கி ஒவ்வோர்
வாயிலில் பிச்சை கேட்பாள் ;
உண்ணுவாள் அங்கோர் வீட்டில்
உதவிய எச்சில் சோற்றை ;
மண்மீது இடிந்த வீட்டில்
துயிலுவாள் ; மழைகு ளிர்க்கோ
மண்சீய்த்துச் சுருண்டு தூங்கும்
ஞமலிபோல் வாழு வாளே ! 1

வட்டுடல் மறைக்க மீன் இல்
வலைஞனின் பறியைப் போல
ஒட்டிய வயிற்றைக் காட்டி
ஒருகாசு கேட்பாள் ; வண்டி
முட்டுகள் கடைகள் கோயில்
முன்நிற்பாள் ; ' அம்மா ...! ஐயா...!
எட்டுநாள் ஆச்சே சோற்றை
என்கண்ணால் கண்'டென் பாளே ! 2

மோசம்செய் தேழை சோற்றை
முழுமையும் திருடும் செல்வர்
ஏசுவார் ; ' சிச்சி !' என்பர் ;
' இல்லைபோ ' என்பார் ; மற்றும்
காசுகள் சிலர்கொ டுக்க
அவள்கண்கள் காட்டு கின்ற
மாசிலாக் குளிர்மைக் கிந்த
வையகம் ஈடோ அம்மா ! 3

கல்லிடைப் பிறந்து வானத்
துளிவரக் காணா தேங்கும்
மெல்லிளஞ் செடியைப் போலப்
பசியினால் மெலியும் ஏழை
அல்லலை நீக்க எண்ணார் ;
'அவரவர் ஊழாம்' என்பர் ;
நல்லதோ ? நாட்டீர் ! சொல்வீர் !
நாம்செய்யும் இந்தத் தீர்ப்பே ! 4

# பைத்தியக்காரி

'பைத்தியக் காரி! பைத்தியக் காரி!'
அவளுக்கு மக்கள் அளித்த பெயரிது!
'பைத்தியக் காரி! பைத்தியக் காரி!'
கூக்குரல் இட்டனர் குறும்புச் சிறுவர்கள்;
தொடர்ந்தனர் அவளை; சூழ்ந்து கூவினர்.

முகத்தை நீட்டினர்; விழித்துப் பார்த்தனர்;
கையைத் தட்டிக் கத்தினர்; குதித்தார்;
கல்லால் வீசினர்; கைக்கோல் நீட்டினர்;
சிரித்தனர்; துரத்தினர்; செல்வழி மறித்தனர்;
திரும்பிப் பார்த்தாள்; சிரித்தாள்; தேய்ந்த

அரும்பு முல்லை அரும்பிற்று; நீள்விழி
உணர்வறு பார்வை ஓடும்; நிலைக்காது !
முகிலிடைப் பட்ட முழுமதி முகத்தில்
புகையிடைப் பட்ட ஆடியாம் கன்னம் !
செம்மை தேய்ந்த இதழில் சிறுநகை

தேய்ந்தது; சொற்கள் தேய்ந்து சிதறின;
வதங்கிய சிறுகொடி பதுங்கிய இடுப்பு
மழையிலா மூங்கில்; வளையிலாக் கைகள்
கண்டதை எடுத்தன; கருகிய உடலில்
பொத்தல் ஆடை தொத்திக் கிடந்தது!

சிரித்தாள்; சிரித்தாள்; குலுங்கச் சிரித்தாள் !
'பைத்திய உலகம் ! பைத்திய உலகம்!'
என்றாள்; ஏதோ முணறினாள்; அழுதாள்;
சிரித்தாள் மீண்டும்; அதையே செப்பினாள்!
வெள்ளிக் குழம்பை முகிலின் விளிம்பில்

அள்ளித் தீட்டும் அந்தி வானம்;
செக்கர் சிந்திய செந்தீச் சுடரை
மந்திகள் பார்த்து மருளும்; வழுக்கைக்
குட்டிகள் தாய்மடி கெட்டியாய்ப் பற்றும்;
சாலைத் தென்னை ஓலை தவழ்ந்து

மாலைப் போதின் மாலை நுகர்ந்து
மாலை வாழ்த்தும் மாலைத் தென்றல்;
கருங்குயில் தோப்பில் விருந்து வழங்கும்.
மேற்கில் பரிதி மெல்ல நழுவ
வீட்டை நோக்கி விரைந்து நடக்கும்

மாட்டை ஓட்டி வந்தான் குப்பன்.
பாடும் அருவி பாடத் தூண்டியது.
பாடினான் பள்ளு; தமிழ்ச்சுவை பாய்ந்தது.
குப்பன் அவ்வூர்க் குடிகளில் ஒருவன்;
முதலியார் வகுப்பு; முதல்சிறி துடையவன்;

எழுதப் படிக்க எண்ணத் தெரிந்தவன்;
மனைவி இறக்க துணைவிதே டாது
வாழ்க்கையில் சலித்து வாழ்ந்து வருபவன்;
'காலம் மக்கள் கருத்தை மாற்றும்!
புள்ளும் மாவும் உள்ளம் கிளற

எத்தனை போழ்துநாம் இப்படி வாழ்வதோ ?
இல்லோர்க் கெல்லாம் இல்லென் னாது
நல்லறம் செய்ய இல்லறம் பேணக்
களைத்துவரு வேளை உளத்துமகிழ் வூட்டத்
துன்பம் விலக்கி இன்பம் நல்க

அமைச்சு போன்றோர் ஆய்வுரை கூறத்
திருத்திய உண்டி அருத்தி மகிழ
மனைவி வேண்டும் மனைவி வேண்டும் !'
இப்படிப் பலப்பல எண்ணி நடந்தான்.
'அண்மையோ, சேய்மையோ அணிபெறு மூதூர்?'

என்றொரு மணிக்குரல் இசைத்தது பின்புறம்;
திரும்பிப் பார்த்தான் கரும்பு மொழியை!
கரிய மரத்தில் கடைந்த ஒளிச்சிலை!
வான்தவழ் மதியம்! தாமரைப் பொய்கை!
வண்டு தீந்தமிழ் வாளை மூங்கில்

இத்தனை இயைந்த இன்ப இருப்பிடம்!
எழுதா ஓவியம்! புனையாக் கவிதை!
இட்டடி வைத்தே எதிர்வரக் கண்டான்;
கலந்தது நெஞ்சம்! கலந்தனர் வாழ்வில்!
கன்றுங் காலியும் ஒன்றொன் றாக

வளர்ந்தது; அவர்கள் வாழ்வும் வளர்ந்தது!
வீடும் வயலும் விளைவைப் பெருக்கின;
ஆடும் மயிலவள்; அவன்கார் மேகம்!
அவள்யாழ்! அவனதை மீட்டும் மெல்விரல்!
உடல்அவள்! உயிரவன்! இயக்கமோ உயிர்மெய்!

தமிழ்அவள்; அவன்தமிழ் தந்த கலித்தொகை!
அகப்பொருள் இலக்கணம் இலக்கியம் அன்ன
வாழ்ந்தனர்; மற்றவர் வாழ வாழ்ந்தனர்!
ஒருநாள் குப்பன் உயிர்போன் றாளின்
தாழ்ந்த பிறப்பைச் சாற்றக் கேட்டான்;

'உண்மையா?' என்றான். 'உண்மை'யென் றாளவள்!
மானம் அழிந்ததாய் மனத்துள் புழுங்கினான்;
ஏசலும் பூசலும் எழுந்தொலிப் பனபோல்
எண்ணினான்; சோர்ந்தான்; எங்கோ நோக்கினான்;
சாதிப் பிரிவும் தாழ்வும் உயர்வும்

மனத்திரை முன்னர் வந்துவந் தாடின;
'கண்ணே! மணியே! விண்ணே! மழையே!
காவியச் சுவையே! ஓவிய உருவமே!
வாழ்ந்தோம் பலநாள்! மறக்கவா முடியும்?
எருமை நெய்யரி எனவாழ் மக்கள்

சாதியைக் குலத்தைத் தாங்கிவாழ் கின்றார்;
இணைந்துநாம் வாழ இனிமுடி யாது...
மீறி வாழ்ந்தால் ஊரில் உள்ளோர்
தொல்லை தருவார்; கொல்லை விளையாது!
விலக்குவார் நம்மை; யாவையும் விலக்குவார்!

இங்குளோர் உன்னை இன்னாள் என்றே
அறியு முன்னர் அயலூர் சென்று
வாழ்ந்திரு; நானே வந்துபோ யிருப்பேன்'
என்றான் குப்பன். ஏந்திழை கலங்கினாள்;
கெஞ்சினாள்; வெதும்பினாள்; கீழ்வீழ்ந் தழுதாள்!

'நஞ்சுண் டிறப்போம்; நாமினிப் பிரியோம்;
வாழ்வோம் ஒன்றி; வருந்துயர் வரட்டும்!
உள்ளக் கலப்பே கொள்ளை இன்பமாம்!
துயரும் தொல்லையும் தூள்படச் செய்வோம்;
மூடர்க்கு அறிவை யூட்டுவோம்; அதனால்

கேடுகள் வரினும் இன்பமே கேடுகள்!
எதிர்ப்பிடை வாழ்வதே இன்பத்துள் இன்பம்!
எதிர்ப்போம்; மூட வுலகை எதிர்ப்போம்!'
என்றாள்; கெஞ்சினாள்; இருதாள் பிடித்தாள்
மறக்க முடியா மாணிக்கப் புதையல்!

மங்கையின் மாண்பும் வாய்மையும் தூய்மையும்
ஒருபுறம் இழுக்க ஒருபுறம் சாதிச்
சனிய னிழுக்கத் தவித்தான் பேதை!
பாதியில் வந்த சாதிப் பிரிவு
தலைதூக் கியதே! தாழ்ந்தான் குப்பன்!

'முடியா(து); ஊர்ப்பகை ஏற்க முடியா(து)'
என்றான் குப்பன்... எதிர்த்தாள் மங்கை!...
வெருட்டி அவளைவேர் கல்ல நினைத்தான்;
தடியைத் தூக்கி 'நடநீ' என்றான்;
மறுத்தாள்; அவனே கறுத்துச் சீறினான்!

தாக்கினான்; தாங்கினாள். மீண்டும் தாக்கினான்;
தாக்குந் தடியைத் தட்டிப் பறித்தாள்;
'இதுதான் ஆண்மையோ? இதுதான் ஆண்மையோ?
மலரைக் கசக்கினாய்; மலர்ச்செடி அழித்தாய்!
மற்றையோர் பேச்சை மறையென நம்பினாய்!

வஞ்சகர் வாழ வகுத்தார் சாதி;
சாதியும் குலமும் காதலுக் கேது?
மேதியும் பெற்றமும் வெவ்வே றாகும்;
மடமை யல்லவா மக்களைப் பிரித்தல்?
அன்றே இவையெலாம் ஆழ்ந்துபார்க் காமல்

அழித்தாய்; நீமட்டும் அழியா திருப்பதோ?'
என்று சீறினாள்; எடுத்தாள் தடியை!...
ஓடினான் குப்பன்; ஓடினான்...ஓடினான்...
'பைத்தியம்! பைத்தியம்! பைத்தியம்' என்றே
பலரிடம் கூறிப் பட்டம் கட்டினான்;

கட்டி வைத்துக் கொட்டி யடக்கினான்;
பைத்திய மற்ற பாவையை முற்றிய
பைத்திய மாக்கினான் பைத்தியக் காரன்!
உண்மை யுணரா உலுத்த மக்கள்
பைத்தியம் என்றே பறையடித் தார்கள்!

வஞ்சகர் வாழ மற்றவர் மீது
நெஞ்சறி பொய்யை நீட்டிக் கூறுவர்;
ஒத்துக் கேற்ற மத்தளம் இசைக்கும்
உதவாக் கரைகள், மட்டிகள்
வாழ்ந்ததால் தமிழர் வாழ்விழந் தாரே!

# புரட்சி

கொடுமையிலே நசுக்குண்ட மக்கள் நெஞ்சம்
கொந்தளிக்க, மேன்மேலும் கொடுமை மீற,
'விடுபடுவோம், இன்றேல்நாம் வீழ்வோம்' என்று
மீளவெறி கொண்டெழுதல் புரட்சி; வாழ்க!
அடிமேலோர் அடிவீழ அமியும் ஓர்நாள்
அசைந்தாடும்; உயிருள்ள மக்கள் நெஞ்சம்
துடிதுடித்துப் பதைபதைத்து வலிய கட்டைத்
தூளாக்கத் திரண்டெழுதல் புரட்சி; வாழ்க! 1

ஆண்டானின் கீழிருந்து பசியால் வாடி
அடிபட்டு நோயுற்ற ஏழை மக்கள்
மீண்டோட வெறுத்தெழுதல் புரட்சி; நூறு
மேருமலை தடுத்தாலும் அடங்கா தப்பா!
வேண்டாத கொள்கையினைத் தாங்கித் தாங்கி
வெதுப்புற்று மனம்நொந்து வாழ்ந்த மக்கள்
ஈண்டுள்ள கொடும்பழக்க வெள்ள ஆற்றை
எதிர்த்தேற இறங்குவதே புரட்சி; வாழ்க! 2

எண்ணத்தில் எழுமாற்றம் புரட்சி! நாளும்
எழுத்தினிலும் பேச்சினிலும் அதனைக் காண்போம்;
வெண்ணுடுப் பெர்னட்ஷா, பிளேட்டோ, லிங்கன்,
விரும்புலெனின், காரல்மார்க்ஸ், விட்மன், ரூசோ,
கிண்ணத்தில் தருநஞ்சை அமுதாய் உண்ட
கிளர்ச்சிவிதை சாக்ரடீஸ், இங்கர்சால், சன்யாட்சன்,
கண்ணொத்த ஈ. வெ. ரா., காந்தி, அண்ணா,
கருத்துநிறை வள்ளுவர்சொல் புரட்சி; வாழ்க! 3

தன்மனம்போல் ஆளுகின்ற அரசின்வாயில்
தவிக்கின்ற பெருமக்கள் பொறுமை மீற
இன்னுயிரைத் துரும்பாக எண்ணி யொன்றாய்
எழுந்தெதிர்த்துக் கோல்சாய்த்தல் புரட்சி; வாழ்க !
என்னுயிரே ! தமிழ்நாடே ! புரட்சி யின்றி
எந்நாளும் நீவாழ ஒன்று சொல்வேன்:
மன்னுபசி கீழ்மேலாம் கொடுமை நீக்கு;
வளம்பெருக்கக் கட்டாயத் தொழிலுண் டாக்கே ! 4

# மே நாள்

பெயலெலாம் பொய்த்த போதும்,
பெருநிலை வறண்ட போதும்
வயலெலாம் உழவன் தோளால்
விளைத்தனன்; வளப்பம் சேர்த்தான்;
செயலெலாம் மறந்தார், அன்னோன்
செயலினில் வாழும் செல்வர்!
புயல்தோன்ற இதுபோ தாதா?
மேதினப் புரட்சி வாழ்க! 1

பலபொருள் விளைத்தான் கூலி
இரவெலாம் பகலைப் போல;
உலையினில், தொழிற்கூ டத்தில்
உழைத்தனன்; தீய்ந்தான்; அன்னோன்
இலக்கியத் தோளால் வாழ்ந்தோர்
கொழுத்தனர்; ஏய்த்தே வந்தார்;
மலையெனில் என்னும்? தாங்கா
விடில்மலை பிளந்தே போகும்! 2

படைபலம், நிலைமைக் கேற்பப்
பக்கத்து மேளம் கொட்டும்
நடைபலம் உடைய வேதக்
குருக்களை நம்பி நம்பித்
தடைபல விதித்தான் வேந்தன்;
வறுமையா தடைக்க டங்கும்?
உடைமையைப் பொதுவாய்ச் செய்த
மேவிழா உயர்க! வாழ்க!! 3

# மனமே இல்லை !

கல்வீடு தோட்டம் கொட்டில்
கண்கவர் மாடி வீடு
செல்வர்கள் ஆடப் பாடச்
சித்திர மாடங் கட்டி
அல்பகல் உழைக்கும் கொத்தன்
மழைகுளிர் ஒண்ட ஒன்றும்
இல்லையே ! இதனைத் தீட்டப்
புலவரீர், மனமே இல்லை ! 1

ஒருசிலர் மாடி வீட்டில்
உண்டாடிக் களித்தி ருக்க
ஒருசிலர் அவர்கள் வீட்டுக்
கோடியில் உடையே இன்றித்
தெருவினில் கிடைத்த மிச்சில்
தின்றுடல் வளர்க்கக் கண்டும்
பெரும்புல வர்கட் கேனோ
பேச்சில்லை; மனமே இல்லை ! 2

வான்தரு வளத்தை ஏழை
மக்களின் உழைப்பை எல்லாம்
நான்சொந்தக் கார னென்று
நண்ணிடும் பெரிய செல்வன்
தானய்யா கள்வ னென்று
மக்கள்முன் சாற்று தற்கிங்கு
ஏனோநீர் தயங்கு கின்றீர் ?
புலவரே ! மனமே இல்லை ! 3

இளைப்பினை மாற்ற ஊரில்
கையேந்தி இரந்த பிச்சை
உளத்தினில் சிறும கிழ்வை
ஊட்டிடக் கஞ்சி காய்ச்சிக்
குளக்கரை மரத்தின் கீழே
குடித்திடும் குறவர் வாழ்வின்
தளர்ச்சியைப் புலவீர் ! நீக்கத்
தயக்கமேன் ? மனமே இல்லை ! 4

மழையினில் குளிரில் காற்றில்
வயலெலாம் உழுது வெட்டித்
தழைமண்டி நெல்வி ளைத்துப்
பசிநோயைத் தணிக்கும் ஏழை
உழவனுக் கிந்த நாட்டில்
உணவில்லை; புலவீர் ! உங்கள்
எழுத்தினில் இவர்கட் கெல்லாம்
இடமில்லை; மனமே -இல்லை! 5

கன்னியின் சிரிப்பும், கெண்டைக்
கடைக்கண்ணின் வீச்சும், வான
மின்னலின் இடையும், சாய்ந்த
மெல்லியல் நடையும் உங்கள்
நன்னூலுக் கழகு செய்யும் !
நாயைப்போல் ஒருசி லர்கள்
இன்னலில் வாடக் கண்டும்
எழுதிட மனமே இல்லை ! 6

தமிழ்மறை போற்று கின்றீர் ;
சங்கநூல் விளக்கு கின்றீர்;
தமிழ்மொழி எங்கள் ஈசன்
தந்ததொன் மொழியென் கின்றீர்;

தமிழ்மொழி தொலைக்க வந்த
இந்தியை வெட்டிச் சாய்க்கத்
தமிழ்ப்புல வீர்காள் ! ஏனோ
தயங்குறீர் ? மனமே இல்லை ! 7

தமிழரே திராவி டத்தில்
தனியர சாண்டி ருக்கத்
தமிழர்கள் வடவ ருக்குத்
தலைசாய்த்து வாழ்வ தற்குத்
தமிழரில் ஒருசி லர்கள்
'சரிசரி' போடக் கண்டும்
தமிழ்க்கொடு வாளெ டுக்கத்
தயக்கமேன் ? மனமே இல்லை ! 8

# ஒன்றே போதும் !

அடிமையின் அடிமையாய்ப் பாகூரில் சிலநாள்
அரசினரின் பணியேற்று நானிருக்கும் நாளில்,
துடிதுடித்து நாக்குழற ஒருபறைச்சி வந்தாள்;
'முள்ளிலவம் மரமுண்டோ ? சொல்லுங்கள்' என்றாள்;
கடைக்கண்கள் முத்துமுத்தாய் நீர்சொட்ட நின்றாள்;
கைபிசைந்து வான்நோக்கி நெடுமூச்சு விட்டாள்!
'இடிவீழ்ந்த தென்னையைப்போல் இருக்கின்றாய் நீதான் !
ஏனஉனக்(கு)?' எனக்கேட்டேன்; அவள்சொன்னாள்;
சொல்வேன்: 1

நேற்றாண்டை வேலைக்குப் போகாமல் நோயால்
நின்றுவிட்டான் என்பறையன்; படுத்திருந்தான் வீட்டில்;
'சோற்றுக்கு வழியற்ற அடிமைகளுக் கிங்கு
நோயென்ன ? தூக்கமென்ன ?' என்றதட்டி ஆண்டை,
'நாற்றுக்கு நீரிறைக்கப் போ' என்றார்; நின்றான்;
'நட' என்று கோலெடுத்தார்; 'தலைசுற்று' தென்றான்;
'கூற்றொத்த நெஞ்சினர்கள் ஆண்டைகளின் கூட்டம்!
கூலிக்கு வாயேது ? செல்!' என்றேன்; போனான் ! 2

தடுமாறி நீர்இறைக்க வயலுக்குச் சென்றான்
தன்னாண்டை பேச்சிற்கும் வயிற்றுக்கும் அஞ்சி;
உடல்காய்ச்ச லோடேற்றம் மிதித்திட்டான்; தவறி
ஒடிந்துவிழு நெடுமரம்போல் கிணற்றோரம் வீழ்ந்தான்;
'ஒடிந்ததுகால்!' என்றோடி ஆண்டையிடம் சொன்னேன்;
'ஒன்றுமில்லை ! பாசாங்கு ! போடிப்போ!' என்றார்;
'துடிதுடிக்கு தென்னெஞ்சம்; எங்களுக்கோர் உதவி
மரமெங்கே ? சொல்லுங்க !' எனக்கதறிக் கேட்டாள்! 3

தலைநோக்கா டென்றவுடன் ஓடோடி வந்து
தலைதாங்க உடல்தாங்க ஆள்கோடி உண்டு;
விலைகொடுத்து மேல்நாட்டு மருந்துகளை வாங்க
மேலான மருத்துவரை நொடிப்பொழுதில் கூவச்
செலவிற்குப் பணமுண்டு; யார்தந்த சொத்து ?
திருடியுண்டு பிழைக்கின்ற ஆண்டைகளின் கூட்டம்
நிலைகெட்டுப் போவதற்குப் பொதுவுடைமை வேண்டும் !
ஈதொன்றே போதாதோ ? நீசொல்லேன் தம்பி! 4

# இதுதானா செய்வார்?

காலையில் நானொரு சாலையி னோரம்
உலாவச் சென்றேன்; ஊரில் உள்ள
குளத்தில் முறுவற் றாமரைக் குமரிகள்
'வா'வென் றென்னை மலர்த்தலை அசைத்துக்
கூப்பிட் டார்கள்; குறும்புக் காரிகள்!

சென்றேன்; என்னைச் சிரித்துவர வேற்றனர்;
உட்கார்ந்தேன்;
துறைக்கல் லொன்று கண்ணீர் சிந்தி
அழுதுகொண் டிருந்தது அக்குளக் கரையில்;
'இன்றோ திருநாள்! பொங்கற் பெருநாள்!

செந்நெல் அரிசியும் தீம்பாகும் கூட்டி
மக்க ளெல்லாம் உண்டு மகிழ்ச்சியில்
பொங்கிக் குதிக்கும் பொங்கல் நன்னாளில்
உனக்கென்ன வந்தது? சொல்'லென் றேன்நான்!
'எண்ணெய் மஞ்சள் இளநீர் முழுக்காடிப்

புத்தாடை பூண்டு பூப்பலி ஏற்றுச்
சிரித்ததோ நிற்கும் சிலையும் நானும்
மலையில் பிறந்தோம்! ஆனால், மாக்கள்
எங்கள் நிலையை இவ்வா றாக்கினர்?
முறையோ?' என்றது; அதற்கு நானே,

'தங்கட் குள்ளே சாதியுள் சாதியும்
உயர்வும் தாழ்வும் ஏற்று வாழும்
மக்கள் இதுதானா செய்வார்?
இன்னமும் செய்வார்' என்று நடந்தேனே!

# தீர்ப்புச் சொல்வீர் !

கிளையினில் இணைந்து வாழும்
கிளி, குயில், வீட்டில் நீங்கள்
வளர்த்திடுங் கோழி, முல்லை
மகிழ்ச்சியை நெஞ்சில் தூண்டும் ;
உளத்தினில் பொங்கும் காதல்
உணர்ச்சி,ஆண் பெண்ணுக் கொன்றே !
இளைத்தவர் பெண்கள் என்றோ
விதவையர்க் கின்னல் செய்தீர் ? 1

மூத்தவள் மாள நீங்கள்
மறுமணம் முடிக்கின் றீர்கள் ;
ஆத்திரம் கொள்கின் றீர்கள் ;
அறுத்தவள் மணப்பேச் சென்றால்
சாத்திரம் காட்டு கின்றீர் ;
தலையெழுத் தென்கின் றீர்கள் ;
ஆத்தமுங் கிலைப்போல் நாட்டில்
விதவையர் அழிதல் நன்றோ ? 2

தலையினை வாரி மஞ்சள்
முகமெலாம் பூசி வான
நிலவுபோல் சாந்துப் பொட்டு
நெற்றியில் இட்டே இன்று
கலகலப் போடு வாழும்
கன்னியர் கூட்டம் காணச்
சிலைகளா நாங்கள் ? நாட்டீர் !
சிந்தித்துத் தீர்ப்புச் சொல்வீர் ! 3

விடுதலை விரும்பு கின்றீர் !
ஆண்கட்கு மட்டுந் தானோ ?
மடுவினில் வீழ்த்தி மீளும்
வழியினைத் தடுப்பார் போலத்
தடுக்கின்றீர், விதவைப் பெண்கள்
தப்பிடும் வழிதான் என்னே ?
நடுநிலை தாங்கி, நாட்டீர்!
நல்லதோர் தீர்ப்புச் சொல்வீர் ! 4

# ஏன் தயக்கம் ?

ஆணிறந்தால் பெண்மற்றோர் ஆளன் அடைவதற்கு
வீண்வாதம் பேசி விதிர்விதிர்ப்பார் — நாணமின்றிப்
பெண்ணிறக்க வேறுமணம் பெற்றிடுதல் நீதியென்பார் ;
எண்ணில் இவரெதற்(கு) ஈடு ? 1

உன்சோட்டுப் பெண்களெலாம் உற்ற துணையோடே
இன்புற்று வாழுகின்றார் இவ்வுலகில் – என்கிளியே !
ஆணுக் கொருநீதி ஆக்கியதா லுன்வாழ்வை
வீணாய்க் கழிப்பதுவோ ? விள் ! 2

உன்தகப்பன் தங்கை உடன்பிறந்தான் வாழ்க்கையில்
இன்னிணையில் சேர்ந்தே இருக்கின்றார் – உன்மனது
கைம்பெண்நீ வேண்டாம் களிப்பெனுமோ சற்றுநினை
நம்முரிமை நாடுவது நாம். 3

மஞ்சள் குளித்து மலர்சூடிப் பொட்டிட்டுக்
கஞ்சவிழி தீட்டிக் களிப்படைய – வஞ்சி
துடிதுடித்தா லாமோ ? துணிந்தெடுநீ இன்றே
மடமை இனமழிக்கும் வாள். 4

எதிர்ப்பட்டால் குற்றமும் ஏழை விதவைக்
கெதிர்ப்பட்டால் குற்றமும் காண்பார் – மிதித்துலகை
மீன்போ லெதிர்த்தேறு! மீளும் வகையிதுதான்!
ஏன் தயக்கம் ? இன்னே எழு ! 5

# இவர்களே திருடர் !

படுக்கையில் கிடந்தேன் ; பனிக்காற்றுக் கதவின்
இடுக்கால் புகுந்தெனை எழுப்பிற்று ; விழித்தேன் ;
மாடியில் முல்லை மலர்சிரித் தழைத்தது ;
பாடிற்று வண்டு ; பாட்டையைத் துழவி
ஓடின விழிகள் ; உயர்ந்தது ஞாயிறு ;
செத்த எலியொன்று தெருவில் கிடந்தது !
கத்தின காக்கைகள் ; கொத்தின அதனை !
என்றன் எண்ணக் குதிரைகள் எங்கோ
சென்றன ; திரும்பின ; தெருவிடை நின்றன !
உணவைத் திருடிய எலியை வீட்டார்
பிணமாய்ச் செய்தனர் ; பேதைமை ! பேதைமை !
அணையாப் பசிநோய் யார்க்கும் பொதுவாம் !
உணர்வும் பொதுவாம் ; ஊக்கமும் பொதுவாம் !
சாக்கா டொன்றே இவையெலாம் தவிர்ப்பது.
மற்றோர் உழைப்பை மடக்கிப் பெருக்கித்
தமதென் றெவர்க்கும் சாற்றித் திரிவோர்
திருட்டை விளைப்பவர் ! இவர்களே திருடர் !
இவர்களைப் போன்ற எலிகளும் உளவே !
பூனை இல் வீட்டில் பொருளை இரவில்
சிறிதே திருடும் வீட்டுச் சிறுஎலி !
நாட்டைத் திருடி நலிவைப் பெருக்கி
உயர்வு தாழ்வை உண்டாக்கித் திரியும்
நாட்டெலி யல்லவோ நாம்கொல்ல வேண்டும் !
ஆவன செய்வ தறியாது
வீட்டெலி கொல்லல் வீண் ! வீண் ! வீணே !

# காந்தி

காந்தியை மறவாதே ! – நமதருங்
காந்தியை மறவாதே !.

சாந்தம் அகிம்சை
தன்னல மற்றசெய்கை
ஏந்தி மக்களுக்காக
யாண்டும் உழைத்த செம்மல் ! காந்தி

சட்ட மறுப்புச் செய்து
தடியடி உடலில் தாங்கிக்
கட்டுண்டு கிடந்த மக்கள்
கால்கை விலங்கொடித்த காந்தி

குண்டு மருந்து மின்றிக்
கூரிய வாளு மின்றிச்
சண்டை சிறிது மின்றி
விடுதலை வாங்கித் தந்த காந்தி

உதைபட்டுச் சிறைப்பட்டு
உண்ணு விரதமேற்று
வதைபட்ட மக்கள்மீள
விடுதலை வாங்கித் தந்த காந்தி

கோடரிக் காம்பு கோட்சே
கொலைசெய்த போதும் தோன்றல்
தேடிய தெல்லாம் நாடு
சிறப்புறும் வழியே ! வாழ்க ! காந்தி

# பாரதி

பாரதிநாள் இன்றடா ?
பாட்டிசைத்து ஆடடா !

கற்றகல்வி காட்ட வென்று
கவிபுனைந்த தமிழ்மொழி
கண்டுகேட்டுப் பொருள் விளங்காக்
கசப்புக் கொண்ட நாட்களில்
சொற்றொடரில் இனிமை தந்தான்
சுப்ர மண்ய பாரதி ;
தூயன்வாழ்க ! வாழ்க ! வென்று
சொல்லிச் சொல்லி ஆடடா ! பாரதி

ஒருமனிதன் உணவேயின்றி
உயிர்துடிக்கக் கண்டிடில்
உருக்குலைப்போம் உலகந்தன்னை
ஒன்றுகூடும் என்றவன்
அருமைப் பாடல் தமிழகத்தில்
அச்சம் போக்கி வருகுது !
அண்டமும் கிழித்தெறியும்
ஆற்றல்நமக் கூட்டுது ! பாரதி

நாட்டை யாளும் உரிமை சொந்த
நாட்டினருக் கல்லவோ ?
நமது பாட்டன் சொத்தடா
நமது நாடு தமிழனே !
நாட்டில் வேறு ஆட்சிசெய்து
நம்மை யாள்வ தேதெனை
நாளும்பாடி அறிவளித்தோன்
நமது பாரதி! ஆடடா ! பாரதி

வறுமைநோய் பிடித்து வீட்டில்
மனைவி மக்கள் வாட்டிட
வாட்டமோடு இந்தியத்தாய்
மனத்தில் காட்சி தந்திடச்
சிறுமை நீக்கிக் களிப்பினோடு
தேசத் தொண்டு செய்தவன்
சீர்த்தி இன்று மனத்தில் எண்ணில்
திரண்டுதோ ளுயருது! பாரதி

கார்மயில்போல் தமிழர் இங்குக்
களித்திருந்த நாட்கள்போய்க்
கண்ணிருண்டு அடிமை வாழ்வில்
கதிகலங்கி நின்றிடத்
தார்மொழியால் உணர்வளித்துத்
தலைநிமிரச் செய்தவன்
தமிழ்க்கவிகள் வாழ்கவென்று
தலைநிமிர்த்தி ஆடடா! பாரதி

# மறைமலையடிகள்

கற்றறிந்த பெரும்புலவர் வடமொ ழிக்குக்
கால்வருடிக் கிடந்திட்ட மடமை கண்டு
நற்றமிழைத் தனித்தமிழை எழுதிப் பேசி
நல்லுணர்வை வளர்த்திட்டீர்! விழிப்பைச் சேர்த்தீர்!
பெற்றெடுத்த தமிழ்நாட்டின் அறத்தைப் பண்பை,
பெரும்புகழை நிலைநிறுத்தி வைத்தீர்! கண்கள்
பெற்றிழந்தார் போலானோம்; பிரிந்தோம் உம்மை!
மறைமலையே! உமைநாங்கள் மறக்கப் போமோ? 1

அயல்நாட்டான் ஆட்சியிலும் அதற்குப் பின்னும்
அருந்தமிழால் கொழுத்திட்டோர் ஆள வந்தோர்
மயல்கொண்டார் வடமொழிமேல்; மறந்தார் கன்னி
வளத்தமிழைத் தாய்மொழியை; அன்னோ ருக்குக்
கயல்புலிவில் திறங்காட்டிப் பகையை வீழ்த்திக்
கனிதமிழை வாழ்வித்தீர்! பிரிந்தோம் உம்மை!
இயலிசைகூத் தின்உருவே! தமிழே! எங்கள்
மறைமலையே! உமைநாங்கள் மறக்கப் போமோ?

ஆழ்ந்தகருத் துரையாலே மக்கள் நெஞ்சை
அள்ளினீர்; ஆன்றோரை விளக்கித் தந்தீர்;
சூழ்ந்தஇருள் திரைகிழித்தீர்; சோர்வே இன்றித்
தோன்றியதை அஞ்சாமல் உரைத்தீர்; நாட்டைப்
பாழ்செய்த சாதியினை வீழ்த்தச் சைவப்
பாட்டையே சிறந்ததென்றீர்; யாண்டு நூறு
வாழ்ந்திருக்க இயலுமென்றீர்; வழியு ரைத்தீர்;
மறைமலையே! உமைநாங்கள் மறக்கப் போமோ? 3

வானத்தை அழகுசெய்த நிலவு பின்னர்
மறைந்தோடிப் போவதுண்டு ; வயலும் ஓர்நாள்
காறுய் உருமாறி அழித லுண்டு ;
கவின்செய்த விடிகாலை மறைத லுண்டு ;
தேன்துளிர்த்த புதுமுல்லை உதிர்த லுண்டு ;
கடலலைகள் கரைமோதிச் சிதறல் உண்டே !
ஆனாலும் தமிழ்ப்பெரியோய் ! அடாதும் சாவே !
மறைமலையே ! உமைநாங்கள் மறக்கப் போமோ ? 4

# திரு. வி. க.

**தொ**ழிலாளர் அன்னை ; பெண்கள்
உயர்விற்கே உழைக்குந் தோழி ;
செழுந்தமிழ்ப் பெரியார் ; தென்றல் ;
தீஞ்சுவைப் பேச்சின் தந்தை ;
விழிநிகர் திராவி டத்தின்
விடுதலை விழைந்த வீரர் ;
மொழியொப்பச் செயலைச் செய்த
திரு. வி. க. முதியோன் வாழ்க !

# பேராசிரியர் சுந்தரனார்

தீந்தமிழ்ச் செல்வம்! திராவிடர் நன்னூல் 'மனோன்மணீயம்'
ஈந்து, தமிழின் சிறப்பினை ஈந்து, தமிழ்க்கிளையாம்
ஆந்திரம் கன்னடம் ஆளம் துளுவம் அவற்றிலெலாம்
வேந்தாம் தமிழென் றுரைத்தவர் நம்மரும் சுந்தரமே! 1

'உள்ளம் இனிக்கும்! இனிக்கும் உடலுயிர்! தேன்கலந்த
வள்ளுவன் பாடல் மறுவற ஓதி உணர்ந்தவர்கள்
கொள்ளார் தமிழில் புகுந்த மநுநூல்' என உரைத்த
வள்ளல் கவிக்கடல் சுந்தரம் நீள்புகழ் வாழியவே! 2

கன்னித் தமிழைத் தமிழின் வளத்தைப் படையெடுத்த
புன்மொழி ஆரியம் பேச்சற் றொழிந்தது; நந்தமிழே!
எந்நிலை ஏற்றும் இளமை குறையா திருக்குதென்று
சொன்னார் கவிக்கடல் சுந்தரம் நீள்புகழ் வாழியவே! 3

'நம்மின மூச்சும் உயிரும் உடலும் திராவிடமாம்!
இம்மியும் சோரோம்; கலங்கோம்; பெறுவோம்' எனவுரைக்கும்
செம்மலாம் அண்ணா அவர்கள் குறிக்கோள் செழிக்குமுன்னே
தம்மினம் வாழ நினைத்தவர் நீள்புகழ் வாழியவே! 4

தீந்தமிழ் வாழ்த்தித் திராவிடம் வாழ்த்தித் திராவிடத்தைச்
சூழ்ந்த பகையாம் வடவர் தொடர்பைத் துணிந்திடித்து
வேந்தர் மடியில் வளர்ந்த தமிழின் விருதுநாட்டி
மாய்ந்தார்நம் சுந்தரச் செம்மல்! அவர்புகழ் வாழியவே! 5

# கவிமணி

'செவியேங்க, மனமேங்க, தீந்தமிழும் ஏங்க,
திருநாட்டார் உளமேங்க, கண்ணேங்க இந்தப்
புவிமறந்தாய் ; உயிர்நீத்தாய் ; ஆனாலும் உன்றன்
பொற்குவையாம் அழகுதமிழ்க் கவிதைமணிக் கொத்தைச்
செவிமறவா ; உளம்மறவா ; அழியாத சொத்தாம் !
சிந்தைக்கு நல்லுணவு கவிதையன்றி உண்டோ ?
கவிமணியே ! நற்றமிழோய் ! திருநாகர் கோவில்
கண்மணியே ! உன்பாடல் ஒருநாளும் சாகா ! 1

"பாட்டிற்கிங் கொருபுலவன் பாரதியே ?' என்ற
பண்ணெழுப்பி வைத்தவாய் மண்ணுக்குள் அந்தோ !
கேட்டாலும் நினைத்தாலும் நெஞ்சுடைந்து போகும் !
கிடைக்காத பெருஞ்செல்வம் 'உமர்கயாம்' பாடல் !
தீட்டாத ஓவியத்தைச் சொல்லடுக்கு மையால்
தீட்டிநின்றாய் ; விருந்தளித்தாய் ! இனியெங்கே போவோம் ?
நாட்டிற்கோ உன்மறைவு பெரும்இழப்பு ; நாஞ்சில்
கவிமணியே ! உன்பாடல் ஒருநாளும் சாகா ! 2

சாக்காடு மறுமலர்ச்சி என்றாலும் கன்னித்
தமிழ்மகனே ! உன்பிரிவு உளத்துக்கோர் ஈட்டி !
பூக்காட்டுத் தமிழ்க்காவில் உள்ளநறுந் தேனைச்
சுவைகூட்டிப் புதுமுறையில் மக்கட்குத் தந்தாய் !
வேக்காட்டை யார்தணிப்பார் ? சீர்திருத்தப் புத்தன்
விளக்கத்தை இனியிங்கே யார்உரைக்கப் போவார் ?
பாக்காட்டுக் கவிமணியே ! தமிழர்பெருஞ் சொத்தே !
பரந்தமன விரிவுடையோய் ! சாகாதுன் பாட்டே ! 3

# தமிழ்த் தாய்

ஓவியத்தில் மிளிரழகின்
உயிரெங்கள் தமிழ்த்தாய்!
காவியப்பூஞ் சோலைதரு
கனிஎங்கள் தமிழ்த்தாய்! 1

கற்சிலையின் வழியழகுக்
கலைஎங்கள் தமிழ்த்தாய்!
விற்பிடித்த காளைநெஞ்சின்
வீரம்எங்கள் தமிழ்த்தாய்! 2

உள்ளமள்ளுந் தொகைப்பாட்டின்
உயிரெங்கள் தமிழ்த்தாய்!
வள்ளுவனை உலகளித்த
மணிவயிற்றாள் தமிழ்த்தாய்! 3

சித்திரைமா இளந்தளிரின்
செவ்விதழாள் தமிழ்த்தாய்!
பத்தினிப்பெண் கண்ணகியைப்
பயந்தவளெந் தமிழ்த்தாய்! 4

அன்புமலர் சூட்டியவள்
அடிபணிவாய் தமிழா!
துன்பமோடு நெஞ்சில்வீரம்
துளிர்த்தடிமை போமே! 5

# தமிழ் வாழ்க!

## எடுப்பு

தமிழைக் காப்போம் நாம்
தாயடிமை போமே!
தாயடிமை போமே! தமிழைக்

## மேல் எடுப்பு

பூமியினில் தனித்தமி ழாலே
பூரித்திடும் நம்மிரு தோளே!
நாமினிமேல் அஞ்சுதல் இலமே!
நாம்நமையே ஆண்டிடு வோமே!

ஏமம் நெஞ்சில் துள்ள
ஏற்றமடை வோமே!
ஏற்றமடை வோமே! தமிழைக்

## அமைதி

ஆரியத்தின் கலப்பத னாலே
அடங்கியதே தமிழ்புவி மேலே!
ஓர்ந்துநாம் எல்லோரும்
உழைப்போம் தமிழ்க்காக!
உழைப்போம் தமிழ்க்காக! தமிழைக்

தாய் சேயைக் காப்பது போலே
தாய் மொழியைக் காத்திடு வோமே !

ஏய்த்த காலம் போச்சே !
இனிமேல் செல்லாதே !
இனிமேல் செல்லாதே ! தமிழைக்

வான் தவழ் பேரொளி போலே
வாடாமொழி தமிழே! வாழ்க !

வாழி தமிழ்த் திருநாடு !
வாழி நலம் சூழ்ந்தே !
வாழி நலம் சூழ்ந்தே ! தமிழைக்

# எங்கள் தமிழ்

**மாண்டு** **அடதாளம்**

தமிழெங்கள் உயிருட லாமே என்றும்
தலைதாழ்த்திக் கைகூப்பி வணங்குவம் நாமே;
அமிழ்தின் இனியசுவை தமிழெனில் பொய்யோ?
அழிவை நினைக்கவுயிர் ஒடுங்குதே அய்யோ!

வாய்விட்டுத் தாய்பேச நாம்கற்ற மழலை
வஞ்சியின் தோள்சேர்த்து நாம்கொஞ்சும் குதலை
சேய்கிளை கேளொடு வாழ்வினில் என்றும்
தெளிவதும் கேட்பதும் மொழிவதும் தமிழே!

அடிமை மலைபிளக்கும் உளிஎங்கள் தமிழே!
ஆண்மைக்கும் வலிமைக்கும் உரமெங்கள் தமிழே!
மடமை இருள்கிழிக்கும் மதிஎங்கள் தமிழே!
வற்றாத தேனூற்றும் அறிவிற்குத் தமிழே!

தமிழர்க்குத் தமிழெனில் இன்பம்! இன்பம்!
சழுக்கர்க்கோ தமிழெனில் துன்பம்! துன்பம்!
தமிழர்க்குத் தமிழிசை இன்பம்! இன்பம்!
தமிழர்க்குத் தமிழ்மொழி உடலுயிர் என்றும்!

# தமிழ் நாடு

என்னுயிர் நாடு என் தமிழ் நாடு
என்றவு டன்தோள் உயர்ந்திடும் பாடு !
அன்னையும் அன்னையும் அன்னையும் வாழ்ந்த
அழகிய நாடு ! அறத்தமிழ் நாடு !
தன்னிக ரில்லாக் காவிரி நாடு !
தமிழ்மறை கண்ட தனித்தமிழ் நாடு !
முன்னவர் ஆய்ந்த கலைசெறி நாடு !
மூத்து விளியா மறவரின் நாடு ! 1

ஆர்கடல் முத்தும் அகிலும் நெல்லும்
அலைகடல் தாண்டி வழங்கிய நாடு !
வார்குழல் மாதர் கற்பணி பூண்டு
வாழைப் பழமொழி பயின்றதிந் நாடு !
ஓர்குழு வாக வேற்றுமை அற்றிங்(கு)
ஒன்றிநம் மக்கள் வாழ்ந்ததிந் நாடு !
கார்முகில் தவழும் கவின்மிகு நாடு !
கடும்புலிப் பொம்மன் கருவுற்ற நாடு ! 2

பாரினில் தொன்மை வாய்ந்ததிந் நாடு !
பலபல துறையில் சிறந்ததிந் நாடு !
ஆரியர் நெடும்படை வென்றதிந் நாடு !
ஆடலும் பாடலும் வளர்த்ததிந் நாடு !
சீரிய பண்பு நிறைந்ததிந் நாடு !
செந்தமிழ் மொழிவளன் செறிந்ததிந் நாடு !
ஓரடி வெம்பட உயிர்விட்ட நாடு !
ஒடுங்கியே பூனைபோல் இருப்பது கேடு ! 3

காரியும் பாரியும் வழங்கிய நாடு !
கலம்பல செலுத்தி ஆண்டதிந் நாடு !
போர்ப்பறை கேட்டுப் பூரித்த நாடு !
புறமகம் தந்து பொலிந்ததிந் நாடு !
பாரதி தாசன் புரட்சிசெய் நாடு !
பகுத்தறி வற்றிங் கிருப்பது கேடு !
சேருவோம் தமிழர்கள் யாவரும் ஒன்றே !
தெருவெலாம் விடுதலை முழக்குவோம் இன்றே! 4

# தாய் நாடு

அன்னை வயிற்றைக் கழித்து வெளிவந்த
அவ்வறை யுன்றன் தாய்நாடே!
சின்ன விழியினால் நோக்கிஉன் அன்னைக்குச்
செய்த சிறுநகை தாய்நாடே! 1

காலை யுதைக்கக் கவிழ்ந்து தலைதூக்கக்
கற்ற இடமுன்றன் தாய்நாடே!
ஆலை எருதென நீசுழல் தாழம்பாய்
ஆடிடு ஏணைஉன் தாய்நாடே! 2

வாரித் தழுவிக் கொஞ்சும் மொழிகேட்டு
வாயைக் குழைத்ததும் தாய்நாடே!
ஓரடி யூன்றிமற் றோரடி தூக்க
உதவிய கைகளுன் தாய் நாடே! 3

சிற்றில் சமைத்துச் சோறு கறிசெய்த
தெருவும் மணலுமுன் தாய்நாடே!
நெற்றி சுருக்கி அழுதிட உன்னன்னை
காட்டிய நிலவுமுன் தாய்நாடே! 4

பலகலை, பனுவல் பழுதற ஊட்டும்அப்
பள்ளியு முன்றன் தாய்நாடே!
கலகல வாணகை கருக்கிடும் இளமீசை
காளை நடையுமுன் தாய்நாடே! 5

கள்ள விழியினுல் மெல்லஉன் உள்ளத்தே
காதலைச் சேர்த்தவள் தாய்நாடே !
வெள்ளம் கலந்த வெள்ளமாய் நீகாதல்
வெளியுறு சோலையுன் தமிழ்நாடே ! 6

உலுர்கழை ஆக்கினுள் ஈரமிலாள் அந்த
ஓவியப் பேரெழில் தாய்நாடே !
அலுத்த மனத்திற் காறுதல் காட்டுவான்
அழகும் இசையும்உன் தாய்நாடே ! 7

நீசெய வேண்டிய சிற்சில உண்டடா
நின்னுயி ராம்தமிழ் நாட்டினிற்கே !
தீவளி நீர்நிலம் கூடி எதிர்த்தாலும்
செந்தமிழ் நாட்டிற்குத் தொண்டு செய்யே ! 8

# தமிழர் ஆட்சி

தமிழர் நாட்டைத் தமிழ ராளத்
தக்க காலம் வந்தது
தைரியங்கொண் டேவிரைந்து
தலைநிமிர்ந்து நில்லடா! 1

விருந்தி லன்று தமிழிகழ்ந்த
விசயன் நா அறுத்திட
வீறுகொண் டெழுந்த சேரன்
வில்லொடிந்து போனதோ? 2

மறமழித்து அறம்வளர்த்து
மாண்பு பெற்ற தமிழர்நாம்!
மாட்சியோடு ஆட்சி செய்வோம்
மார்புயர்த்தி நில்லடா! 3

# எழுத்தாளன்

வானிடைத் தோன்றும் வண்ணமெலாம் – அவன்
மண்ணிடைச் சொல்லால் சித்திரிப்பான் !
தானே தன்னை யாண்டிடுவான் ! – பிறர்
தன்னை யாள வெருண்டிடுவான் ! 1

காற்று நுழையா விடந்தனிலும் – அவன்
கருத்தை யோட்டிக் கதைசொல்வான் !
கூற்றுவ னேவந் தெதிர்த்திடினும் – கொண்ட
கொள்கை வழுவான் எழுத்தாளன் ! 2

கல்லையும் நம்மெதிர் பேசவைப்பான் ! – வீசும்
காற்றாய் உடற்கின்பம் தந்திடுவான் !
புல்லையும் பொன்னையும் ஒன்றாக்கி – கண்முன்
புதுமை செய்வான் எழுத்தாளன் ! 3

காட்டு விலங்கவன் சுற்றமென்பான் ! – கண்
காட்சிப் பொருளவன் பாசமென்பான் !
கூட்டி லதிகாலை பாட்டிசைக்கும் – சிறு
குருவிக் குலத்திற் கடிமை என்பான் ! 4

புணர்ச்சிப் புதுஇன்பம் போலறிவில் – என்றும்
பொங்கிடத் தன்னிதயம் வடித்தே
உணர்ச்சிக் கவிச்சவுக் கால்உலகைத் – தட்டி
ஒழுங்குடன் ஊக்கும் பாகனவன் ! 5

காலை மகிழ்வோடு பாட்டிசைக்கும் – சற்றும்
கவலை இல்லாவானம் பாடியவன் !
ஓலை எடுத்துக் கவிதைபொறித் – திந்த
ஊருக் குழைக்கும் பிள்ளையாண்டான் ! 6

# கடல்

கண்டுகொண்டேன் நீலநிறக் கடலே! உன்றன்
கடுந்துயரம் வாய்விட்டுச் சொலவோ? காதல்
கொண்டவனைப் பிரிந்ததினால் வளமிழந்தாய்;
குளுமைவிழி நீர்முத்தைச் சிந்துகின்றாய்;
அண்டைவீட்டுக் காரரிடம் குறையைச் சொல்லி
ஆறுதல்கொள் வாருண்டு; பேதை! நீயோ
பண்டந்தக் கள்வனிடம் கலந்து வாழ்ந்த
பழங்காலம் நினைக்கின்றாய்! கரையென் செய்யும்? 1

கங்குலிற்சற் றயர்ந்திருந்தால் கனவில் உன்றன்
காதலனைக் கண்டிடலாம்; தூக்கம் நீங்கி
மங்குகின்றாய்; அடிக்கடிநீ எழுந்து வந்து
மணற்பரப்பில் வழிபார்த்துத் திரும்புகின்றாய்;
பொங்குகின்றாய்; புரளுகின்றாய்; எழுந்து சீறிப்
பொழுதெல்லாம் ஓயாது கலங்குகின்றாய்;
இங்குன்னை 'நாணமிலாள்' என்று பெண்கள்
இடித்துரைப்பார்; பிரிவெண்ணார்; சொன்னேன்!
சொன்னேன்!! 2

சிறுமாற்றம் நம்மிருவர் இடையே உண்டு;
தெளிவற்று நீஇன்னும் வழிபார்க்கின்றாய்;
அறுதிசெய்து விட்டேன்நான்; கலங்கேன் என்றும்;
அவள்நினைவில் இன்பத்தைக் காண்பேன்! காண்பேன்!!
உறுதிசெய்து கொள்மனத்தில்! கலங்கல் கோழை
உள்ளத்தின் பாங்காகும்! மற்றும் யாவும்
மறைந்தொழியும் மின்னலைப்போல்! ஏங்கி ஏங்கிப்
பாழாகிப் போகாதே! மனது மாற்றே! 3

# மணி

மணியதோ அடிக்குது!
மணிமொழி கேட்குது!
மகிழ்ச்சிகொண் டெழுவாய்! – தமிழ்மகனே! 1

துணிவது பெருகிடும்!
துயரினிக் கருகிடும்!
தூய நினைவுகொள் – தமிழ்மகனே! 2

தலைஉடல் கழுவிடு !
தமிழ்மறை வழிபடு!
தயக்கம் இனியேன் ? – தமிழ்மகனே ! 3

மலைநிகர் தோளினி
வளர்த்திடு பயிற்சியால் !
மாநிலச் செல்வமே – உடலுறுதி! 4

இனிமையாய்ப் பாடிடு !
இருவிழி மூடிடு!
இதயவொளி யங்குத் – தோணுதடா! 5

கனிவு சுரந்திடும்;
கருணை பிறந்திடும்;
கணகண வெனுமணி – ஓசையிலே ! 6

நாட்டினை, உயிராம்
நம்தமிழ் மொழியினை
நாளும் மனத்தில்நினை – பரிவோடு! 7

காட்டிடு செய்கையில்
கைத்தொழில் கலைபயில்!
கவலை இனிஇல்லை – உன்வாழ்வில்! 8

அச்சம் அழித்திடும்
அன்பு வளர்த்திடும்
அறிவுக்கலை கோயில் – மணியோசை ! 9

இச்சை கழித்திடும்
இருளை ஒழித்திடும்
இனிமேல் பெருஞ்சுகம்! – தமிழ்மகனே! 10

கூற்றுவன் மாய்ந்தனன்!
கொடுமைகள் சாய்ந்தன!
குலம்உயர்வு தாழ்வெலாம் – மாய்ந்ததடா! 11

வேற்றுமை அற்றது;
விடுதலை உற்றது;
வீரத் தமிழனெனும் – பொதுநோக்கால் ! 12

# எது வேண்டும் ?

மேற்றிசையில் செம்பரிதி மூழ்கும் நேரம்!
மெய்மறக்கத் தென்றலுராய்ந் தோடும் நேரம்!
ஆற்றோரம் தமிழ்ச்சுவையை உன்னி உன்னி
வண்டினம்போல் அதில்சொக்கிக் கிடந்தேன்; கண்முன்
மாற்றில்லாச் செம்பொன்னை உருக்கி வார்த்த
மழைக்கண்ணாள் இளநகையாள் வானில் வந்தாள்;
'காற்றாடு கின்றனையோ? கவிஞா! உன்னைக்
கண்டுபல நாளிருக்கும். நலமா?' என்றாள். 1

" 'தோற்றமுண்டா? பேசிடுமா?' என்பார்க் கொன்று
சொல்லிடுவேன்: ஓடைகடல் நிலவு காற்று
நாற்றமலர் புல்பூண்டு கல்லும் வானும்
நல்லநல்ல கதைசொல்லும்! கேட்பார் கேட்பர்!
ஆற்றுக்கால், உயர்நன்செய், குறையாச் செல்வம்,
அழகிளமை, பெருமதிப்பு, வான வாழ்வு,
நாற்றிசையும் உன் ஆணை கேட்டு மக்கள்
நடுங்குகின்ற தோள்வலிமை, இன்சொல் மாதர், 2

தாமரைப்பூ, நிறைவாவி, அருகில் சோலை,
தனிவீடு, குளிர்காற்று, தன்னில் ஓடி
தேமாவின் பழச்சாறு, பலாச்சுளைத் தேன்,
தெவிட்டாத தமிழ்ப்பாட்டு, நெஞ்சில் என்றும்
ஏமஞ்சேர் நாட்டியப்பெண், மானின் கூட்டம்,
எதுவேண்டும்? கேள்நொடியில் தருவேன்" என்றாள்
'பூமியில்நான் சலிக்காது கவிதை பாடிப்
புரட்சிசெய்ய வேண்டு'மென்றேன்; வாழ்த்தி னாளே! 3

# எது இன்பம்?

மலைமீது தீப்போல மேல்வா னத்தே
மறைகின்ற செம்பரிதி இன்பம்! இன்பம்!!
பலநிறத்தைப் பாய்ச்சுகின்ற செக்கர் கீழ்வான்
படர்ந்துவரும் இளஇருளும் இன்பம்! இன்பம்!!
பொலுபொலென வானத்தே சிந்தி வைத்த
பொற்றுகளாம் உடுக்கூட்டம், ஒன்றி ரண்டு
விலையில்லா ஒளிபெருக்கும் வயிரக் கற்கள்
விண்ணிடையே கண்சிமிட்டல் இன்பம்! இன்பம்!! 1

மத்தளம்போல் முழங்குகின்ற ஓடை இன்பம்!
வண்ணானின் துணிவெளுக்கும் ஓசை இன்பம்!
கத்தரிக்காய்த் தோட்டத்தே நீர்இ றைக்கும்
கனிவுதரு பாட்டின்பம்! வண்டு மொய்க்கும்
கொத்தெருக்கின் நீலமலர், ஈச்சன் தூங்கும்
குருவிசெய்த புற்கூடு, வாழை ஆடும்
தத்தைஇணை, குளிர்நீழல் குளத்தில் மேதி
தலைமூழ்கி விளையாடல் இன்பம்! இன்பம்!! 2

பூக்களிலே பறந்துவிளை யாடும் பட்டான்,
பொதுக்கென்று நீர்பாயும் தவளைக் கூட்டம்,
நோக்கையிலே தலையிழுக்கும் நீர்வாழ் பாம்பு,
நொய்மணலின் மினுமினுப்பு, தென்றற் காற்று,
சாக்காட்டிற் கஞ்சாத வீரன் போலத்
தலைநிமிர்த்தி நடந்துவரும் காளை மாடு,
வாக்கினிமை காட்டுகின்ற குயிலும் மண்ணில்
வற்றாத இன்பமடா இன்ப மாமே! 3

# சேரிக் கடை

வரப்புப் பாட்டை நெளிந்து சேரி
வழியைக் காட்டிக் கிடந்தது !
மரத்து நிழலில் நின்றேன் ; சிறுவன்
மண்ணைக் கும்ப லாக்கினான். 1

இலையும், காம்பும், கல்லும் தேடி
எடுத்து வைத்தான்; அடுக்கினான்;
விலையைக் கூறி அரிசி என்று
வெள்ளை மணலை அளந்தனன்! 2

இலையும், காம்பும், மரக்கறி இதோ
இலாபம் வேண்டாம் என்றனன்!
கலையின் அழகு சிறுவர் கட்டும்
கந்தல் இன்றிச் சூழ்ந்தனர்! 3

சுருட்டை கூந்தல் கறுத்த சிறுமி
சொக்கி பொருளின் விலைபேசி
உருவ மில்லா ஓட்டுக் காசை
ஒன்றி ரண்டாய் எண்ணினாள் ! 4

'நேர மாச்சு ஆண்டை பார்த்திந்
நேர மா?' என் றதட்டுவார்!
'தாரும் பொருளை' என்று கூறித்
தலைமு றுக்கி நின்றனள் ! 5

சேரிக் கடையின் ஆட்டத் திடையும்
சிறுவர் கூட்டம் ஆண்டையின்
பேரைக் கேட்டுக் கருகி வாடிப்
பேச்சு மூச்சு அற்றதே! 6

ஆண்டை பண்ணை ஆட்கள் என்னும்
அச்சம் நீங்கு நாளினில்
ஈண்டு வறுமை அடிமை மாயும்!
மக்கள் வாழ்வு இன்பமே! 7

# பிறந்த ஊர் திரும்பல்

பிறந்த வூரை நினைக்க நினைக்கப்
பீறிட் டெழுகு தின்பம்!
மறைந்த நினைவோ வான முகிலில்
மறைந்தொளிர் முழுமதியாம் ! 1

நெஞ்சின் விரைவு அடடா! என்றன்
நினைவை மீறிப் பாயும்!
கொஞ்சும் குழவி முகம்போல், பிறந்த
குடிசைமறப் பாரில்லை ! 2

வளைந்த பாம்புப் பாட்டை இல்லை ;
வரிசை மரங்கள் நிழற்றக்
களைசேர் அகன்ற பாட்டை அங்குக்
கண்டேன்; இன்பம் கொண்டேன் ! 3

கப்பிக் கற்கள் என்னைப் பார்த்துக்
'காலம்போல் எப்பொருளும்
இப்பு வியினில் மாறல் பழ்மை
ஏன்விழிப்போ?' என்னும் ! 4

ஊரில் நுழையக் கண்கள் யாவும்
உற்றுஉற்றுப் பார்த்து
'யாரை யாநீர்?' என்று கேட்கும் !
யாதுரைப்பேன் பதில்நான் ? 5

ஒருவர் இருவர் சாயல் கண்டு
'ஊரிலிருந் தின்று
வருகி றார்ப்போல் இருக்கு' தென்றார்;
மகிழ்ச்சியில் தலையசைத்தேன்! 6

சின்னஞ் சிறுவர் உருவம் இன்று
சித்திரத்தின் எழிலாம்!
என்னைப் பெற்றார் சுற்றம் நேசர்
எனக்குத் தந்தார் திகைப்பை! 7

புதுமை காணக் கும்பல் கூடும்
பொடியர் களைப்போல
எதிரில் வாழ்நர், அண்டை வீட்டார்
என்னைக்கா ணச்சூழ்ந்தார்! 8

அடுக்க டுக்காய்க் கேள்வி கேட்டே
அரித்தெடுத்தார் என்னை!
விடையிறுத்தேன்; வாய்பிளந்தே
'விந்தை! விந்தை!' என்றார்! 9

கரம்பு வெளியில் பசுமை கண்டேன்!
காளை இன்று கிழவன்!
மரம டர்ந்த தோப்புக் குடிசை
வானைத் தாவுமாடம் 10

ஓடி யாடிக் குதித்த இடத்தின்
உணர்வு ஊறிற் றென்னில்!
ஓடி யாடிக் குதிக்க இன்று
ஒப்புவரோ நாட்டார்? 11

இருபஃ தாண்டு முன்னர் நாங்கள்
இணைந்து சென்று காதல்
பெருகப் பேசி நின்ற ஓடை
பேசு தின்னும் என்முன்! 12

இன்ப வெறியில் சலச லத்தே
இன்னும் பாயு தோடை !
இன்று தனித்துப் பெருமூச் செறிந்தே
ஏங்கு கின்றேன் நானே ! 13

மாறி மாறி அழகு பெற்று
வாழு தொவ்வோர் பொருளும் !
மாறி எனது மனது ஏனோ
மறக்கு தில்லை அவளை ! 14

ஒவ்வோர் பொருளும் ஒவ்வோர் இடமும்
உரைக்கு தொவ்வோர் நிகழ்ச்சி!
அவ்வப் பொருள்கள் ஊட்டும் இன்பம்
அளிக்க வல்லார் யாரே ? 15

# வெட்கி நடந்தேன்

வெளித்தாழ் இட்டு விளக்கை யணைத்துப்
படுத்தேன்; என்மனம் படுக்க வில்லை!
குளக்கரை நோக்கிக் குறுக்கு வழியாக
வந்தேன்; பூத்த மாமரம் என்னைச்
'சச்சர வொன்றைச் சற்றுக்கேள்' என்றது.

மேடை மீது மிடுக்காய் இருந்த
அரசும் வேம்பும் என்னிடம் நெருங்கி,
"மக்கள் எங்களை வணங்குதல் கண்டு
பொருமை கொண்டு பூத்த மாமரம்
வம்புக்கு நின்றது; முறையோ?" என்றன.

"மரத்தை வணங்கும் மக்கட் பிறப்பின்
வழிவந் தோயே! வழிவந் தோயே!
உயர்வும் தாழ்வும் ஒவ்வா வணக்கமும்
உண்டென் றொப்புவீர்! நானொப்ப மாட்டேன்!
கசக்கும் வேம்பும்' காசுக் குதவா

"அரசும் மக்கள் அடுதுயர் நீக்குமோ?
வேண்டும் பேற்றை விரைவில் அளிக்க
யாண்டிவை கற்றன? யாதுசெய் வல்லன?
அறிவோ இச்செயல்?" என்றது மாமரம்!
மறுமொழி கூற வழியிலை;
வெட்கி நடந்தேன்; மிகநொந் தேனே!!

# எரிச்சல்

வேலையில் செல்லவில்லை; – மனது
வேறெங்கும் செல்லவில்லை;
காலைப் பனிபோல – மனத்தைக்
கவிந்தெதோ வாட்டுதடா! 1

நூலை எடுத்தவுடன் – கண்கள்
நோக்கும்; சலிப்படையும்!
சாலை நடந்தாலும் – மனது
தாவுதில்லை யழகில்! 2

இன்னிசை கேட்டாலும் – மனத்தில்
இன்பம் எழும்பவில்லை!
புன்னகை வேல்விழியும் – மனத்தின்
புண்ணைக் கிளறுதடா! 3

ஓடை குடைவமென்றால் – மனத்தில்
ஊக்கம் குறையுதடா!
ஆடை அணிவமென்றால் – மனத்தில்
ஆசை பிறக்குதில்லை! 4

மந்தார வானத்தைப்போல் – மனது
மங்கிக் கவலுதடா!
சிந்தனைக் கெட்டாத – துயரம்
தேங்கிக் கருக்குதடா! 5

தாவும் குழவிக் கையை - சீச்சீ
தட்டிக் கழிக்கு துள்ளம்!
நாவில் சுவைகாணேன் - எந்த
நல்லமு துண்டிடினும்!

சின்னஞ் சிறுமயக்கம் - மனத்தைத்
தின்னும் சிலநேரம்!
என்ன நினைத்தாலும் - அடிக்கடி
'இச்'சென் றிதழ்திறக்கும்!

நீடித் திருப்பதில்லை - இத்துயர்
நெஞ்சில் பலகாலம்!
கோடைவான் மின்னலென - ஒருநாள்
தோன்றும்; மறைந்துவிடும்!

காதலால் நேர்ந்ததில்லை; - வறுமைக்
கானலால் நேர்ந்ததில்லை;
ஏதென எண்ணியெண்ணி - இதன்பெயர்
'எரிச்சல்' என்றனரே!

# ஏக்கம்

புன்னையின் வேரைத் தாவிப்
புரண்டிடும் அலைகள்; காய்த்த
தென்னையில் பெட்டை நாரை
தொடுவானத் திசையை நோக்கித்
தன்றலை நீட்டும்; சற்றுத்
தடங்கடல் பரந்து பார்க்கும்;
சென்றதன் இன்பச் சேவல்
வழியினைப் பார்க்கும்; ஏங்கும்! 1

தாழையின் அருகில் பூத்த
கழிநீலம் தன்னைக் காலை
வாழவைத் தகன்ற வண்டின்
கொடுமையை எண்ணும்; ஏங்கும்!
ஏழ்மையின் விளக்கம் சிற்றூர்
எழில்மிகு சிறுவர் கூட்டம்
சூழ்ந்தலை வண்டற் பாவை
துடைத்திடத் துடிக்கும்; ஏங்கும்! 2

அலையிலா நடுக்கடல்மேல்
ஆளனின் உருவை ஓடிச்
சிலைவிழி தேடும்; ஏதோ
செப்பிடும் இதழ்கள்; கஞ்சிக்
கலத்தினை இறக்கும் கைகள்;
கால்விரல் மண்ணைக் கிண்டும்;
அலையலை யாகத் துன்பம்
அரித்திட மனைவி ஏங்கும்! 3

தாழ்வினை நீக்கி நாளும்
தன்குடி பாது காத்த
ஆழ்கடல் நோக்கிச் சென்ற
ஆளனோ பறிநி ரம்பா
ஏழ்மையை எண்ணி எண்ணிக்
குடிசையை நோக்கும்; ஏங்கும்!
தாழ்ந்திடும் பரிதி கண்டு
தவித்திடும்; ஏங்கும்; அந்தோ! 4

தாழையின் மலரைக் கொய்ய
முட்புதர் தாண்ட வேண்டும்;
கோழையாய் இருந்தால் என்றும்
குறைதீர வழியே இல்லை;
ஏழைகாள்! உங்கட் கொன்றே
இயம்புவன்: உணர்வு பெற்றால்
சூழ்ந்திடும் உயர்வு தாழ்வு!
வறுமையும் தொலைந்து போமே!! 5

# சூறுவளி

மான மிழந்துலகில் வீழாது வாழ்கின்ற
ஈன மனிதரைக்கண் டேறுசினம் — ஞானஞ்சேர்
சூறு வளியாகிச் சோர்வின்றி மூடமனம்
பாறை யுடைக்கவந்தாள் பார். 1

சாதி பலவகுத்துச் சச்சரவு நாள்பெருக்கி
நீதியற்று வாழும் நிலைதன்னை — மேதினியில்
சூறு வளியாகிச் சுட்டெரிப்பாள் இன்றுலகை
வேறுலகம் செய்வாள் விரைந்து. 2

மூடப் பழக்கத்தில் மூழ்கிப் பலநாளாய்
ஓடும் சருகானோம் உண்மையிது — கேடுதவிர்
சூறு வளிநமக்குச் சொக்கும் புதுஉலகம்
ஏறவழி செய்வா ளினி. 3

அச்சப் படாதிருமின் அல்லற் படுமுலகீர்!
எச்சமும் போற்ற எழுந்திட்டாள் — மெச்சும்
தமிழணங்கு சூறு வளியாகி நின்றே
அமிழ்தளிப்பாள் வாழி யவள். 4

நாடு நலங்கொழிக்க நந்தமிழர் சீர்திருந்தக்
கூடும் வகைபலவும் கூட்டிடுநம் — ஈடில்லாச்
சூறு வளிவாழ்க சூதெல்லாம் தீய்த்துவான்
ஏறும் பரிதியாய் ஈண்டு. 5

# கொடிது! கொடிது!

கொடிது! கொடிது! கூற்றம் கொடிது!
கொடிதாம் அதனினும் அடுபசித் துன்பம்!
கொடிதே அதனினும் குணமிலாப் பெண்டிர்!
கொடிதே அதனினும் குடிசெயா மக்கள்!
அதனினும் கொடிதே அன்பிலாச் சுற்றம்!

அதனினும் கொடிதே அடிமையில் வாழ்தல்!
அதனினும் கொடிதே மனத்தில் அச்சம்!
அதனினும் கொடிதே அழுக்கா றுள்ளம்!
அதனினும் கொடிதே அறிவிலார் கேண்மை!
கொடிதே அதனினும் குறுமனப் பான்மை!

மானம் இழந்து மண்ணில் வாழ்தல்
அதனினும் கொடிதே அம்ம! அதனினும்
கொடிது பழந்தமிழ் நெடுமை மறத்தல்!
அதனினுங் கொடிதே அஞ்சா தென்றும்
தமிழ்சேர் கலப்பைத் தாக்கா திருத்தல்!

அதனினும் அன்ப நும்முடன்
கூடிப் பிரிதல் கொடிது! கொடிதே!!

# வணக்கம்

வணக்கம் ! வணக்கம் !! வணக்கம் !!! — எங்கள்
வளமார் திராவிடமே ! மக்கள்
உளமார் திராவிடமே ! 1

குணகடல் விந்தியம் குமரி எல்லையாய்ச்
சூழ்ந்த திராவிடமே ! தூயவர்
வாழ்ந்த திராவிடமே ! 2

அலைகடல் தாண்டி மிளகும் முத்தும்
அளித்த திராவிடமே ! இன்பத்தில்
திளைத்த திராவிடமே ! 3

கலைபல வளர்த்துக் கைத்தொழில் நிறைத்துக்
காத்த திராவிடமே ! பசிப்பிணி
நீத்த திராவிடமே ! 4

வடமலை நிரித்து மணிமுடி நெறித்து
வாழ்ந்த திராவிடமே ! புலவரை
ஈந்த திராவிடமே ! 5

உடல்வேல் பறித்துப் பகைவரைத் தாக்கி
உயர்ந்த திராவிடமே ! மானத்தில்
சிறந்த திராவிடமே ! 6